விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 08 செவ்வாய்க்கிழமை (23.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 186

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# சுதந்திரக் கட்சியை பாதுகாக்கவே 20 ஆவது திருத்தம் அறிமுகம்!

## சந்தேகத்தை வெளியிட்டார் அமைச்சர் ஹக்கீம்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருக்கும் உள் முரண்பாடுகளுக்கு தீர்வாகத்தான் புதிய 20 ஆவது தேர்தல் சீர்திருத்தத்தை அரசு அறிமுகம் செய்கின்றதா? என சந்தேகிக்க வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ள நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம், எப்படி ஆட்சி மாற்றத்தை கொண்டு வருவதற்கு சிறுபான்மை கட்சிகளாகிய நாங்கள் ஒன்றிணைந்தோமோ, அதேபோல நாங்களே கொண்டுவந்த அரசாங்கம் எங்களைக் காலைவாரி விடாமல் பாதுகாக்கும் போராட்டத்தில் ஒற்றுமையாக இருந்து போராடி வெற்றி பெறவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பொய் கூறுகிறார் மகிந்த - ருவான்

(கொழும்பு)

ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விகாரை களுக்கு சென்று மலர் பூஜை செய்து புண்ணியம் தேடுவதற்கு பதிலாக, நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தில் இருக்கின்றது போன்ற பாரிய பொயகளைகூறி, நாட்டை தவறாக வழி நடத்துகிறார் என பாதுகாப்பு அமைச்சர் இரா ஜாங்க ருவான் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர்களுடனான சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

குடும்ப ஆட்சியை தோறகடித்த நாட்டு மக்களுக்கு தலைத்தூக்கி வரும்

24 ஆம் பக்கம் பார்க்க....

## பாடசாலை நேரத்தில் சீருடையில்
## தேவையற்ற விதத்தில் நடமாடும் மாணவர்கள் உடன் கைதாவர்

(யாழ்ப்பாணம்)

தேவையற்ற விதத்தில் பாடசாலை சீருடையுடன் மாணவர்கள் வெளியில் திரிந்தால் உடனடியாக கைது செய்யப்பட்டு 14 நாட்களோ அதற்கு அதிகமாகவோ விளக்கமறியலில் வைக்கப்படுவர் என யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொலிஸாருக்கும் இடையில் விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது. அதன் போதே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கால சமூகமாக இருப்பவர்கள் இன்றைய மாணவர்கள். அவர்களது எதிர்காலம் சிறப்பதற்கு என்ன சேவையை வேண்டுமானாலும் செய்வதற்கு பொலிஸாராகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எனவே மாணவர்களாகிய நீங்கள் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். உங்களுடைய செயற்பாடுகள் மோசமான முறையில் இடம்பெற்றால் கைது செயது சட்டத்தின் முன்நிறுத்தவும் தயங்க மாட்டோம்.

24 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதித் தேர்தலின்போது அன்னப்பறவை வேஷத்தில் புலி!
## உதய கம்மன்பில சாடல்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அன்னப் பறவை வேஷத்தில் முன் நிறுத்தப்பட்டது புலி எனவும் தற்போது அன்னப்பறவையின் சிறகுகள் ஒவ்வொன்றாக கழன்று புலி வெளியில் தெரிய ஆரம்பித்துள்ளதாகவும் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாராஹென்பிட்டி அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். மேற்படி விடயம் தொடர்பில் மக்கள் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கான காலம் வந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உண்மையான சுயரூபம் தற்போது வெளியே தெரியத் தொடங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விகாரைகளில் அரசிய லில் ஈடுபடுவதற்கு எதிராக வீதியின் எதிர்ப்பு என்ற அமைப்பு எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது.

இந்த அமைப்புக்கு நோர்வே மற்றும் கனேடிய தூதரகங்களில் இருந்தே நிதி கிடைக்கின்றது எனவும் உதய கம்மன்பில கூறியுள்ளார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்

24 ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியை ஜனாதிபதியாக்கியது முட்டாள்தனமான செயல் - ஹரின்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட செய்து வெற்றிபெறச் செய்தமை முட்டாள்தனமான செயல் என்பது தற்போது உறுதியாகி வருவதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இளைஞர்,

24 ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளுடன் தொடர்புபட்டுள்ள அரசாங்கம் சர்வதேச விசாரணைக்கு அனுமதியளிக்கும்

### தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் என்கிறார் நிமல்

(கொழும்பு)

எமது ஆட்சிக்காலத்தில் பலப்படுத்திய தேசிய பாதுகாப்பை இந்த அரசாங்கம் கேள்விக்குறியாக்கி விட்டது.

சர்வதேச மட்டத்தில் இயங்கி வரும் புலிகளுடன் அரசாங்கம் தொடர்புபட்டுள்ளது என்று எதிர்க் கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா குற்றம் சாட்டினார். போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கும் இந்த அரசாங்கம் அனுமதி வழங்கும், ஆடசி மாற்றதின் நோக்கமும் அதுவே எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் செயற்படுவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தீவிரவாத முறியடிப்பு பிரிவு தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் இலங்கையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதே தவிர அவர்களை முழுமையாக அழிக்க

02 ஆம் பக்கம் பார்க்க....

**நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன்...

வில்லை. இவர்களின் செயற்பாடுகள் இன்று சர்வதேச அளவில் நடைபெற்று வருகின்றன. மேற்கு உலக நாடுகளின் விடுதலைப் புலிகளின் அமைப்புகளும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் ஒன்றிணைத்து செயற்படுகின்றன.

இது எமக்கும் நன்றாகவே தெரியும். இவர்களால் எமது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எந்த நேரத்திலும் அச்சுறுத்தல் உள்ளது. இன்று புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்த நாடுகளே அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சிக்க ஆரம்பித்து விட்டன. அமெரிக்கா, கனடா. பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் புலிகளின் பலமான தொரு வலையமைப்பு இயங்கி வருகின்றது. ஆனால் அந்த நாடுகளுக்கே இது அச்சுறுத்தலான விடயமாக மாறிவிட்டது.

அதேபோல் கடந்த காலத்தில் எமது ஆட்சியில் புலிகளை தலைதூக்க அனுமதிக்கவில்லை. யுத்தத்துக்கு பின்னரும் வடக்கில் புலிகளை நினைவுகூரும் வகையில் ஒரு சில செயற்பாடுகள் நடக்கவிருந்த போதிலும் எமது அரசாங்கம் அவற்றை தடுத்து நிறுத்தியது. புலம்பெயர் அமைப்புகள் இலங்கையை ஆக்கிரமிக்க நினைத்த போதிலும் நாம் கவனமாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

ஆனால் இந்த அரசாங்கம் வடக்கில் விடுதலைப்புலிகளின் அனுஷ்டிப்பு நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. வடக்கில் மாவீரர் தினம், முள்ளிவாய்க்காலில் புலிகளை நினைவு கூர அனுமதித்துள்ளனர். இவை அனைத்தும் சர்வதேச புலிகள் அமைப்பின் தூண்டுதலில் தான் இடம்பெறுகின்றது.

மேலும் சர்வதேச புலிகள் அமைப்புகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து லண்டனில் மாநாடு நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட ஒரு சிலரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். ஆகவே இந்த அரசாங்கம் சர்வதேச அமைப்புகளின் வழிநடத்தலுக்கு அமைய செயற்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் நாம் நாட்டில் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தோம். புலம்பெயர் அமைப்புகளின் எந்தவொரு செயற்பாட்டுக்கும் நாம் இலங்கையில் அனுமதி வழங்கவில்லை. ஆனால் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களில் நாட்டுக்கு அச்சுறுத்தலான பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது என நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (செ-11)

# சுதந்திரக் கட்சியை....

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தை கொண்டு வருவதில் சிறுபான்மை கட்சிகள் பெரும் பங்களிப்பை செய்திருந்தன. நாடு பூராகவும் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி மாற்றத்தின் சுமையில் மிகப்பெரும் பங்கை சுமந்திருந்தார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற பிரதான கட்சிகள் சிறுபான்மை மக்கள் சார்பில் எங்களுடைய பங்களிப்பை இந்த ஆட்சி மாற்றத்தில் செய்துள்ளோம்.

ஆட்சிமாற்றத்தின் அனுகூலங்களை அடைந்து கொள்ள தற்போது பாராளுமன்றத்தில் உள்ள ஆசன சமன்பாடு பெரும் சிக்கலாக உள்ளது.

ஆனால் இந்த நல்லாட்சியை கொண்டு வருவதற்கு யாப்பு மாற்றத்திற்கு நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளில் பத்தொன்பதாவது திருத்த சட்டத்தை நாங்கள் ஒருவாறு பல பிரச்சனைகளுக்கு மத்தியில் நிறைவேற்றி இருக்கிறோம். எமக்கு அதில் பூரண திருப்தி இல்லாமையாலும் நாம் குறிப்பிட்டவற்றுள் அதில் இல்லாமையாக இருந்தாலும் இதை யாவது செய்து முடிக்கும் நிலைக்கு வந்தோம்.

(23ஆம் பக்கம் பார்க்க)


## துயர் பகிர்கின்றோம்

திருமதி
**பாக்கியநாதன் அந்தோனியம்மா**



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி **அகிலா அன்ரனி சகாயராஜ்**
அவர்களின் அன்பு மாமியார்
பாக்கியநாதன் அந்தோனியம்மா
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(920)

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்**
**யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், யாழ்ப்பாணம்.**

## மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி



எமது வித்தியாலயத்தின்
சங்கீத பாட ஆசிரியர் திருமதி
றஜிதா சுந்தரகுமார் அவர்களது
அன்பு மாமனார்
**சந்திரசேகரம்**
**சிவப்பிரகாசம்**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்கேற்பதோடு
அன்னாரின் ஆத்மா இறைவன்
பாதத்தில் இளைப்பாற வேண்டிப்
பிரார்த்தனை செய்கின்றோம்.

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
2015-06-23

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 25.05.2015 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கிருஸ்ணசாமி தம்பிராசா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 24.06.2015 புதன்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின் ஊறணி தீர்த்த சமுத்திரத்தில் அஸ்தி சேர்க்கப்படும். அதனைத் தொடந்து முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அத்தோடு வெளிநாடு, உள்நாடுகளில் இருந்து தொலைபேசி மூலமும்,நேரடியாகவும் வந்து ஆறுதல் வார்த்தைகள் கூறியோருக்கும், சரீர உதவி செய்த பொதுமக்களும் எமது நன்றிகள்.

**ஆதிகோவிலடி,**
**வல்வெட்டித்துறை.**
**0778636134, 0775010423**

**இங்ஙனம்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(925)

## பகிரங்க ஏலம்
### யாழ்.மாநகர சபை

யாழ்.மாநகர சபையின் கழிவகற்றல் பிரதேசமான கல்லுண்டாய் வெளியில் தரம் பிரிக்கப்பட்ட உக்கக்கூடிய பசளைகள் மற்றும் காக்கைதீவு பகுதியில் இருந்து பெறப்படும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்கள் பகிரங்க ஏலம் மூலம் கீழ் குறிப்பிட்ட திகதியில் இடம்பெறும் என்பதனை அறியத் தருகின்றேன்.

காலம்: 03.07.2015 வெள்ளிக்கிழமை
மாலை 3.00 மணி
இடம்: நானாவித இறைவரிப் பகுதி, மாநகர சபை
1 உழவு இயந்திர பசளை (1 lord)= 250.00
(VAT நீங்கலாக)
1 Kg பொலித்தீன், பிளாஸ்ரிக் = 10.00
(VAT நீங்கலாக)

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(சி-1352)

## உடன் விற்பனைக்கு

கட்டிட இடிபாடுகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0773754040**

(925)

## விற்பனையாளர் தேவை

எமது பிடவை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள ஆண்/ பெண் விற்பனையாளர் தேவை. (ஆண்களுக்குதங்குமிட வசதி உண்டு)
**சிவகணேசன் ரெக்ஸ்ரையில்**
பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

(930)

## மரண அறிவித்தல்

### சந்திரசேகரம் சிவப்பிரகாசம்
(ஓய்வுபெற்ற அதிபர்)



தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவை வசிப்பிடமாகவும், தற்போது ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய சந்திரசேகரம் சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற அதிபர்) நேற்று (2015.06.22) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் தும்பளையைச் சேர்ந்த அமரர்கள் சந்திரசேகரம்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அருமைப் புதல்வரும், மண்டைதீவைச் சேர்ந்த அமரர்கள் சுப்பிரமணியம் - நாகபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் பரஞ்சோதியின் (அருந்ததி ரீச்சர்) அன்புத் துணைவரும், அமரர் சின்னத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவஞானம், அமரர் திருமதி மாணிக்கம் சந்திரசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தயாநிதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), உதயகுமாரன் (ஓய்வுபெற்ற புள்ளிவிபரவியலாளர்), காலஞ்சென்ற சிவகுமாரன் (பொறியியலாளர்), அருள்குமரன், சுந்தரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.சிவகாமி உதயகுமாரன், யாழினிதேவி அருள்குமரன், ரஜீதா சுந்தரகுமார் (ஆசிரியர்-யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும், அருளினி, சிவகுமாரதாஸ், தனுஷன், பரமஹம்ஷன், பவித்திரா, ஈசானன், சாம்பவி, கயானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10 மணியளவில் யாழ்.வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0771547025

தகவல்:-
குடும்பத்தினர்.

(இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பாதுகாப்புக்கான ஒதுக்கீடு ஆசிய வல்லரசு நாடுகளையும் விட அதிகம்

2014 ஆம் ஆண்டு நிலவரப்படி, இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதம், பாதுகாப்புக்காக செலவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையில் இறுதிக்கட்ட போர் முடிவுக்கு வந்த பின்னரும், பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் நிதி, ஒப்பீட்டளவில் இந்தியா, சீனா போன்ற நாடுகளை விடவும் அதிகம் என தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய நாடுகளில் பூட்டான் மொத்த தேசிய உற்பத்தியில் 9 சதவீதத்தையும், பாதுகாப்புக்காக ஒதுக்கீடு செய்துள்ளது. அதையடுத்து பாகிஸ்தான் மொத்த தேசிய உற்பத்தியில் 8 சதவீதத்தை பாதுகாப்புக்காக ஒதுக்கியிருந்தது.

எனினும், ஆசியாவின் வல்லரசு நாடுகளான சீனாவும் இந்தியாவும் மொத்த தேசிய உற்பத்தியில் 5 சதவீதத்தையே கடந்த ஆண்டு பாதுகாப்புக்காக செலவிட்டுள்ளன.

அதேவேளை பங்களாதேசும், நேபாளமும், தமது மொத்த தேசிய உற்பத்தியில், 3 சதவீதத்தை பாதுகாப்புக்கு ஒதுக்கியிருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)


## தேவை

**Driving**

இலங்கையில் பிரசித்தி பெற்ற வியாபார ஸ்தாபனங்களுக்கும் மற்றும் துறைமுக/விமான நிலையங்களுக்கும் மென்ரக/கனரக சாரதிகள். சாரதி உதவியாட்கள் உடனடியாகத் தேவை.

18-55 (45,000/--50,000) தங்குமிடம், உணவு செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு கொள்ள அழையுங்கள்:-**

**0771638637** (790)

## தேவை

**Airport**

கல்வித் தகைமையுள்ள/ அற்ற, பயிற்சியுடைய/ அற்ற 18-50 வயதிற்கிடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாருக்கும் துறைமுகம்/ விமான நிலையங்களில் வேலை.

**தொடர்பு கொள்ள அழையுங்கள்:-0777726925** (790)

## தேவை

**Production**

பிரபல்யமான தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாட்கள் 18-55 வயதிற்கிடைப்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தேவை. 35,000/- -45,000/- உயர்ந்த சம்பளத்துடன் தங்குமிடம், உணவு செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு கொள்ள இப்போதே அழையுங்கள்:-**

**0776445245** (790)


# மரண அறிவித்தல்



## சின்னையா கனகராசா

## (வாணி உணவக உரிமையாளர்)

விசுவமடுவைச் சேர்ந்த சின்னையா கனகராசா நேற்று 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், அரவிந்தன் (வாணி ரவல்ஸ்), காலஞ் சென்றவர்களான முகுந்தன், வசிகரன், மற்றும் சுகந்தன் (வாணி உணவகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீதேவி, சுதீஸ், வித்தியாங்கனி ஆகியோரின் மாமனாரும், சரவணராஜா, கிருத்திகா, சயிதா, சஞ்சிகா, சயன், திவ்யனன், சுருதி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியை இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12-ம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**76/1, விசுவமடு மேற்கு, விசுவமடு. தகவல் : குடும்பத்தினர்**

(சி-1351)

# ராசி பலன்

23.06.2015

(ஆனி 08, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

சப்தமி பின்னிரவு 3.09 மணிவரை

பூரம் பிற்பகல் 4.43 மணிவரை

இராகுகாலம் 2.54-4.24 மணிவரை

சுபநேரம் 10.24-11.54 மணிவரை

இரவு நடேசரபிஷேகம்,

சித்தாமிர்தம் வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | புதன் | சூரி செவ் |
| | இன்றைய கிரகநிலை இரவு 11.38 சனி-சந் | | குரு சுக் |
| | | | சந் |
| | | சனி | ராகு |

**மீனம்:** ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்

**மேடம்:** அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** ரோக பயமுண்டு, நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** மனோ தைரியம் கூடும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன நன்மையுண்டு.

**கும்பம்:** எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** விரயங்கள் கூடும் நாள், மனோ சங்கடங்கள் அதிகரிக்கும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம், ரோக நிலையுண்டு.

**மகரம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், தேகநலனில் உற்சாகம் குறையும், புதிய முயற்சிகளை ஆரம்பிக்கும் போது யோசித்து செய்வது நல்லது, வீண் பயமுண்டு.

**சிம்மம்:** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயனசுகமுண்டு, மாதர் நட்புண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசனசுகமுண்டு.

**தனுசு:** எதிர்பாராத செலவுகள் இடம் பெறலாம், சிலருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், இஷ்ட சித்தியுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, [illegible]

**துலாம்:** குடும்பத்தில் உறவினர்களின் வருகையால் குதூகலம் கூடும் தனதானிய சேர்க்கையுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் [illegible]. போசன சுகமுண்டு.

**கன்னி:** பிறருக்கு உதவி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 223

# பொறாமையிலிருந்து விடுதலை!

...மனிதனிடமும் இதேதான் நடக்கிறது. மனிதனைச்சுற்றியிருக்கும் கயிறு அல்லது வேலியானது அவனுடைய விழிப்புணர்வைப் பொறுத்தே அமைகிறது. அவனுடைய விழிப்பு அதிகரிக்க, அதிகரிக்க அவன் அதிக சுதந்திரத்தை அனுபவிக்கின்றான்; மேலும் அவனது விழிப்புணர்வு அதிகரிக்கின்றது.

பாருங்கள், அது உங்களுடைய சக்தி உருமாற்றமடைய அனுமதிப்பதற்கு எவ்வளவு விருப்பமாயிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது இந்த ஒரு வழியில் தான் அது நிகழமுடியும்.

ஆனால் அது நிகழும் பொழுது, சமூகம் நீங்கள் விலகிச் செல்வதாகச் சொல்லும். அது நீங்கள் சரியான பாதையிலிருந்து விலகிச் செல்வதாக சொல்லும். பிறகு குழப்பம் ஆரம்பமாகும். அப்பொழுது நீங்கள் தைரியத்துடனும், உங்கள் மீதும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் மீதும் விசுவாசத்துடனும், மேலே செல்ல வேண்டும்.

இங்கு தான் எந்த ஒர புத்தகத்தையும் அல்லது பிரசங்கத்தைம் விட மேலாக ஒரு குருவால், ஒரு யோக தண்டம் (சிறு ஊன்றுகோல்) போல நீங்களாகவே எழுந்து நிற்க உதவ முடியும். ஒவ்வொரு முறையும், உங்கள் ஆன்மீகப் பாதையில், நீங்கள் சமூகத்தால் தாக்கப்படுவதாக உணரும் போதும் நீங்கள் பெரும்பாலான மக்களுக்கு எதிராக இருப்பதாக உணரும் போதும், குருநாதர் தன் சொந்த வழியில் உங்களை மேலே தூக்கி, தொடர்ந்து செல்லச் சொல்வார்.

பலவீனமான தருணங்களில் தூண்டிவிடப்பட வேண்டும். நீங்கள் மீண்டும் உங்கள் தலையை தூக்கி நடக்கும் வரையிலும் குருநாதரே தூண்டு கோலாகவும் ஊன்றுகோலாகவும் இருக்கிறார். நீங்கள் திணறும் ஒவ்வொரு கணமும், அந்தக்கோல் உதவுவதற்காக வெளிப்படுகின்றது.

குருநாதரின் துணையுடன், உங்களால் தனிமனிதனாக, சுதந்திரமாக மனிதனாக, உங்களது தனித்துவத்தைக் கண்டுணர்ந்து, எழுந்து நிற்க முடியும்.



அதன் பொருள் நீங்கள் குருநாதரைச் சார்ந்திருக்கிறீர்கள் என்பதல்ல, கண்டிப்பாக அல்ல. இது இன்னொரு பொதுவான தவறான அபிப்பிராயம். மக்கள், நீங்கள் வாழ்க்கைக்கு இன்னொரு மனிதரைச் சார்ந்திருக்கிறீர்கள் என்று நினைக்கின்றனர்.

அது இவ்வாறு இருக்கின்றது... நீங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும் வழியைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறீர்கள். நீங்களாகவே கண்டு பிடிப்பதாக இருந்தால், நீங்கள் பல இடங்களில் வழிகேட்பீர்கள். சில சமயம் தறாக வழிகாட்டப்பட்டு, மீண்டும் சென்ற வழியே திரும்பவும் நேரலாம். இவ்வாறு எப்படியோ உங்கள் இலக்கை அடைந்த விடுவீர்கள். நீங்கள் அடைந்து விடுவீர்கள் என்றாலும், அதிக நேரம் எடுத்துக் கொள்ளக்கூடும். ஆனால் உங்களிடம் ஒரு வரைபடமோ, ஒரு வழிகாட்டியோ இருந்தால், எப்படியிக்கும்? நீங்கள் நேரவிரயமில்லாமல் நேராக உங்கள் இலக்கை அடைந்து விடலாம் இல்லையா? அதன் பொருள் நீங்கள் வரைபடத்தையோ அல்லது வழிகாட்டியையோ சார்ந்து இருக்கிறீர்கள் என்பதா?

இல்லை. அது காரியத்தை விரைவாக செய்யும் ஒரேவழி, அவ்வளவே. அதே போன்று, குருநாதரும் ஒரு வழி காட்டிதான்; அவருக்க வழி தெரியும்; அவர் நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் இடத்திற்கு ஏற்கனவே சென்றிருக்கின்றார். உங்களுக்கு அங்கே செல்வதற்கு வழி காட்டவும் தயாராக இருக்கிறார்.

உங்களுக்கு அர்ப்பணிப்பு மட்டும் இருந்தால், நீங்கள் இலக்கை அடைய கடினமாக உழைப்பீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை: ஆனால் உங்களிடம் அர்ப்பணிப்புடன் தைரியமும் இருந்தால் இலக்கை வேகமாக அடைந்து விடுவீர்கள். இந்த தைரியம் நீங்கள் மற்றவர்களை பார்ப்பதை நிறுத்தி உங்களை மட்டுமே பார்க்கும் பொழுது, உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுக் கொள்வதை நிறுத்தி உங்களையே விழிப்புணர்வுடன் கவனிக்கும் பொழுது, உங்களுடைய அமைப்பில் நிகழும் நுட்பமான மாற்றங்களை கவனிக்கம் பொழுது மட்டுமே வரும்.


நீங்கள் உங்கள் பாதையில் திட நம்பிக்கையுடன் இருக்கும் தைரியத்தில் எழுந்து நிற்க வேண்டும். நீங்கள் உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுக் கொள்ளாமல், உங்களுக்குள் உறுதியாக மையங் கொண்டிருந்தால் மட்டுமே, உங்களுக்குள் திட நம்பிக்கையுடன் இருக்கும் தைரியம் நிகழும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

### தண்ணீர் குடிக்கும் போது நின்று கொண்டே குடிக்கக்கூடாதாம்! ஏன் தெரியுமா?



ஆனால் அதுவே உட்கார்ந்து குடித்தால், நீரானது உடலின் அனைத்து இடங்களிலும் நுழைந்து நச்சுக்களை அடித்துக் கொண்டு சிறுநீரகங்களுக்கு கொண்டு சென்று, நச்சுக்களை உடலில் இருந்து முறையாக வெளியேற்றிவிடும்.

**ஆர்த்ரிடிஸ**

சில ஆய்வுகளில் நின்று கொண்டே தண்ணீர் குடிப்பதால், ஆர்த்ரிடிஸ் ஏற்படும் வாய்ப்பு அதிகரிப்பதாக சொல்கிறது. அதுவும் தண்ணீரை நின்றவாறு குடிப்பதால், அது உடலின் மூட்டுப் பகுதிகளில் உள்ள நீர்மங்களின் சமநிலைக்கு இடையூறை ஏற்படுத்துகிறது. இப்படியே நீண்ட நாட்கள் இப்பழக்கத்தைக் கொண்டால், நாளடைவில் அது மூட்டு வலிக்கு உட்படுத்தி, ஆர்த்ரிடிஸ் ஏற்பட வழி வகுத்துவிடும்.



**நரம்புகள் டென்சன் ஆகும்**

பொதுவாக நின்று கொண்டிருக்கும் போது சிம்பதெடிக் நரம்பு மண்டலமானது செயல்பட ஆரம்பிக்கும். சிம்பதெடிக் நரம்பு மண்டலம் செயல்பட ஆரம்பித்தால், இதயத் துடிப்பு அதிகமாகும், இரத்த நாளங்கள் விரியும், நரம்புகள் அதிகமாக டென்சனாகும், கல்லீரலில் இருந்து சர்க்கரை வெளியேற்றப்படுவது என்று உடலே சுறுசுறுப்புடன் வேகமாக இயங்கும். அந்நேரம் குடித்தால், நீரானது நேரடியாக சிறுநீர்ப்பையை அடைந்து வெளியேறும்.

ஆனால் உட்கார்ந்து இருக்கும் போது பாராசிம்பதெடிக் நரம்பு மண்டலம் செயல்பட ஆரம்பித்து, உடல் ரிலாக்ஸ் ஆகி, செயல்பாடுகளின் வேகம் குறைந்து, நரம்புகள் அமைதியாகி, உண்ணும் உணவுகள் மற்றும் குடிக்கும் நீரை அனைத்தும் மெதுவாக செரிமான மண்டலத்தில் இருந்து வெளியேற்றப்படும்.

# சமைப்போம் சுவைப்போம்

### கரட் வெங்காய ஊத்தப்பம



**தே.பொருட்கள்:**

பச்சரிசி - 1 கப்
புழுங்கல் அரிசி - 1/2 கப்
கரட் துருவல் - 3/4 கப்
சீரகம் - 1/2 டீஸ்குபூன்
வெங்காயம் - 1 கப்
(நன்றாக நறுக்கியது)
பொடி உப்பு - தே.அளவு

**செய்முறை:**

இரு வகை அரிசியையும் ஒரு மணி நேரம் ஒன்றாக ஊற வைக்கவும். மற்ற பொருட்களை அரைத்துச் சேர்க்கவும், தேவையான தண்ணீர் சேர்த்து உப்பு சேர்த்துக் கரைக்கவும். தோசைக்கல்லை போட்டு அதில் முதலில் எண்ணெய் ஊற்றி ஊத்தப்பம் மாதிரி ஊற்றிக் கொள்ளவும்.


அதில் கரட், வெங்காயம், மல்லித்தழை நைசாக நறுக்கி (வதக்கியது) போன்றவைகளை மாவு மேல போட்டு நன்றாக வேகவிட்டு திருப்பிப் போடவேண்டும். இப்போது கரட் வெங்காய ஊத்தப்பம் ரெடி.

**குறிப்பு**

உடலின் மெட்டபாலிசம் சீராக நடைபெற, போதிய அளவில் தண்ணீரை உட்கார்ந்து குடிக்க வேண்டும். அதிலும் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு குடித்து வந்தால், நல்ல பலனைப் பெறலாம்.

காலையில் எழுந்ததும் 1-3 டம்ளர் தண்ணீர் குடிக்கவும். மதிய உணவு உண்பதற்கு 1 மணிநேரத்திற்கு முன் 2-3 கப் தண்ணீர் குடிக்கவும். இரவு உணவு உண்பதற்கு 1 மணிநேரத்திற்கு முன் 2-3 கப் தண்ணீர் குடிக்கவும். முக்கியமாக ஒரு மணிநேரத்திற்கு ஒருமுறை தண்ணீர் சிறிது குடிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாயக் கிழமை 23.06.2015 தொடக்கம் வியாழக்கிழமை 26.06.2015 வரை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

23.06.2015 செவ்வாய்க் கிழமை யாழ்.பிரதேசத்தில் புங்குடுதீவு, வேலணை ஒரு பகுதி, புங்குடுதீவு இலங்கை கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரம, எள்ளுப்பிட்டி ஆகிய பிரதேசங்களிலும்

24.06.2015 புதன்கிழமை யாழ் பிரதேசத்தில் காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம், பலாலி இராணுவத்தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல் படை முகாம், பலாலிஇலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல்படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு காலவிடுதி, காங்கேசன்துறை பாதுகாவல் நிலையம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, செக்கட்டிப்புலவு பிரதேசம், CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும்

25.06.2015 வியாழக்கிழமை யாழ். பிரதேசத்தில் வல்லான், ஆலடி சந்தி, குறிகட்டுவான், புங்குடுதீவு, இறுப்பிட்டி, கேரதீவு, மண்டைதீவு, துறையூர், மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம், பறயனாலங்குளத்திலிருந்து நேரிய குளம்வரை, பூவரசங்குளத்திலிருந்து கங்கனகுளம் வரை, மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பெகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, பல நோககு கூட்டுறவுச்சங்கம் வி.சி.கே ஆலை, செட்டிகுளம் வைத்தியசாலை, வலயம் 1,2,3, மற்றும் 4, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும்

26.06.2015 வெள்ளிக்கிழமை யாழ்பிரதேசத்தில் நுணாவில் ஒரு பகுதி, மட்டுவில், கல்வயல், சந்திரபுரம், சரசாலை, கனகன் புளியடி, வேம்பிராய், முத்துமாரியம்மன் கோவிலடி, உசன், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வட்டுப்பித்தன்மடுவிலிருந்து புதுக்காமம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ)

## நான்கு பயனாளிகளுக்கு மருத்துவக் கொடுப்பனவு

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 4 பயனாளிகளுக்குரிய மருத்துவ உதவிக் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றுள்ளது.

கெ.எழிலரசன்–கரணவாய் கிழக்கு, பி.பிறேம் சங்கர்–கரணவாய் மேற்கு வி.கீதவாணி–துன்னாலை மேற்கு, கு -இலட்சுமி -கரவெட்டி தெற்கு ஆகிய நான்குபேரையும் பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதே வேளை மாற்றுஆற்றல் கொண்ட 46 பேருக்குரிய தலா 3ஆயிரம் ரூபாகொடுப்பனவு கிடைக்கப் பெற்றுள்ளதாக பிரதேச செயலர் எஸ். சிவசிறிஅறிவித்துள்ளார். (இ-3-60)

## மஹா சங்காபிஷேகம்


எழுதுமட்டுவாழ் விடு பளை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான மஹா சங்காபிஷேகம் நாளை புதன் கிழமை 24ஆம்திகதி காலை 9 மணி முதல் முற்பகல் 11.50 மணி வரை நடைபெறவுள்ளது.பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று அம்பிகை, விநாயகர், முருகன் ஆகிய பரிவாரமூர்த்திகளுடன்அம்பாளின்வெளிவீதியுலா இடம்பெறும். (இ-3)


## பயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்


## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
## இன்று மூன்றாம் திருவிழா



### உற்சவத் திருநாள்

உன்னதமான இணுவைக் கந்தனுக்கு
உற்சவத் திருநாளாம்
தொன்மையே வேரோடி நிற்க
தோரணம் தொங்கிடும் திருநாளாம்
அலங்கரித்து வருகின்றான் வீதியுலா
அடியவர்க்கு இது பெருவிழா
அங்கமெல்லாம் உன் திருநீறு
சிந்தையெல்லாம் சிலீர்த்து நிற்க
அவன் அருள் நாமமே சொல்லி நிற்க
உன் அருள் வேண்டி நிற்கின்றோம்
இணுவைக் கந்தா

இணுவைக் கவி :
V.V. சகிந்தன்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்.
### விசேட பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டமானது 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தி.சிறிகரன்
செயலாளர்.

(சி-1353)


## CERTIFICATE IN PHARMACY

வடபகுதி மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் (Pharmacy staff) மருத்துவ பிரதிநிதிகளுக்கும் (Medical Reps) மருந்தக/ மருத்துவ மருத்துவ அறிவையும் தரத்தையும் உயர்த்தும் நோக்குடன் 6 மாத பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளது.

**இடம்:** மருந்தியலாளர் கல்வி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
**காலம்:** 6 மாதங்கள் (ஆடி / 2015 - மார்கழி / 2015)
**நேரம்:** 1 வது Batch - புதன்கிழமை காலை 8.30 - 12.30
ஆரம்பம் 01.07.2015
2 வது Batch - ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 12.30 - 16.30
ஆரம்பம் 05.07.2015
**கல்வித் தகுதி:** - G.C.E. O/L ஆங்கிலப் பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி

ஆடி மாதம் ஆரம்பமாகும் பயிற்சி வகுப்பில் சேர்வதற்கான விண்ணப் படிவமும் யாழ்ப்பாணக் கல்லூரி அனுமதிப் படிவமும் நேரடியாக/தபால் மூலமாக பெற்றுக் கொள்ளலாம். முகவரி: நடராசா இராசநேரு மருந்தியலாளர் பயிற்சி இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப்பட்டப் படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0776256292.

மேற்படி விலாசத்தில்:
மருந்தியளாளர் (வெளிவாரி) பரீட்சைக்கான கற்கை நெறி பயிற்சி வகுப்புக்கள் சனி/ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.30 மணிக்கு நடைபெற்று வருகிறது. இந்த பரீட்சைக்கு தோற்றுவதற்கான கல்வித் தகுதி G.C.E. (A/L) விஞ்ஞான பாடங்களில் இரசாயனம் உட்பட 3 பாடங்களில் சாதாரண சித்தி இருத்தல் வேண்டும். (923)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 34 செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L கனடா PR<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4646 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 52 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/4686 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 56 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: முகாமையாளர் டென்மார்க் PR<br>தொ.இ: B/4647 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 22 1/2 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSC இரசாயன வியலாளர்<br>தொ.இ: G/4699 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 27 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4658 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 31 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>தொ.இ: G/700 |
| பிறப்பு: 1958 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 29 செவ் 2 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் மலேசியா<br>தொ.இ: B/4649 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1441 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். குடாநாட்டிற்கான

# இரணைமடு குடிநீர்த்திட்டம் இரு வருடத்திற்குள் பூர்த்தி!

## ஜனாதிபதி, பிரதமர் உத்தரவு என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாவிற்கான இரணைமடு குடிநீர் திட்டத்தை இரு வருடங்களுக்குள் பூரணப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தமது அமைச்சுக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் யாழில் தெரிவித்துள்ளார்.**

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் மற்றும் யாழ். பிராந்திய முகாமையாளர் அலுவலக திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைவு தொடர்பில் உடனடியான மாற்றுத் தீர்வு ஒன்றினை முன்னெடுக்கவேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

நாம் இந்தப் புதிய அரசினை பொறுப்பேற்றவுடன் நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் என்ற வகையிலேயே இந்தத் தேவையேற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இரு தடவைகள் ஜனாதிபதியுடன் கதைத்துள்ளோம்.

எமது பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் ஜனாதிபதியுடன் இது சம்பந்தமாகப் பேசியிருந்தனர்.

இதேபோல் இருவாரங்களுக்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலும் பேசியிருந்தோம். அப்போது குறுகிய காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்ற பணிப்பு எமது அமைச்சுக்கு விடுக்கப்பட்டது.

இப்போது இப்பிரச்சினை தொடர்பில் எமது உடன் நடவடிக்கை பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்குவது மட்டுமே. ஏறத்தாழ 12 பவுசர்கள் குடிநீர் வழங்கும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

நிலத்தடி நீர் எவ்வாறு மாசுபட்டது என்பதனை ஆராய்ந்தால் அது முடிவுறாத சர்ச்சையாக தொடர்கின்றது.

இதற்கு மாற்றுத் தீர்வாக இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டிற்கு நீர்விநியோகம் செய்யும் பாரிய நீர் விநியோகத் திட்டமே. இதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி பிரெஞ்சு அரசாங்கத்தின் ஏ.எப்.டி. எனப்படும் உதவி நிதியம் ஆகிய இரண்டும் சேர்ந்து எங்களுக்கு ஏறத்தாழ 200 மில்லியனுக்கும் அதிகமான பாரிய நீர்வழங்கல் திட்டத்தினை முன்னெடுக்கதிட்டமிடப்பட்டுள்ளது.

இப்பாரிய நீர்வழங்கல் திட்டத்தினை முன்னெடுப்பதற்குத்தான் இந்த காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை இல்லை என்ற நிலையில் இங்கு எல்லா வசதிகளும் உள்ளன.

தற்போது கட்டடம் வந்துள்ளது. இக்கட்டடத்தின் செயற்றிட்டத்தினை முன்னெடுப்பதில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இரணைமடு குடிநீர்த்திட்டத்தை முன்னெடுப்பதில் கிளிநொச்சி விவசாயிகளோடு பிரச்சினை உண்டு. இரணைமடுக் குளத்தில் கிட்டத்தட்ட 80 ஆயிரம் ஏக்கர் கொள்ளளவுள்ள வாவியாக உள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் கிளிநொச்சியில் விவசாயிகள் மீள்குடியேறியுள்ள நிலையில் தம்முடைய விவசாயத்திற்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்படலாம் என்ற அச்சமும் குழப்பமும் அவர்களிடத்தே ஏற்பட்டுள்ளது.

இவ் அளவினை இன்னுமொரு 40 ஏக்கர் அளவில் அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலப்போக்கில் இந்தச் சர்ச்சையை இங்குள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் தீர்த்து வைக்கவேண்டும். இதற்காக நாம் இத்திட்டத்தை தாமதிக்க முடியாது.

இரண்டு வருடத்திற்குள் இச்செயற்றிட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டுமென ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இறுக்கமான கட்டளை பிறப்பித்துள்ளனர்.

அதனடிப்படையில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இன்னுமொரு 100 மில்லியன் பணம் கூடுதலாகக் கேட்பது எனத் திட்டமிட்டுள்ளோம்.

ஏனென்றால் கடல் நீரினை நன்னீராக்கும் செயற்றிட்டமொன்று அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

இந்தத் திட்டம் இந்நாட்டிலேயே முதன்முறையாக யாழ்ப்பாணத்தில்தான் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பில் அடுத்த மாதம் ஒரு மாநாடு ஒன்றினையும் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

இதுமட்டுமல்ல யாழ். மாநகரசபையின் எல்லைக்குள் நிலக்கீழ் வழியாக கழிவக... றும் திட்டமொன்றினையும் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

ஏ.ஏப்.டி. நிறுவனம் பிரெஞ்சு அரசின் உதவியோடு கிட்டத்தட்ட 80 மில்லியன் டொலர் செலவில் இத்திட்டம் அமைக்கப்பட்டு இதனோடு கழிவுநீரினை சுத்திகரிக்கும் செயற்றிட்டத்தினையும் ஆரம்பிக்கவுள்ளோம். இதனை ஆரம்பிப்பதற்கு எமது அமைச்சு மிக விரைவில் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வன்னித் தொண்டராசிரியர்கள் யாழில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வன்னி மாவட்ட தொண்டராசிரியர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் முன்பாக நேற்றுக் காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மன்னார் ஆகிய கல்வி வலயங்களை சேர்ந்த 200 இற்கு மேற்பட்ட தொண்டராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

காலை 9 மணியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தை அதிகாரிகள் எவரும் கண்டுகொள்ளவில்லை என்பதால் கல்வித் திணைக்கள முன்றிலில் முற்றுகையிட்டு போக்குவரத்தை நிறுத்தி தமது போராட்டத்தை தொடர்ந்தனர்.

அதன் பின்னர் முற்பகல் 11 மணியளவில் கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தொண்டராசிரியர்களை அழைத்து கலந்துரையாடினார்.

அவருடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் தமக்கு சரியான தீர்வு கிடைக்கவில்லை என்பதால் தொடர்ந்து தமது கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர். நண்பகல் 12 மணியளவில் வடமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, தர்மபால செனவிரட்ன, லிங்கநாதன், க.சிவனேஸ்வரன் ஆகியோர் தொண்டராசிரியர்களை சந்தித்து கலந்துரையாடி அவர்களிடம் மகஜர் ஒன்றினையும் பெயர் விபரங்களையும் பெற்றுச் சென்றனர்.

இது தொடர்பாக வன்னி தொண்டராசிரியர்கள் சங்கத் தலைவர் இ.ஜெயராஜ் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நிரந்தர நியமனம் தொடர்பாக நாம் கடந்த காலங்களில் பலமுறை வடமாகாண கல்வி அமைச்சர், ஆளுநர் ஆகியோரை சந்தித்து கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். பல கவனயீர்ப்பு போராட்டங்களையும் தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தும் இதுவரை எமக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. 10 வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் எமக்கு நிரந்தர நியமனம் தொடர்பான சாதகமான பதிலை எழுத்துமூலம் தெரிவித்து வெகு விரைவில் எமக்குரிய நியமனங்களை வழங்குமாறு இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.



வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனை சந்தித்து கலந்துரையாடிய போது அவர் எமது விபரங்கள் மத்திய கல்வி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இனி அவர்கள் தான் முடிவெடுக்க வேண்டும்.

எமக்குரிய அதிகாரங்களை மாத்திரம் தான் நாம் பயன்படுத்த முடியும். அரசியல்வாதிகளுடாக உங்களது கோரிக்கைகளை முன்வையுங்கள் என அவர் தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களில் அரசியலால் புறக்கணிக்கப்பட்ட எங்களுக்கு மறுபடியும் அரசியல் ஊடாகத்தான் தீர்வு கிடைக்கும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

வடமாகாணசபை உறுப்பினர் ம.தியாகராஜா எம்முடன் கலந்துரையாடியபோது எமது பெயர் விபரங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை பெற்றுக் கொண்டதுடன் ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு எமக்கு ஏற்பாடு செய்து தருவதாக கூறியுள்ளார்.

நிரந்தர நியமனம் கோரி வந்த எமக்கு எவரிடமிருந்தும் திருப்தியான பதில் கிடைக்கவில்லை. உரிய அதிகாரிகள் எமது பிரச்சினைகளை அறிந்து கொண்டு எமக்கான தீர்வை வெகு விரைவாக பெற்றுத்தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தமிழ்த்தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆரம்பிப்பு

கோண்டாவில் யாழ் சாலை போக்குவரத்து சபை ஊழியர்களால் தமிழ்த்தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் கூட்டத்தில் இத் தொழிற்சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் தலைவராக அருளானந்தம் அருட்பிரகாஸ், செயலாளராக மார்க்கண்டு சிறிகாந்தரூபனும் பொருளாளராக கதிரைமலைநாதன் சுபாஸ்கரனும் உப தலைவராக ஜே.வி.ஜெயந்தனும் உப செயலாளராக யோகராசா கமலதாசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக எவ்.ஆர்.சாந்தகுமார். என்.சதீஸ்குமார், வி.சுரேந்திரன், கே.பாலேஸ்வரன், எஸ்.சுபாஸ், வி.சண்முகநேசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் போஷகர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, இ.ஆனல்ட் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கூட்ட முடிவில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றும் போது இச்சங்கம் எதிர்காலத்தில் பல அங்கத்தவர்களை உள்வாங்குவதோடு ஊழியர்களின் நலத்தையும் தமிழ்த் தேசிய உணர்வையும் கொண்டு இயங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (இ-5)

## கற்களும் காணாமல் போகின்றன

(கரணவாய்)

கரணவாய் கிராய் மயானத்தின் அபிவிருத்திக்கெனப் பறிக்கப்பட்ட 10 லோட் கற்களில் 3 லோட் கற்கள் திடீரென காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரத்தில் உழவியந்திரம் மூலம் இக்கற்கள் கடத்தப்பட்டதை சிலர் அவதானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மயான அபிவிருத்திக்கெனப் பறிக்கப்பட்ட இக்கற்கள் நீண்டகாலமாக அப்பகுதியில் கிடப்பதாகவும் எனவே அபிவிருத்திவேலைகளைஉடன்ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரளய தாண்டவம்

''கோயில் சுடுகாடு'' என்ற சொற்களைக் கேள்விப்பட்டிருக் கிறீர்களா? 'அது என்ன கோயில் சுடுகாடு? கோயில் எப்படி சுடுகா டாக முடியும்? என்று வியப்பாக உள்ளதா? இதற்குத் திருவாசகம் மூலம் விளக்கம் தருகிறார் மாணி க்கவாசகப் பெருமான். கோயில் என்பது ஆண்டவன் குடி கொண்டு அருள்பாலித்து அனைத்து உயிர்க ளுக்கும் ஆனந்தம் தரும் இடம் கோ+இல்- கோயில், கோ-ஆண் டவன் அரசன் சுடுகாடு என்பது மனிதனின் வாழ்க்கைப் பயண யாத்திரை முடியும் இடம். இதை இடுகாடு, நன்காடு என்று மங்கல வழக்கமாக சொல்வர். இந்த இடத் தில் தான் ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், இளை யோர்-முதியோர் போன்ற எந்தப் பாகுபாடும் இன்றி அனைவரது உடல்களும் மண்ணிலோ, தீயிலோ ஒடுங்கும். இந்த இடத்திற்குச் செல் லமட்டும் அல்ல அதை அண்டிய வீதி பக்கம் செல்லவே அனை வரும் சற்றுப் பயப்படத்தான் செய் வர். அங்கு போனால் ஆவி, பேய், பிசாசு, நாய், நரி போன்றவை உலாவும். அங்கு செல்வோரை அவை பிடித்துக் கொண்டு ஆட்டி வைக்கும் என்று நம் முன்னோர் கள் வழிவழியாக பயமுறுத்தி வந் ததே இதற்கு காரணமாகும். அதுவே தலைமுறை தலைமுறையாக தொடர்கிறது. ஆனால் அந்த சுடுகாட் டுக்கு அவ்வப்போது நள்ளிரவில் சென்று தியாகம் செய்தவர் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர்.

உலகம் ஒரு சுடுகாடு. இங்கே எல்லாம் அழியக்கூடியவைதாம். அழிவுத்தன்மையை உணர்த்தவே கோயில் சுடுகாடு என்று குறித்தார் மாணிக்கவாசகர். ஊழிக் காலத்தில் நள்ளிரவில் சுடுகாட்டில் தாண்டவம் ஆடுகின்ற தலைவன் சிவபெரு மான் ஒருவரே என்பது திருவாசகத்தின் கருத்து. சிவபெருமான் விரும்பி உறை யும் இடம் சுடுகாடு. இங்குதான் அவன் புரிந்து வரும் ஐந்தொழில் களில் ஒன்றான அழிக்கும் தொழில் நடைபெறுகிறது. ஆன்மாக்கள் உய்வு பெறும் பொருட்டு அவன் ஐந்தொ ழில் ஆற்றி ஆனந்த நடனம் செய் யும் இடம் சுடுகாடு. அதுதான் அவன் வீற்றிருக்கும் உயர் கோவில். இந் தக் கோயிலுக்குள் அனைத்து உயிர் களுக்கும் கட்டாயம் வந்து சேர வேண்டும் என்பதை உணர்த்தவே அவன் திருநடனம் தொடர்ந்து நட ந்து கொண்டிருக்கிறது. அப்பன் இவ் வாறு சுடுகாட்டில் நித்தியவாசம் செய் யும் போது அங்கு செல்ல நமக்கு இனிப் பயம் வருமா?

அண்ணாமலையின் அருங்கொடை யாக கிடைத்த மகான் ஸ்ரீசேஷா த்திரி சுவாமிகளின் தனது 16 வய தில் இப்படித்தான் இரவை சுடுகா ட்டில் கழிப்பாராம். இதை ஊர் மக்கள் வாயிலாக அறிந்த அவரது சித் தப்பா அவரை அழைத்து ஏய் சேஷா த்திரி மயானத்தில் போய் ஜபம் செய் கிறாயாமே கேள்விப்பட்டேன். அது பிணங்கள் எரிகிற இடம் என்று உன க்கு தெரியும் தானே? அது அசுத்த பூமி, அங்கே சென்று யாராவது ஜபம் செய்வார்களா? இல்லை, இதற்கு முன்னால் அப்படி செய்த வர்கள் இருக்கிறார்களா? இதெல் லாம் நம்குல வழக்கத்திற்கு ஆகாது. இனி நீ அங்கெல்லாம் போகக்கூடாது. வீட்டிலேயே ஜபம் செய் என்றாராம்.

ஆனால் சித்தப்பா கூறியவற்றை திடவட்டமாக மறுத்துவிட்டார் சேஷா த்திரி சுவாமிகள். மேலும் சித்தப்பா அது அசுத்த பூமி இல்லை ருத்திர பூமி. சிவன் தாண்டவமாடுகிற இடம். அங்கே சென்று ஜபம் செய்தால் ஆயிரம் மடங்கு பலன். அதனால் நான் அங்கே சென்று தான் ஜபம் செய்வேன் என்னை தடுக்காதீர் கள் என்றாராம். ஸ்ரீகாஞ்சி காமாட் சியின் அருளால் பிறந்த ஸ்ரீசே ஷாத்திரி சுவாமிகள் கூறியதை விடவும் வேறு ஆதாரம் தேவை யில்லை.

ஞானிகளும் ரிஷிகளும் இவ் வாறு சுடுகாட்டுக்கு சென்று ஜபம் செய்வது மனிதன் ஏன் பிறக்கி றான்? ஏன் இறக்கிறான்? பிறப் பதற்கு முன் எங்கு இருந்தான்? இறந்த பின் எங்கே போகிறான்? ஏன் பிறக்க வேண்டும்? ஏன் இற க்க வேண்டும்? இந்தப் பிறப்பு, இற ப்பு சுழற்சியில் இருந்து விடு ப டுவது எப்படி? என்கிற ஆத்ம வழ க்கு விசாரணைக்கான நீதிமன்றம் போன்று கேள்விகளுக்கு பதில் தேடத்தான். அதற்கான பதில் சுடு காட்டில் தான் கிடைக்கிறது என்பது அவர்கள் கூறும் மறுக்க இயலாத உண்மை.

நாளை 24 புதன்கிழமை ஆனி உத்தர தரிசனமும் ஆகும். இத் தினங்களில் குருநாதரையும் அம் பலவாணரையும் வணங்கு வோம். 'நிலையாமை' தத்துவத்தை நினைவில் வைத்து சிவனருளைப் பெறுவோம்.

**சிவஸ்ரீ வி.பிரணவன்ஐயர்**

# பொன்விழா

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங் கத்தின் பொன்விழா எதிர்வரும் 27,28 ஆம் திகதி சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 2.30 மணியளவில் ஸ்ரீ துர்க் காதேவி தேவஸ்தான முன்றிலில் இந்து இளைஞர் சங்கத் தலைவர் ரஜீவ்காந் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதலாம் நாள் அமர்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர் ஆறு.திருமுரு கன், யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் வடமாகாணசபை உறுப்பினரும் ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான தர்மகர்த்தாசபைத் தலைவருமான த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் க.ஸ்ரீ மோகன்,வலி வடக்கு பிரதேச சபை தவி சாளர் சோ.சுகிர்தன் மற்றும் தெல்லிப் பழை பொலிஸ் பொறுப்பதிகாரி கஸ் தூரி ஆராச்சி ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ் வரன்,சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசஅதிபர் நா.வேதநாயகன் மற்றும் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளரும் தெல்லிப் பழை இந்து இளைஞர் சங்கத் தின் வெள்ளி விழாத் தலைவ ருமான சிவபாலக ணேசன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ள னர்.

இதில் கௌரவ விருந்தினர் களாக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன்,யாழ்.காணி அலுவல் கள் உதவிச் செயலாளர் எஸ். முரளி தரன் மற்றும் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சி.ஈ.வித்தியசிங்கி ஆகியோர் கல ந்து கொள்ளவுள்ளனர். (இ-7)


## யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

இன்று தேர்த்திருவிழா



தேரேறி வருகின்ற வீரகத்தி விநாயகரே
தேர்மீது காட்சிதந்து திருவருள் தர வேண்டும்
வேரொடு வினை களைந்து வில்லங்கம்யாவும் அழித்து
தேரேறி வந்தே திருக்காட்சி தாருமையா!
நீரோடு நிலவும் வைத்த சிவனார் தம் திருமகனே
சீரோடு நாம் வாழ நீர் தேரேறி வாருமையா!
பேரோடும் புகழோடும் கலட்டியில் வாழ்பவரே
வீரகத்திக் கணபதியே கஜமுகனே சரணம்! சரணம்!!

(C-1281)

கோலா சிற்றி தொழில் வங்கி
224, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 320 2787

சு.பாஸ்கரன் சிற்பாலயம்
கருங்கற் சிலைகள், ஐம்பொற் சிலைகள்
உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும்
479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 635 1805







## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு ஏழாம் திருவிழா



## தழைத் தோங்க!

சீர்தனை விருத்த மோங்கு பாச்சூடி
எதுகை மோனை கூடி வர வித்தகமாய்!
வீர் என்று விரண்டோட வினைகள் விட்டகல
துயர்கள் சிங்க வாகன மேறும் தத்துவமாய்!
பார்போற்றும் சக்திபீட மேவும் சகல
கலைகளும் தரும் நாகபூஷணியே சத்தியமாய்!
தேர் ஏறிவா அம்மா தமிழர் பண்பாடு
நாகரிகம் மீண்டும் தழைத்தோங்க சித்தமாய்!

இராம ஜெயபாலன்

## நர்த்தகியே நயினைப்பதி நாகதேவி

நாலுகரை கடல் சூழ்ந்த
நயினை எனும் தீவினிலே
ஆழ்கடலின் அருகமர்ந்து
அற்புதங்கள் பல புரியும்
நர்த்தகியே நயினைப்பதி நாகதேவி
நாடி வந்தோம் திருப்பாதம்
வாழுகின்ற காலம் வரை
வந்தருகிருந்து அருள்தருவாய் தேவி

அரியாலை பாரதி

## உன் அருளை காட்டு

கடலலைகளோடி வந்தாடி விளையாட
மேலுயருமாழியது சூழ் நயினைத்தாயே
தோணியினையேறி உனை நான் பணிய வந்தேன்
தூய விழி நீர் சொரிய உன்னருகில் நின்றேன்
வெள்ளை மணல் மீதுனது வெள்ளிரதம் ஓடும்
கொள்ளை அழகோடு நினைக் காண மனம் நாடும்
தீது புரிகின்ற வரை மேதினியில் ஓட்டு
நீதியது தான் விளைய உன் அருளைக் காட்டு

நவாலியூர் ரிஷிகா

## புவனேஸ்வரி

ஆழி சூழ் நயினாதீவில்
ஆனந்தமாய் வீற்றிருக்கும் நாகபூஷணி
நம்பினோரைக் காக்கும் கற்பக விருட்சமாய்
நயினை நகர் நாகபூஷணியம்மா
ஐந்து தலை நாகம்தனிலமர்ந்து
ஐஸ்வர்யம் அருளும் அம்பிகை நீ
தேடி வந்த அடியவர்க்கு அமுதளிந்து
தேவாமிர்தமாய் அருளும் புவனேஸ்வரி

த.அபிநாத்
யா/இ/க
தரம்-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வீடமைப்பு தினம் நாடு பூராகவும் ஒரு வாரகாலம் அனுஷ்டிக்கப்படவுள்ளது

## கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**சமுர்த்தி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சஜித் பிரேமதாச ஏற்பாட்டில் தேசிய வீடமைப்பு தினம் 'பங்களிப்புடனான வீடமைப்புஅபிவிருத்தி' எனும் தொனிப்பொருளில் நாடு பூராகவும் கொண்டாடுவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.**

இதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் தொடர்ந்து ஏழு நாட்கள் வரை வீடமைப்பு தினமாக கொண்டாடப்படவுள்ளது.

இன்று இதற்கமைய செவ்வாய்க்கிழமை சர்வமத வழிபாடு எனும் நிகழ்வாக காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திலும் அதேவேளை புனித திரேசம்மா ஆலயத்திலும் பூசை வழிபாடுகள், ஆராதனைகள் என்பன இடம்பெறவுள்ளன.

இதில் அறிவியல் நகர் விசேட வேலைத்திட்ட பயனாளிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வீடமைப்பு கடன் பெற்ற சகல பயனாளிகளையும் இந்த சமய அனுட்டானங்களில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேதினம் மாலை பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 30 குடும்பங்களுக்கு வீடுகளின் திருத்த வேலைகளுக்காக வழங்கப்படவிருந்த 75 ஆயிரம் ரூபா கடன் தொகையின் முதல் கட்ட கொடுப்பனவு 20 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை 'வீடமைப்பு தொடர்பான பெண்களின் பங்களிப்பு' எனும் தொனிப் பொருளில் பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு கிளிநொச்சி பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரின் தலைமையில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை இளைஞர்கள் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இத்தினமானது 'இளைஞர் வலுவூட்டல் பங்களிப்பு' எனும் தொனிப் பொருளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வேள்ட் விசன் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி இளைஞர் சேவை மன்றமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொழில் வல்லுநர்கள் தினமாக கொண்டாடப்படவுள்ளது.

யு.என்.ஹபிரட் நிறுவனத்தின் தொழில் நுட்ப அலுவலர்களினால் புதிய தொழில்நுட்ப குறுகிய கால பயிற்சி நெறிகளான மேசன், தச்சு தொழிலாளர்களுக்கான பயிற்சி நெறி என்பன வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம்திகதி சனிக்கிழமை பாடசாலை சிறுவர்கள் தினம் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் 'சிறுவர்களுக்கு உண்மையான பாதுகாப்பு வழங்கும் வீடுகள்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை கிளி/கனகபுரம் ம.வித்தியாலயத்தில் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஜே.அரசகேசரியினால் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'வீட்டு உரிமை தினம்' எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படவுள்ளது.


அறிவியல் நகரில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் கடனடிப்படையில் வழங்கப்பட்ட வீட்டு உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள் தொடர்பான நேரடி ஆய்வு நடவடிக்கை அன்றையதினம் முழுவதும் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை மக்கள் தினம் கொண்டாடப்படவுள்ளது.

உதயநகர் 30 வீட்டுத்திட்டத்தில் 1980 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வீட்டுரிமையாளர்களின் குறைநிறைகளை மக்களிடம் அறிவது தொடர்பான நிகழ்வுகள் நடைபெறும்.

அத்துடன் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையிலான காலப்பகுதி கொடி வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக பெறப்படும் நிதி இம் மாவட்டத்தில் வசிக்கும் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இந்த கொடிவாரத்தின் போது நலன் விரும்பிகளிடமிருந்து சுப்பப் பொருட்களும் ஏற்கப்படுமெனவும் இதனால் பயனாளிகளுக்கு நன்மை கிடைக் கச்செய்யலாமெனவும் கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் ஜெ.நோயல் ஜெயச்சந்திரன் அறிவித்துள்ளார். (2-254)







ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபகரும் தலைவருமான தோழர் பத்மநாபா அவர்களின் 25 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈபிஆர்எல்எப் கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அஞ்சலி நிகழ்வுகளுடன் பத்மநாபா நினைவாக பாடல் வெளியீடு, மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

## 2 மில்.ரூபா செலவில் முகமாலையில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைப்பு

(பளை)

பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேச சபைக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் 2 மில்லியன் ரூபாய் செலவில் ஆயுள்வேத வைத்தியசாலையொன்று அமைக்கப்பட்டு வருவதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

முகமாலைப் பகுதியில் அமைந்திருந்த ஆயுர்வேத வைத்திய சாலை மற்றும் நூல் நிலையம் ஆகியன கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக முற்றாக அழிவடைந்தன.

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னர், முகமாலையில் இயங்கி வந்த பிரதேச சபையின் உப அலுவலகம் மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை என்பன பளையிலுள்ள தலைமைக் காரியாலய கட்டடத்தில் இயங்கி வந்தன.

முகமாலையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில், மீளக்குடியேறி வசிக்கும் மக்களின் நலன்கருதி ஆயுள்வேத வைத்தியசாலையை மீண்டும் முகமாலையில் அமைக்க வேண்டிய அவசியமும் தேவையும் பிரதேச சபைக்கு ஏற்பட்டது.

இதனையடுத்து, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்னர் இருந்த இடத்தில் 2 மில்லியன் ரூபாய் செலவில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்கப்பட்டு வருகின்றது.

உப அலுவலகம் மற்றும் நூல் நிலையம் அமைப்பதற்கான நிதியை தந்துதவுமாறு அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் பிரதேச சபை கோரியுள்ளதாக பிரதேச சபை தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (2)

## ஆறு உப-அலுவலகங்கள் முல்லையில் திறந்து வைப்பு

(மல்லாவி)

கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சின் உப-அலுவலகங்கள் ஆறு முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தமது அமைச்சின் உப-அலுவலகங்கள் ஆறினை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், துணுக்காய், மல்லாவி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு நகர பகுதி என ஆறு இடங்களிலும் திறந்து வைத்துள்ளார்.

இவ் அலுவலகங்கள் ஊடாக மாதத்தில் ஒரு தடவை மக்களினை அமைச்சர் சந்திக்கவுள்ளார். இச்சந்திப்பினூடாக மக்கள் தமது குறைநிறைகளை தெரியப்படுத்தி தீர்வை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 12மீனவர்கள் கைதாகினர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நந்திக்கடல் நீரேரியில் தடைசெய்யப்பட்ட முக்கூட்டு வலைகள், சிறிய கண் அளவு வலைகள் ஆகியவற்றை பயன்படுத்தி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பாவித்த வலைகள் கைப்பற்றப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு நீதவானின் உத்தரவிற்கு அமைய அவை அழிக்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவுமாவட்டகடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கடந்த 18 ஆம் திகதி அதிகாலை 3 மணி தொடக்கம் காலை 6 மணிவரை நந்திக் கடல் நீரேரியில் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர்.

இந் நடவடிக்கையின் போது தடைசெய்யப்பட்ட முக்கூட்டு வலைகள், சிறியகண் அளவு வலைகள் ஆகியவற்றைப் பாவித்துக் கொண்டிருந்த 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பாவித்துக் கொண்டிருந்த வலைகளும் கைப்பற்றப்பட்டன.

அன்றையதினமும் மீனவர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட தடை செய்யப்பட்ட வலைகளும் ஒப்படைக்கப்பட்டன.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டநீதிபதி முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இரு மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் அவர்களிடமிருந்து குற்றப் பணமாக தலா 5 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டு எச்சரிக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தேங்காயில் இரு தென்னங்கன்றுகள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை வளாகத்தினுள் ஒரு தேங்காயில் இரு தென்னங்கன்றுகள் வெளிவந்துள்ளன.

இத் தென்னங்கன்றுகள் இரண்டும் நன்கு வளர்ச்சி அடைந்து காணப்படுவதைப் படத்தில் காணலாம். (2-254)

## வருடாந்த பொங்கல் விழா

(குருமன்காடு)

வவுனியா கிடாச்சூரி கண்ணகை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல்விழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எட்டு தினங்கள் அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் நடைபெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கல்விழா நடைபெற்று கொடியிறக்கத்துடன் பொங்கல் திருவிழா நிறைவுபெறும்.

இம்முறை பொங்கல்விழா கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் நடைபெறவிருந்த வேளை ஆலயத்தின் பிரதம பூசகரின் தந்தையும் முன்னாள் தலைமை பூசகருமான அருணாசலம் ஆறுமுகம் திடீரென மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-250)

# வைத்தியர் உரிய நேரத்திற்கு கடமைக்கு சமுகமளிக்காமையால் நோயாளர்கள் அவதி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலையில் வைத்தியர் நேரத்திற்கு கடமைக்கு சமுகளிக்காமை காரணமாக தூர இடங்களில் இருந்து வருகின்ற நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருந்து மருந்தினைப் பெற வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருகின்ற நோயாளர்கள் காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை காத்திருந்து விட்டு அதன் பின்னர் வைத்தியரின் வருகையையடுத்து சிகிச்சை பெற்று வீடு திரும்புவதாக தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடும் நேரம் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையாகும்.

ஆனால் அங்கு நோயாளர்களைப் பார்வையிடும் நேர அட்டவணை காட்சிப்படுத்தப்படாதுள்ளதாக நோயாளர்களால் தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை வைத்தியரும் காலதாமதத்துடன் கடமைக்கு வருகை தருவதால் தூர இடங்களில் இருந்து நோயின் நிமிர்த்தம் சிகிச்சை பெற வருவோர் சில வேளைகளில் சிகிச்சை பெறாது வீடு செல்வதாக குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் நோயாளர்களின் நலனை கருத்திற் கொண்டு கடமைபுரிவதற்கு வருகை தர வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது. (2)

# வியாபார நிலையங்களில் இரகசிய முறையில் மதுபான விற்பனை

### நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையிலுள்ள வியாபார நிலையங்களில் வைத்து இரகசியமான முறையில் மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களால் தெரிவிக் கப்படுகின்றது.

பொது இடங்களில் இவ்வாறான அனுமதியற்ற செயற்பாடுகள் நடைபெறுவதால் வியாபார நிலையங்களுக்கு வருகை தருகின்ற சிறுவர் முதல் கர்ப்பிணித்தாய்மார், முதியோர் வரை பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு சிலர் மதுபானங்களை வியாபார நிலையங்களுக்கு வழங்கி வருகின்றனர்.

அவற்றை சிலர் காலை முதல் மாலைவரை வாங்கி அருந்துவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இவற்றோடு தகாத வார்த்தை பிரயோகங்களையும் சிலர் பாவிக்கின்றனர்.

கிளிநொச்சி பொதுச்சந்தை கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்டது. பொது இடங்களில் மதுபானம், புகைத்தல், வெற்றிலைத் துப்பல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டும் இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

ஆகையினால் கரைச்சி பிரதேச சபையினர், கிளிநொச்சி மாவட்ட சுகாதார பரிசோதகர்கள் அவற்றை தடுத்து நிறுத்த வேண்டும் என பொதுமக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-271)

# குளத்திற்கு அண்மையில் நின்ற பாலைமரம் தறிப்பு



(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிருஷ்ணபுரம்(KN-11) பகுதியில் அமைந்துள்ள குளத்திற்கு சமீபமாக இருந்த பாலைமரம் ஒன்று சொந்த தேவைக்காக தறிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மக்களால் கிராம அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோதும் எதுவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடியவரை நிழல்தரும் மரங்களை தறிப்தனை நிறுத்த வேண்டுமெனவும் ஏற்கனவே தறிக்கப்பட்ட இந்த மரத்தை கையகப்படுத்தி பொதுத்தேவைக்கு பயன்படுத்துமாறும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுக்கின்றன. (2-272)

# மாற்றுவலுவுள்ளோருக்கு ஊன்றுகோல்கள் வழங்கல்



(கிளிநொச்சி)

கன்டிகிராப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாற்றுவலுவுள்ளோர் மற்றும் முதியோர்களுக்கான ஊன்றுகோல்கள் வழங்கும் நிகழ்வு நேற்று காலை 9 மணிக்கு சிவநகர் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்வைத்து சுமார் 8பேருக்கு ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் ஏனைய மாற்றுவலுவுள்ளோருக்கும் ஊன்றுகோல்கள் வழங்குவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வு சிவநகர் முதியோர் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றது. (2-254)




## நிர்வாகத்தெரிவு

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் கட்டுப்பாட்டு சபையின் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவு வங்கியின் வலய அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக பா.அனிதா, உப-தலைவராக இ.நிசாந்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், ஸ்கந்த புரம், அக்கராயன்குளம், கோணாவில், உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு ஆகிய பிரதேசங்களில் இருந்தும் 13 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (2-272)

## சாமஸ்ரீ தேசிய விருது வழங்கி கௌரவிப்பு



(வவுனியா)

சோதிடர் வி.ஆர்.சிவராசாவிற்கு சாமஸ்ரீ தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருது அண்மையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வைத்து கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் றிசாத் பதியுதீன், சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் எம்.எஸ்.எம் அமீர் அலி ,முன்னாள் நீதிமன்ற நீதிபதி எ.எல்.என்.மைமூனா அஹமட், அகில இன ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் யூ.எல்.எம்.ஹனிபா ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது. (2)

# கிளிநொச்சி இ.போ.சபையினால் மாணவர்களுக்கு பேருந்துச்சேவை

### பருவகால சிட்டையினை பெற்று பயணிக்க முடியும் என்கிறார் சாலை உதவி முகாமையாளர்

(மல்லாவி)

இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி இ.போ.ச. சாலையினால் கிளி/முக்கொம்பன் பாடசாலை மற்றும் கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஏனைய பாடசாலை மாணவர்களின் நலன்கருதி மாணவர் போக்குவரத்து சேவையொன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டு நடைபெற்று வருவதாக கிளிநொச்சி மாவட்ட இ.போ.ச.சாலை உதவி முகாமையாளர் இரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கூறப்பட்ட இரு பாடசாலைகளின் மாணவர்களுக்குமான போக்குவரத்து சேவை தினசரி கிளி/முக் கொம்பன் பாடசாலைக்கான சேவையானது அதிகாலை 6.45 மணிக்கு பூநகரி சந்தியில் இருந்து ஆரம்பித்து அரசபுரம் ஊடாக முக்கொம்பன் பாடசாலையை காலை 7.50 மணிக்கு சென்றடைகின்றது.

பின்னர் இதே வழியாக பிற்பகல் 2மணிக்கு கிளி/முக்கொம்பன் பாடசாலையில் இருந்து ஆரம்பித்து பூநகரியை சென்றடைகின்றது.

அதிகாலை 6.30 மணிக்கு கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கும் மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையானது றெட்பானா சந்திக்கு சென்று அங்கிருந்து பின்னர் முரசுமோட்டையில் உள்ள கிளி/முருகானந்தா பாடசாலையினை சென்றடைகின்றது.

பின்னர் பிற்பகல் 2மணிக்கு கிளி/முருகானந்தா பாடசாலையில் இருந்து ஆரம்பித்து றெட்பானா சந்தியை சென்றடைந்து மீண்டும் கிளிநொச்சி பேருந்து நிலையத்தை வந்தடையும்.

எனவே இப்போக்குவரத்து சேவையூடாக செல்ல விரும்புகின்ற மாணவர்கள் பருவகால சிட்டையினை பெற்று பயணிக்கமுடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1172


# குருவி கொடுத்த கூடை



ஒரு காலத்தில் ஜப்பானில் ஒரு தாத்தாவும் பாட்டியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. அந்தப் பாட்டி மிகவும் பேராசை கொண்டவள். மிகவும் ஆடம்பரமாக வாழ்வதற்குத்தான் அவளுக்குப் பிடிக்கும். அது இயலாமல் போனதால் எதற்கு எடுத்தாலும் தாத்தவுடன் சண்டை போடுவாள். எல்லாவற்றையும் அமைதியாகப் பொறுத்துக் கொள்வார் தாத்தா.

பிள்ளை இல்லாத துயரத்தை மறப்பதற்காகத் தாத்தா ஒரு சின்னக் குருவியை வீட்டில் செல்லமாக வளர்த்து வந்தார். தாத்தா தினமும் வேலை முடிந்து வந்தவுடனேயே குருவி பறந்துவந்து அவர் கையில் அமர்ந்துவிடும். பிறகு அவர் குருவிக்கு விளையாட்டு காட்டுவார்.

இதெல்லாம் பாட்டிக்குக் கொஞ்சமும் பிடிக்காது. ஒருநாள் காலையில் தாத்தா வேலைக்குச் சென்றார். வீட்டுவேலை செய்துகொண்டிருந்த பாட்டி துணி துவைத்து அதைக் கஞ்சியில் முக்குவதற்காகத் தேடும்போது கஞ்சியைக் காணவில்லை. கஞ்சியைத் திருடியது யார்? என்று கத்தினாள் பாட்டி.



இதைக் கேட்டு குருவி சொன்னது. நான்தான். எனக்காக வைத்திருக்கிறீர்கள் என்று நினைத்து எடுத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் பாட்டி என்றது.

பாட்டியின் கோபம் அதிகரித்தது. முட்டாள்; கஞ்சியைக் குடித்த உன் நாக்கை வெட்டி விடுகிறேன் என்றபடி குருவியின் நாக்கை வெட்டி எறிந்தாள். குருவி வலி தாங்காமல் கத்திக்கொண்டே பறந்து சென்றது. அன்று தாத்தா திரும்பி வந்தபோது குருவியைக் காணவில்லை. அவர் எங்கு எல்லாமோ தேடினார். உரக்க அழைத்தார். குருவி வரவே இல்லை. சற்றுநேரம் கடந்தபோது நடந்த சம்பவத்தைச் சொன்னாள் பாட்டி. அன்று இரவு தாத்தாவுக்கு தூக்கமே இல்லை. மறுநாள் பொழுது விடிவதற்கு முன்பே அவர் குருவியைத் தேடிப் புறப்பட்டார். மூங்கிற் காடுகளிலும் புதர்களிலும் புல் வெளிகளிலும் அவர் உரக்க அழைத்துக் குருவியைத் தேடினார். என் செல்லமான குருவியே நீ எங்கே இருக்கிறாய்? என்று ஏக்கத்துடன் கத்தினார். அப்போது மூங்கில் காட்டிலிருந்து ஒரு சத்தம் வந்தது. அந்தக் குருவியின் சத்தம்தான்.

பாட்டி தன் நாக்கை அறுத்ததையும் மந்திரம் தெரிந்த ஆந்தை துண்டிக்கப்பட்ட நாக்கைத் தன் வாயில் ஒட்டவைத்ததையும் தாத்தாவிடம் சொன்னது. அது தாத்தாவை மூங்கிற் காட்டிலுள்ள ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றது. அந்த வீட்டின் உள்ளே நறுமணம் கமழ்ந்தது. ஒவ்வோர் அறையிலும் அழகான கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. மேலும் பல குருவிகள் அங்கே இருந்தன. அன்று இரவு தாத்தா அந்த வீட்டில் தங்கினார். அடுத்தநாள் அவர் புறப்படும்போது குருவியும் அதன் கூட்டாளிக் குருவிகளும் மூடப்பட்ட இரண்டு கூடைகளைத் தாத்தாவின் முன்னால் வைத்தன. ஒன்று பெரிய கூடை. மற்றொன்று சிறிய கூடை. இதில் ஏதாவது ஒன்றைத் தன் பரிசாக ஏற்றுக்கொள்ளும்படி குருவி வேண்டியது. தாத்தா சிறிய கூடையை எடுத்துக் கொண்டார். மகிழ்ச்சியுடன் தாத்தாவை வழி அனுப்பியது குருவி.

வீட்டுக்குச் சென்ற தாத்தா நடந்ததை பாட்டியிடம் சொன்னார். அவர்கள் குருவி பரிசளித்த கூடையைத் திறந்து பார்த்தார்கள். வியப்பாலும் மகிழ்ச்சியாலும் அப்படியே ஸ்தம்பித்துப்போய் நின்றுவிட்டார்கள். அந்தக் கூடை நிறையத் தங்கமும் வைரங்களும் இருந்தன.

பெரிய கூடையை எடுக்காதது நல்லதாகப் போயிற்று. நாம் நன்றாக வாழ்வதற்குத் தேவையான செல்வம் இந்தக் கூடையிலே நிறைய இருக்கின்றன என்றார் தாத்தா.

அதைக் கேட்டு பாட்டி ஆத்திரத்துடன்சொன்னாள்,

நீங்கள் ஒரு முட்டாள். பெரிய கூடையை எடுத்து வந்திருந்தால் நமக்கு இன்னும் நிறையச் சொத்து கிடைத்திருக்கும்!

பெரிய கூடையை எடுத்து வராததற்காக அன்று இரவு முழுவதும் தாத்தாவைத் திட்டிக் கொண்டே இருந்தாள் பாட்டி.

மறுநாள் பொழுது விடிந்தது. பாட்டி குருவியைத் தேடிப் புறப்பட்டாள். தாத்தா சொன்ன அடையாளங்களை வைத்து அவள் குருவி யின் வீட்டைக் கண்டுபிடித்தாள். குருவி அவளை அன்புடன் வரவேற்றது. ஆனால், பாட்டியோ, எனக்கு வீட்டில் நிறைய வேலை இருக்கிறது. உடனே போக வேண்டும். அந்தப் பெரிய கூடையைக் கொடு! என்று உத்தரவிட்டாள்.

குருவி பெரிய கூடையைக் கொண்டு வந்து பாட்டி முன்னால் வைத்தது. நன்றி கூடச் சொல்லாமல் அந்தப்பெரிய கூடையை எடுத்துக்கொண்டு அவசரமாகப் புறப்பட்டாள் பாட்டி. ஒருமறைவான இடத்தில் வைத்து கூடையின் மூடியைத் திறந்து பார்த்தாள்.

மூடியைத் திறந்த உடனே அந்தக் கூடையில் இருந்து நிறையக் குட்டிப் பிசாசுகள் வெளியே வந்தன. அவை பாட்டியைச் சுற்றிலும் நின்று, துள்ளி ஆடத் தொடங்கின. பாட்டி பயந்து அலறினாள். எப்படியோ அந்தக் குட்டிப் பிசாசுகளிடமிருந்து தப்பித்து வீட்டை அடைந்தாள். நடந்ததைத் தாத்தாவிடம் சொன்னாள்.

நீங்கள் செல்லமாக வளர்த்த குருவி செய்ததைப் பார்த்தீர்களா? என்று கோபமாக கேட்டாள்.

தாத்தா மிகவும் பொறுமையாகச் சொன்னார். நீ அந்தக் குருவிக்குச் செய்த கொடுமைகளை நினைத்துப்பார்.

ஆனால், அதை எல்லாம் மறந்து, அந்தக் குருவி உன்னை அன்புடன் வரவேற்றது அல்லவா? அப்போதும் நீ உன் பேராசையால் எல்லா மரியாதைகளையும் மறந்து விட்டாய். அதன் தண்டனையைத்தான் நீ அனுபவித்தாய்!

மரியாதையும் அன்பும் இல்லாமல் நடந்து கொண்டதால்தான் குட்டிப் பிசாசுகள் தன்னைத் துன்புறுத்தின என்று பாட்டிக்குப் புரிந்தது.

பிறகு, தாத்தாவுக்குக் கிடைத்த கூடையிலிருந்த செல்வத்தைக் கொண்டு அந்தக் குடும்பம் மகிழ்ச்சியாக வாழ்ந்தன.

06.2015
23

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1532 - இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியும் பிரான்சின் முதலாம் பிரான்சுவாவும் புனித ரோமப் பேரரசின் ஐந்தாம் சார்ல்சுக்கு எதிராக இரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.
- 1565 - மால்ட்டா மீதான முற்றுகையின்போது ஒட்டோமான் பேரரசின் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டான்.
- 1658 - இலங்கையில் போர்த்துக்கேயரின் கடைசிப் பிடியாக இருந்த யாழ்ப்பாணக் கோட்டையை டச்சுக்காரர் கைப்பற்றினர்.
- 1757 - இந்தியாவில் பலாசி என்ற இடத்தில் வங்காளத்தின் கடைசி நவாப் சிராஜ் உல் டாவுலா தலைமையிலான இந்திய இராணுவத்தினரை பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் தோற்கடித்தனர்.
- 1758 - ஏழாண்டுகள் போர்: பிரித்தானியப் படைகள் ஜேர்மனியில் கிரெஃபீல்ட் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகளை வென்றனர்.
- 1760 - ஏழாண்டுகள் போர்: ஆஸ்திரியா புரூசியாவை வென்றனர்.
- 1794 - உக்ரேனின் கீவ் நகரில் யூதக் குடியேற்றத்துக்கு ரஷ்யாவின் பேரரசி இரண்டாம் கத்தரீன் அனுமதி அளித்தாள்.
- 1868 - கிறிஸ்தோபர் ஷோல்ஸ் தட்டச்சியந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1894 - பன்னாட்டு ஒலிம்பிக் அமைப்பு பாரிசில் அமைக்கப்பட்டது.
- 1919 - எஸ்தோனியாவின் விடுதலைப் போரில் வடக்கு லாத்வியாவில் செசிஸ் என்ற இடத்தில ஜேர்மனியப் படைகள் தோற்ற இந்நாள் எஸ்தோனிய வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: முதன் முதலாக அவுஷ்விட்ஸ் வதை முகாமில் நச்சு வாயு அறையில் சேர்ப்பதற்காக முதல் தொகுதி யூதர்கள் பாரிசிலிருந்து தொடருந்தில் அனுப்பப்பட்டனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் போர் விமானம் ஒன்று தவறுதலாக வேல்சில் தரையிறங்கியபோது கைப்பற்றப்பட்டது.
- 1945 - ஜப்பானிய இராணுவத்துக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஒகினவா சண்டை அமெரிக்காவின் வெற்றியுடன் முடிவடைந்தது.
- 1956 - கமால் நாசர் எகிப்தின் ஜனாதிபதியானார்.
- 1960 - பத்திரிசு லுமும்பா கொங்கோ குடியரசின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் ஆனார்.
- 1990 - மல்தாவியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலையை அறிவித்தது.

### பிறப்புகள்

- 1924 - ரணசிங்க பிரேமதாசா, இலங்கை ஜனாதிபதி (இ. 1993)

### இறப்புகள்

- 1925 - சர் பி. தியாகராய செட்டி, திராவிட அரசியல் தலைவர், (பி. 1852)
- 1980 - வி. வி. கிரி, இந்தியாவின் 4வது குடியரசுத் தலைவர் (பி. 1894
- 1980 - சஞ்சய் காந்தி, இந்திய அரசியல்வாதி (பி. 1946)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

…ரஜினிக்கு ஒரு இமேஜ் உண்டு. அவரிடம் ரசிகர்கள் நிறைய எதிர்பார்ப்பார்கள். அதே மாதிரி, என் படங்கள் பற்றியும் ரசிகர்களிடம் எதிர்பார்ப்புக்கள் உண்டு. இருதரப்பு ரசிகர்களையும் திருப்திப்படுத்தும் விதத்தில் இப்படம் இருக்கும். அதாவது இது ரஜினி படமாகவும் இருக்கும் ஷங்கர் படமாகவும் இருக்கும்.

ரஜினிக்கு எந்தவிதமான கெட்டப் இருக்க வேண்டும் என்பதில் தீவிர கவனம் செலுத்தினோம். அதாவது, ரஜினி பல படங்களில் - பல்வேறு தோற்றங்களில் நடித்த ஸ்டில்களை எல்லாம் சேகரித்தோம். அவருக்கு எந்த மாதிரி உடை நன்றாக இருக்கும்? எந்த மாதிரி 'வீக்' ஆக இருக்கும்? என்றெல்லாம் யோசித்து, உடைகளை தேர்ந்தெடுத்தோம்.

"பில்லா" காலத்தில் ரஜினி எப்படி இருந்தாரோ அத்தகைய தோற்றத்துடன், இளமையாக இப்படத்தில் ரஜினி தோன்றுவார்.

இந்தியாவின் மிகப்பெரிய டெக்னீஷியன்கள், இந்தப்படத்தின் வெற்றிக்காக உழைத்திருக்கிறார்கள். ரஜினி இதுவரை நடித்திராத புதிய கேரக்டர்களில் நடித்திருக்கிறார்.

இவ்வளவு பெரிய நடிகர், ஒரு புது நடிகர் போல ஒத்துழைப்பு தந்தார். மிக அதிக நாள் நடித்தார். ஆனால் படப்பிடிப்பு முடிந்தபோது, "நேரம் போனதே தெரியவில்லை" என்றார்.

"சஹாரா பூக்கள் பூத்ததோ" என்ற வைரமுத்துவின் பாடல் காட்சிக்காக, இதுவரை இல்லாத அளவுக்கு கண்ணாடியிலேயே 'செட்' போட்டோம். கண்ணாடி செட் போடுவதும் சரி, அதில் படபபிடிப்பு நடத்துவதும் சரி ரொம்ப சிரமமானது.

"லைட்டிங்" பண்ணக்கூட முடியாது. எல்லா இடத்திலேயும், பிரதிபலிப்பு ஏற்படும். முதலில் தயங்கிய கே.வி.ஆனந்த், பிறகு அதையெல்லாம் சமாளித்து படம் எடுத்திருக்கிறார்.இதேபோல், "வாஜி வாஜி, சிவாஜி" பாட்டுக்காக ஐதரபாத்தில் ஒரு பெரிய அரண்மனை செட்போட்டோம். அவ்வளவு பிரமாண்டமான 'செட்' போட வேறு எங்கேயும் புளோர் (படப்பிடிப்பு தளம்) கிடையாது. இதுவரை எந்தப் படத்துக்கும், இவ்வளவு நுணுக்கமான-பிரமாண்டமான 'செட்' போடப்பட்டதே இல்லை. படப்பிடிப்பை நடத்திய எனக்கே அந்த பிரமிப்பு இன்னும் நீங்கவில்லை.

அந்த செட்டை ரொம்ப அற்புதமாக போட்டிருக்கிறார், தோட்டா தரணி. இதற்காகவே, அவருக்கு




தேசியவிருது கிடைக்கலாம்.

சிவாஜி படத்தின் கதை பற்றி பல்வேறு ஊகங்களும், கற்பனைகளும் பத்திரிகைகளிலும வருகின்றன.

நாட்டுக்கு நல்லது செய்ய நினைக்கும் ஒருவர் பலவித கஷ்டங்களையும், தடைகளையும் மீறி ஜெயிப்பதுதான் கதை.

படத்தின் முன்பகுதியில் கதையும், காமெடியும் இருக்கும். பிற்பகுதி அதிரடியாக இருக்கும், இவ்வாறு ஷங்கர் கூறினார்.

**ரஜினி "சுயதரிசனம்"**

"தமிழ் மக்களின் நெஞ்சங்கள், ஈரம் உள்ள இரும்பு நெஞ்சங்கள். அந்த நெஞ்சுக்குள்ளே போவது தான் கஷ்டம். ஒரு தடவை உள்ளே போயிட்டா, யாரும் வெளியே எடுக்க முடியாது."

**சூப்பர் ஸ்டாரின் சூப்பர் குடும்பம்**

சூப்பர் ஸ்டார் ரஜினி - லதா தம்பதிகளுக்கு 2 மகள்கள். இரு மகள்களுக்கும் திருமணமாகி, குழந்தைகள் உள்ளன.

திரை உலகில் எதிர் நீச்சல் போட்டு,சூப்பர் ஸ்டாராக உயர்ந்த ரஜினியின் திருமணம் 26-2-1981 அன்று திருப்பதியில் நடந்தது. மணமகள் லதா, நடிகர் ஒய்.ஜி. மகேந்திரனின் மைத்துனி.

திருமணத்தின்போது, லதா சென்னை எத்திராஜ் கல்லூரியில் "பி.ஏ" இறுதி ஆண்டு படித்துக் கொண்டு இருந்தார். திருமணத்துக்குப்பிறகும், 2 மாதம் தொடர்ந்து கல்லூரிக்குச் சென்று படித்து, பரீட்சை எழுதி, "பி.ஏ" பட்டம் பெற்றார்.

**"ஜில் லு"**

இனிய சுபாவமும், கருணை உள்ளமும் கொண்டவர், லதா. அவ்ரை ரஜினி செல்லமாக "ஜில்லு" என்று அழைப்பது வழக்கம்.


லதா இனிமையாகப் பாடக் கூடியவர். சில படங்களில் பாடியிருக்கிறார்.

குழந்தைகளுக்கு உயர்தர கல்வியை போதிக்க வேண்டும் என்ற லட்சியத்துடன் "ஆஸ்ரம்" என்ற பள்ளியை நடத்தி வருகிறார்.

**2 மகள்கள்**

ரஜினி - லதா தம்பதிகளுக்கு, மூத்த மகள் ஐஸ்வர்யா 1982 ஜனவரி 1-ஆம் திகதி பிறந்தார.

(தொடரும்..)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-170

பயப்படாத பொழைக்க வந்தவ பொழைச்சுட்டு போ. ஆனா ஒன்னியக் கையெடுத்துக் கும்பிடறேன் தாயி… பொழைக்கவிடு. கெழவனைக் கட்டிலோட சேர்த்துக் கட்டிப்புட்ட. புருசனை முந்தாகையில முடிஞ்கு மூலையில வைச்சுக்கிட்ட. சடையத்தேவன் வீட்டுத் தாணியத்தை விட்டெரிஞ்சு உள்ளூருக் கோழிகள எல்லாம் உன் வீட்டு வாசல்ல குமிச்சுட்ட. போ; பொழைச்சுப்போ. ஆனா எம் பிள்ளையமட்டும் எங்கிட்டயிருந்து பிரிச்சிராத.

கையெடுத்துக் கும்பிட்டா கருவாச்சி. கலங்கி ஒழுகுது கண்ணு அவளுக்கு. முந்தானைய எடுத்துக் கண்ணத் தொடைக்கப் பேனா… அதுல எட்டியிருந்த இண்டம் முள்ளு ஒண்ணு கிழிஞ்சிருச்சு இடது கண்ணுக்குக் கீழ.

ஒரு பேச்சும் பேசாம வெறிச்ச பார்வை வெறிச்ச மேனிக்கு நிக்கிறா திம்சுங்கிற பேயம்மா.

கத தெரிஞ்சு போச்சு இவளுக்கு. என்னைக்கிருந்தாலும் காட்டிக்குடுத்துருவா. கருவறுக்க வேண்டிய கணக்குல இவளையும் சேத்துக்கிர வேண்டியதுதான். தீரயேசிச்சு முடிவு பண்ணிட்டா திம்சு.

"என் கத எல்லாமே தெரியுமா உனக்கு."

"உடம்பு அசையாம ஒதடு மட்டும் அசையுது அவளுக்கு."

"தெரியும்" கண்ணத் தொடச்சுக்கிட்டே சொல்றா கருவாச்சி.

"ஒனக்குத் தெரியாத ஒருகதையும் சொல்லட்டுமா?

பதறிப்போன கருவாச்சி "என்னா கதையடி ஆத்தா" ன்னு கேட்டா வெறகுக் கட்டத்தாங்கிக்கிட்டே.

"அழகுசிங்கம் பொண்டாட்டி இப்ப முழுகாம இருக்கா."

வெறகுக் கட்ட விட்டுட்டு ரெண்டு கையையும் நெஞ்சிலடிச்சு 'யாத்தே'ன்னு அலறினா கருவாச்சி. ஓடி உருண்டு ஊருணியில விழுந்து போச்சு வெறகுக்கட்டு.

சத்தம் கேட்டுக் 'கர்ர புர்ர கர்ர புர்ர'ன்னு கத்திக்கிட்டே பறக்குது கரையோரத்து நாரைக.

பயத்தில தவ்வி ஓடி ஒரு தண்ணிப் பாம்பு வாயில விழுந்து போச்சு தவக்கா.

காட்டாறு மாதிரி கட்டுக் கடங்காமத் திரிஞ்ச அழகு சிங்கம் திம்சு வெட்டுன பள்ளத்துல போய் விழுந்ததுல ஆச்சரியமில்ல.

அனாதி காலந்தொட்டுப் பள்ளத்துக்கும் வெள்ளத்துக்குமான ஒப்பந்தம் இயற்கையாய் பாத்து ஏற்படுத்துனதா? இல்லையா?

சோறு - மல்லிகப்பூவு- இந்த மூணும்பத்தாதா?

அழகுச்சிங்கத்துக்கு இந்த மூணுக்கும் பஞ்சமில்லாத படிக்கு ஒரு ஏற்பாடு பண்ணிப்புட்ட திம்சு.

சித்தெறும்பக் கொண்டு மாடு தொழுவடைய சலவைக்காரி வீட்டுல சந்திச்சுக்கிட்டாக நல்லத்தாளும் மகனும். வெல்லம் போட்டு இடிச்ச எள்ளுத் தொக்குன்னா வீட்ட



ஒரு கிராமத்துல வெள்ளிந்தியா அலஞ்சு திரியிற வெடலப் பயலுக்கு லட்சியம்ன்னு என்ன பெரிசா இருந்தரப் போகுது? வெளிச்சம் - நெல்லுச் போயிச் சீனிப்பொட்டிக்குள்ள ஒளிச்ச மாதிரி அவனுக்கு வசதி உண்டாக்கி வளச்சுப் போட்டுட்டா.

நடந்த ரெண்டு மூணு மாசமாவே அந்திமசங்க ஆடு அடகு வைச்சிருப்பான் பய. அது தெரியும் அவளுக்கு. இடிச்சுக் கொண்டாந்த எள்ளுத் தொக்க உருட்டி உருட்டி உருண்ட புடிச்சு ஊட்டி விட்டுக்கிட்டே ஒருநாள் சொன்னா… (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உடல் நலத்திற்கு மதுபானம் எப்போதும் தீங்கானது

இன்று போதைப்பொருள் எதிர்ப்புத்தினமாகும்.உலகெங்கும் உள்ள மக்கள் இன்றைய தினத்தை நினைவு கூர்ந்து வருகின்றார் கள். அந்த வகையில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் இன்றைய தினத்தை நினைவுகூர்ந்து இக்கட்டுரையை தருகின்றது.

இன்று உலகெங்கும். நிகழும் கொடூரச் செயல்களும் வன்முறைச் சம்பவங்களுக்கும் பயங்கரவாதங்களுக்கும் கலாசார சீரழிவுகளுக்கும் காரணம் மதுவின் பாவனையே. இன் றைய நூற்றாண்டில் உலகின் எல்லாப் பகுதியிலும் வாழும் மக்களால் அதிகம் பாவிக்கப்படும் பானம் தான் மது.

குடி குடியைக் கெடுக்கும் என்றொரு பழமொழி உண்டு. இம் மொழி எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். மதுவுக்கு அடிமையாகினால் தமது உறவுகளை மறந்து சொத்து சுகங்களை இழந்து நடுவீதிக்கு கொண்டுவந்துவிடும். பொதுவாக மது பானம் அருந்தும் தவறான பழக்கங்களை உடைய ஆண்களாலேயே எமது சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தலைவிரித்து ஆடுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. மது அருந்துவதால் தாம் நேசிக்கும் மனைவி, பிள்ளைகளை மற்றும் தாய்,தந்தையரை துச்சமாகக் கருதும் அளவிற்கு மது அவர்களை ஆட்சி புரிகின்றது. சில வேளைகளில் மனம் விரும்பி திருமணம் புரிந்த மனைவியைக் கூட இவர்கள் மிக மோசமான முறையில் அடித்து துன்புறுத்துவதுடன் கொலையும் செய்யும் அளவிற்கு தூண்டுவது தான் மது.

நோயற்ற வாழ்வே உலகில் உயர் வான சுகம்.எனவே இந்த சுகத்தை நாம் எல்லோரும் அனுபவிக்க வேண்டுமாயின் போதைப்பொருட்களை நாம் நாடவே கூடாது. கெட்ட நண்பர்களுடன் பழகுவதன் மூலம் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதைத் தவிர்த்து சிறந்த முறையில் கல்வி கற்று நற்பிரஜைகளாக வாழ மாணவர்கள் முயற்சிக்கவேண்டும். பிள்ளைகளை பெற்றோர்கள் பாடசாலைக்கு அனுப்புவது நற்பிரஜைகளாக வருவதற்கே.

மாணவர்கள் சிறு வயதில் நான் டாக்டராக, சட்டத்தரணியாக, பொறியியலாளராக, ஆசிரியராக வருவேன் எனக் கூறுவார்கள். இவற்றுக்கெல்லாம் நாம் போதை வஸ்துக்களை நாடினால் பட்டம் பதவிகளை பெறமுடியுமா? மேலும் பல்கலைக்கழகங்களுக்கு முன்னால் செல்லும்போது நாம் இங்கே கல்வி கற்க வரவேண்டுமென்று ஆசைப்படுகின்றார்கள்.ஆனால் கெட்ட பழக்கவழக்கங்களினாலும் போதைப் பொருளுக்கு அடிமைப்படுவதனாலும் அந்த இலக்கை அடைய முடியாமல் போகின்றது. இதற்கெல்லாம் காரணம் மதுபானம் தான்.

பிள்ளைச்செல்வங்களே இந்த நாட்டின் வளங்கள். ஏனவே நற்பிரஜையாக வாழவும் நாட்டிற்கு நற்பெயர் வாங்கவும் போதைப் பொருள் பாவனையில் இருந்து விலகிக் கொள்ளவேண்டும்.

எமது நாட்டை பொறுத்த மட்டில் சுமார் 50இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் தினமும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்படுகின்றன என்று புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறுகின்றன. இதனைத் தடுப்பதற்கும் போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கும் விசேட பிரிவுகள் ஏற்படுத்தி போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் புதிய திட்டங்களை வகுக்கவும் போதைப்பொருள் விற்பனையைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும்.மேலும் போதைப் பொருள் பாவனையால் உலகெங்கும் வருடம் தோறும் ஒருகோடி மக்கள் நோய் வாய்ப்பட்டு மரணிக்கின்றார்கள்.

மேலும் இந்த எண்ணிக்கை வருங்காலங்களில் கூடிச் செல்ல வாய்ப்புண்டு.மேலும் அநேகமாக 25-45 வயதிற்குட்பட்டவர்கள் தான் போதைப்பொருட்களுக்கு அடிமையாகின்றார்கள்.இந்த வயதினைத் தாண்டினால் பெரும்பாலும் பாவனையில் நாட்டம் கொள்ளப்படமாட்டார்கள்.




இலங்கையில் கடந்த 2003 ஆம் ஆண்டில் 3,225,714 லீற்றர் சாராயம் உற்பத்தி செய்யப்பட்டு இருந்த அதேவேளை 2004 இல் இது 34,568,427 லீற்றராக அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேலும் இலங்கையில் ஹெரோயினுக்கு அடிமையாகிறவர்களின் தொகை ஒரு இலட்சத்தையும் தாண்டியதாக புள்ளிவிபரம் எடுத் துக் காட்டுகின்றது. மேலும் குடி நோயால் ஆண்களில் 25 சத வீதத்தினர் வரையும் பெண்களில் 5 சதவீதம் தொடக்கம் 8 சதவீதம் வரை எமது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.மேலும் விலைமாதர்களில் 80 சதவீதத்தினர் குடிப்பவர்கள் என்று புள்ளி விபரம் எடுத்துக்கூறுகின்றது.

மது புலனைப் பறிக்கும், நலனைப் பறிக்கும்,நோயை வளர்க்கும் ஈற்றில் உயிரைக் குடிக்கும். ஒருவன் அருந்தும் மதுவில் 10 சதவீதம் தான் சுவாசிப்பதன் மூலமும் வியர்வை மூலமும் சிறுநீர் கழிப்பதன் மூலமும் வெளியேறுகின்றன. மிகுதி 90 சதவீதமும் இரத்தத்துடன் இரண்டு மணித்தியாலத்திற்குள் கலக்கின்றது.மேலும் கருவுற்ற 3 மாத கால இடைவெளியில் மது அருந்தினால் உடல் உள ஊனமுற்ற பிள்ளைகள் பிறக்கும்.

மதுவுக்கு அடிமையாவதற்கான காரணங்களை நாம் நன்கு ஆராய்தல் வேண்டும்.

1.தந்தை எவ்வழியோ தனையனும் அவ்வழி என்பதற்கு அமைய தந்தை வழி காட்டுகின்றார்.

2: உளவியல் ரீதியாக தாழ்வு மனப்பான்மை ஏற்படும் பொழுது.

3.சமூகப் பிரச்சினைகள் காரணமாக.

4.திருமணம் நிறைவேறாமல் இருப்பது.

5.பாலியல் ரீதியான பிரச்சினைகளால்

6.குடும்பங்களில் பிரச்சினை ஏற்படும் வேளைகளில்.

7.பணக்கஷ்டங்கள் ஏற்படும் பொழுது.

8.சட்ட விரோத செயல்களான கொலை,களவு.

9.வேலைவாய்ப்பு கிடையாமையான காரணங்களுக்கு மதுவை நாடுகின்றார்கள்.

மது அருந்துவதினால் பல இழையங்களும் அங்கங்களும் உடல் தொழிற்பாடுகளும் பாதிப்படைகின்றன. அவையாவன:-

1.உணவு கால்வாய்த் தொகுதி பாதிக்கப்படல்.
2.இதய சுற்றோட்டத் தொகுதி.
3.சதை அழற்சி
4.அனுசேபத்தாக்கங்கள்
5.நரம்புத் தொகுதி.
6.செங்குழிய உற்பத்தி.
7.என்புத் தொகுதி.
8.சுவாசத்தொகுதி.

போன்றவைகள் பாதிக்கப்படுகின்றன.

மதுபானத்தை சடுதியாக குறைக்கும் போது அல்லது முற்றாக நிறுத்தும் போது உடலில் சில உபாதைகள் ஏற்படவாய்ப்புண்டு.

1.நடுக்கம் ஏற்படுதல்
2.நெஞ்சு படபடத்தல்.
3.மிகையாக வியர்வை சிந்துதல்.
4.கைகால்கள் நடுக்கம் ஏற்படுதல்
5.உயர் குருதி அழுத்தம்
6.ஓங்காளம்,வாந்தி ஏற்படுதல்.
7.வலிப்பு ஏற்படுதல்
8.தலைவலி ஏற்படுதல்.
9.மறதி ஏற்படுதல்.
10.சோர்வு ஏற்படுதல்.
11.பார்வை மங்குதல்,காது கேட்பது குறைதல் போன்றவை ஏற்படும்.

எனவே மதுவிற்கு அடிமையாவதிலிருந்து விடுபடுவதற்கு ஏற்ற சிறந்த சிகிச்சை முறையானது உளவியல் ரீதியிலான சிகிச்சை முறையாகும். இதற்குத் தகுந்த ஓர் மனோதத்துவ நிபுணரை அணுகி அவருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி முழுமனதுடன் சிகிச்சை பெறுவார்களேயானால் நிச்சயமாக அவர்களால் மதுவிலிருந்து விடுபடுவதுடன் வைத்திய ஆலோசனையின் படி மருந்துகளையும் பயன்படுத்தி வந்தால் மதுவிலிருந்து விடுபட்டு நற்பிரஜையாக மக்கள் மத்தியில் வாழ முடியும் என்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் கேட்டுக்கொள்கின்றது.

செ.குமாரசிங்கம் (JP)
செயலாளர்,வடபிரதேச
நல்லொழுக்க
சம்மேளனம்.

# நீரிழிவு நோய் சிக்கலிலிருந்து விடுபட முடியும்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**வெள்ளை ராகி சுக்கா ரொட்டி**

தேவையான பொருட்கள்

வெள்ளை ராகி மாவு- 1கப், பச்சை மிளகாய் -1, மிளகு -1/2 தேக்கரண்டி, உப்பு, பெருங்காயம்- தேவையாள அளவு, நறுக்கிய வெங்காயம்-பாதி.

*செய்முறை:*

பச்சை மிளகாய், வெங்காயம் இரண்டையும் மைய அரைத்துக் கொள்ளவும். இதோடு உப்பு, மிளகு, பெருங்காயம் மூன்றையும் ராகி மாவோடு சேர்த்து தண்ணீர் குறைவாகத் தெளித்து உருண்டையாக்கி முக்கோண வடிவில் தேய்த்துக் கொள்ளவும். அதன்மீது ராகி மாவை இலேசாகத் தூவி தணலில் அல்லது கேஸை சிம்மில் வைத்து வாட்டி எடுத்துக் கொள்ளவும். இது இரவு நேர சாப்பாட்டுக்கு ஏற்றது.

**சம்பா கோதுமை ஸ்டீம்டு பால்ஸ்**

தேவையான பொருட்கள்

சம்பா கோதுமை-100 கிராம், கடுகு -1/2 தேக்கரண்டி, கறிவேப்பிலை-சிறிதளவு, காய்ந்த மிளகாய்-2, வெங்காயப் பொடி-1/4 தேக்க ரண்டி, நறுக்கிய பெரிய வெங்காய்-1, உப்பு -தேவையான அளவு, நல் லெண்ணெய் -1 தேக்கரண்டி

*செய்முறை:*

சம்பா கோதுமையை மிக்ஸியில் பொடித்துக் கொள்ளவும். அதை சலித்து தேவையான உப்பு சேர்த்து வைக்கவும்.வாணலியில்எண்ணெயை சூடாக்கி கடுகு, கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய் தாளித்து வெங்காயம் போட்டு வதக்கவும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்துக் கொள்ளவும். (100 கிராம் கோதுமைக்கு 2 டம்ளர் தண்ணீர் போதும்) வதக்கிய வெங்காயக் கலவையை மாவுடன் சேர்த்து அடுப்பில் வைத்து தண்ணீரை சிறிது சிறிதாக ஊற்றி மாவைக் கலக்கவும். மாவு கெட்டியாக வந்ததும் அடுப்பை நிறுத்தி மாவோடு பெருங்காயப் பொடி சேர்த்து சிறுசிறு உருண்டைகளாகப் பிடிக்கவும். இட்லி வேக வைப்பது போல் இட்லிக் குண்டானில் இந்த உருண்டைகளை ஆவியில் வேக வைக்கவும். மாலை நேரத்திற்கு ஏற்ற சிற்றுண்டி இது.

**வெந்தயக்கீரை தாளிப்பு இட்லி**

தேவையான பொருட்கள்

சிறிய கட்டு வெந்தயக்கீரை-1, சாம்பார் வெங்காயம்-5, பச்சை மிளகாய்-2, பெருங்காயம்-தேவையானளவு, மோர்-தேவைக்கு, உப்பு- தேவையான அளவு, கோதுமை மாவு-50கிராம், கடுகு-1/2 தேக்கரண்டி, கறிவேப்பிலை-சிறிதளவு, நல்லெண்ணெய்-1/2தேக்கரண்டி

*செய்முறை:*

கடாயில் எண்ணெயை சூடாக்கி கடுகு,கறிவேப்பிலை தாளித்துக் கொள்ளவும்.அதோடு வெங்காயம், கீரையை போட்டு நன்றாக வதக்கி, கீரை நன்கு வதங்கியதும் பச்சை மிளகாயைப் போட்டு வதக்கி அடுப்பை நிறுத்திவிடவும். இந்தக் கலவையை ஆற வைத்து மிக்ஸியில் நன்கு அரைத்துக்கொள்ளவும். கோதுமை மாவோடு உப்பு, கீரை விழுதைக் கலந்து மோர் சேர்த்துக் கரைத்துக் கொள்ளவும். மாவு இட்லி பதத்தில் இருக்கவேண்டும். இட்லிகளாக ஊற்றி ஆவியில் வேக விடவும்.

**சோயா சங்ஸ் கிரேவி**

தேவையான பொருட்கள்:

சோயா சங்ஸ்-1/4கிலோ, இஞ்சி, பூண்டு விழுது-1 மேசைக்கரண்டி, விழுதாக்கிய தக்காளி-3, மஞ்சள் தூள்,மிளகு -தலா 1/4 தேக்கரண்டி, உப்பு-தேவையான அளவு, காய்ந்த மிளகாய்-2, நல்லெண்ணெய்-1தேக்கரண்டி, கொத்தமல்லி-தேவையான அளவு, விழுதாக்கிய வெங்காயம்-1

*செய்முறை:*

சோயா சங்ஸை அரைமணி நேரம் ஊற வைத்து வடிகட்டி எடுத்து கொதிக்க வைத்த தண்ணீரில் வேக வைத்து வடிகட்டிக் கொள்ளவும். கடாயில் நல்லெண்ணெய் ஊற்றி, வெங்காய விழுதை வதக்கி மஞ்சள், உப்பு,காய்ந்த மிளகாய், மிளகு இஞ்சி,பூண்டு விழுது சேர்த்து வதக்கி இதோடு தக்காளி விழுதை ஊற்றிக் கொள்ளலாம்.இதில் வேகவைத்து எடுத்து வைத்துள்ள சங்ஸையும் போட்டு கொதிக்க விடவும். கொத்தமல்லி தூவி இறக்கவும். சப்பாத்திக்கு தொட்டுக் கொள்ள ஏற்றது.

**ராகி அடை**

தேவையான பொருட்கள்

கறுப்பு ராகி மாவு-1கப், நறுக்கிய வெங்காயம்-1, காய்ந்த மிளகாய்-2, பெருங்காயம்- 1/2 ஸ்பூன், நல்லெண்ணெய்-1 1/2 ஸ்பூன், கடுகு, கறிவேப்பிலை-தாளிக்க தேவையானது, கொதிக்கவைத்ததண்ணீர்-2கப்.

*செய்முறை*

எண்ணெயில் கடுகு,கறிவேப்பிலை, பெருங்காயத்தைத்தாளித்து வெங்காயத்தை வதக்கவும். அதோடு ராகி மாவு,உப்பு சேர்த்து கொதிக்க வைத்த தண்ணீரை அதில் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி மாவை நன்றாகக் கிளறவும்.மாவு களி பதத்திற்கு வந்தவுடன் அடுப்பை நிறுத்தி விடவும். பெரிய எலுமிச்சங்காய் அளவு உருண்டைகளாக மாவை உருட்டிக் கொள்ளவும். கையில் கொஞ்சம் எண்ணெய் தடவிக்கொண்டுஇலையிலோஅல்லது பிளாஸ்ரிக் ஷீட்டிலோ அடை போலத்தட்டி நான் ஸ்டிக் பானில் சுட்டு எடுக்கவும்.இது ஒரு மாலை நேர சிற்றுண்டியாகும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டுக்களை வீரதுங்க நிராகரிப்பு

**ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் உதயங்க வீர துங்க விசேட ஊடக அறிக்கையொன்றின் மூலம் தன்மீதான குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.**

உக்ரேன் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விநியோகித்தமை, ரஷ்யாவுக்கான இலங்கை தூதரகத்தில் பணியாற்றிய நொயெல் ரணவீரவின் மரணம் தொடர்பாக முன்னாள் தூதுவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தாம் தொடர்பில் உக்ரேனில் எந்தவிதமான குற்ற விசாரணைகளும் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார். இவ்வாறான போலியான குற்றச்சாட்டுகளை உக்ரேன் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

அதேவேளை. இந்தியாவில் உள்ள உக்ரேன் தூதுவரும் இந்த குற்றச்சாட்டு உண்மையானதல்ல என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சின் செயலாருக்கு அறிவித்துள்ளார்.

இந்தநிலையில், முன்னாள் ரஷ்ய தூதுவர் உதயங்க வீரதுங்க தற்போது உக்ரேன் தலைநகர் கிவ்வில் வசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

நாட்டிலுள்ள ஒவ்வொருவரும்

## மகிந்த ஆட்சியில் ஏற்பட்ட வீண்விரயத்தினால் 4,20,000 ரூபா வெளிநாடுகளுக்குக் கடன்

(கொழும்பு)

மகிந்த அரசாங்க காலத்தில் இந்த நாட்டில் இடம்பெற்ற பாரிய வீண்விரயம் காரணமாக நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வெளிநாடுகளுக்கு கடனாளியாகியுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இவ்வாறான பாரிய வீண்விரயங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுமே பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இரத்தினபுரி நிவித்திகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 100 நாட்களுக்குள் நாங்கள் மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் குறித்து மக்களுக்கு போதுமான தெளிவூட்டல்கள் வழங்கப்படுவதில்லை. இது எங்களது தவறா? அல்லது எமது செயற்பாட்டின் தவறா? என தெரியவில்லை. என்றாலும் நாங்கள் செய்யும் வேலைகள் குறித்து பிரபல்யம் போதாது.

கடந்த காலங்களில் வேலைகள் செய்ததை விட பெயர்ப்பலகைகள் காட்சிப்படுத்தியதுதான் அதிகம். ஒருசில பாதைகளுக்குத் தேவையான பணம் ஒதுக்குவதற்கு முன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில பாதைகளை அமைப்பதற்கு தேவையான பணத்தையும் விட பன்மடங்கு சேர்த்துள்ளனர். இது பாரிய வீண்விரயமாகும். இந்த பணங்கள் அனைத்தும் மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்களுக்கே சென்றடைந்தன.

அதன் காரணமாக நாங்கள் அரசாங்கத்தை உருவாக்கி வீண் விரயங்களை குறைப்பதற்காக தற்காலிகமாக பாதைகள் அமைப்பதை நிறுத்தினோம். வீண் விரயங்களை நிறுத்திவிட்டு மீண்டும் அந்த வேலைகளை ஆரம்பிப்போம். அவ்வாறில்லாமல் நாங்கள் ஒருபோதும் அபிவிருத்திகளை நிறுத்தவில்லை.

எனவே கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற வீண்விரயங்களால் நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வெளிநாடுகளுக்கு கடனாளியாகியுள்ளனர். இதற்கு முன்னாள் ஜனாதிபதியும் அந்த அரசாங்கத்தின் அமைச்சர்களுமே பொறுப்புக் கூறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 150 | 1450 | 140 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 100 | 110 | 100 | 100 | 80 |
| கரட் | 200 | 200 | 180 | 240 | 200 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 30 |
| புடோல் | 100 | 60 | 80 | 70 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 160 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 | 110 | 100 |
| பாகற்காய் | 250 | 180 | 120 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 100 | 100-160 | 140 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 40 | 100 | 100 |
| பயற்றங்காய் | 200 | 200 | 100 | 140 | 150 |
| லீக்ஸ் | 200 | 160 | 200 | 160 | 160 |
| பீற்றூட் | 160 | 120 | 140 | 100-160 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 500 | 600 | 500 |
| போஞ்சி | 250 | 240 | 280 | 300 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 30 | — | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 140 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 160 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 280 | — | 180 |
| முள்ளங்கி | 120 | 60 | 120 | 90 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 410


இலக்கியா நகுலன்




ராஜி சிவகுமார்




தனு தனுசியா




பிரவின் தாஸ்




ராஜா தனு




தர்சன் கவிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "என்னைத் தற்கொலை செய்துவிடுங்கள் ப்ளீஸ்.."

## உலகின் அதிமுக்கிய அறிவுஜீவியாக அறியப்படும் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங்

ஆனால், அவரது இதயம் அதற்கு இடம்கொடுக்கவில்லை. அவரையும் மீறி உடைத்துக் கொண்டு வெளி வந்தது மூச்சுக் காற்று. தன்னால் சுயமாகத் தற்கொலைகூடச் செய்ய முடிய வில்லையே என்ற ஆதங்கத் தில், தனிமைத தீவிலேயே தன்னை இருத்திக் கொண்டார்.


1990 ஆம் ஆண்டு, மனைவி ஜேன் அவ்ரைவிட்டுப் பிரிய, அப் போது ஹாக்கிங்குக்கு செவிலி யராகப் பணிபுரிய வந்திருந்த எலைன் என்கிற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் ஹாக்கிங். நீண்டகாலத் துக்குப் பிறகு மன இறுக்கம் தளர்ந்து சற்றே இயல்புநிலைக்குத் திரும்பி னார். எலைனுடன் 11 ஆண்டுகள் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தார் ஹாக்கிங். ஆனால், அந்தச் சந்தோஷ பந்தமும் 2006 ஆம் ஆண்டு முறிந்தது. அதன் பின் னர் இன்றுவரை தனிமையி லேயே தன் வாழ்க்கையைத் தொடரும் ஹாக்கிங், இப்போது மறுபடியும் தற்கொலை பற்றி பேசியிருப்பதுதான் அனைவரை யும் அதிர்ச்சியடைய வைத்திரு க்கிறது!

"என் இளமைப் பருவத்தில் நீச்சலடித்து மகிழ்ந்ததைப்போல, மறுபடியும் நீந்துவதற்கு மனம் ஏங்குகிறது. என் குழந்தைகள், சிறுவர்களாக இருந்தபோது, அவர் களுடன் இணைந்து விளையாட விரும்பியிருக்கிறேன். ஆனால், என்னை விரும்புவோரிடம்கூட, என் எண்ணங்களை வெளிப்படு த்த இயலாத உடல்நிலையுடன் இருப்பதற்காக வருந்துகிறேன். என்னுடன் பேசுவதற்கு பலரும் நிலை வரும்போது, அடுத்தவருக்குப் பாரமாக இருக்க நேர்ந்தால், அவர் களின் உதவியுடனே தற்கொலை செய்து கொள்ள விரும்பு வேன். ஒருவரை, அவரது விருப்பத்துக்கு மாறாக உயிர்வாழ நிர்பந்திப்பது அபத் தம்!' என்றெல்லாம் புலம்பித் தவி க்கிறார் ஹாக்கிங்.

பால்வீதியில் உள்ள ஒரு நட்சத்திரத்தை ஆராய்வதைப் போல, பெரு வெடிப்பின் ரகசித்தை எழுதுவதைப்போல, பேரண்டத் தின் புதிர்களை அவிழ்ப்பதைப் போல... தன் உடலையும் உயிரை யும் புறப்பொருளாக நிறுத்தி ஆய்வு செய்கிறார் ஹாக்கிங். வாழ்நாள் எல்லாம் மனிதகுலத்துக்கு அதிச யங்களை மட்டுமே பரிசளித்துக் கொண்டிருக்கும் இந்த விஞ்ஞானி, தன் மரணம் குறித்த எண்ணத் தையும் உலகின் அறிவார்ந்த தளத்தின் முன்பு ஆய்வுக்காகக் கிடத்தியிருக்கிறார்!

**கோள் முதல் கருந்துளை வரை...**

இயற்பியலிலும் வானியலிலும நம்பவே முடியாத முடிவுகளை முன்னிறுத்தி, பல புத்தகங்களை எழுதியிருக்கிறார் ஹாக்கிங். அவற்றில் "பெரும் வடிவமைப்பு' (The Grand Design), "காலத்தின் வரலாற்றுச் சுருக்கம்' (A Brief History of Time) ஆகிய இரண் டும் முக்கியமானவை. 1988 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "காலத் தின் வரலாற்றுச் சுருக்கம்' புத்த கம், இதுவரை ஒரு கோடிக்கும் அதிகமாக விற்றிருக்கிறது. இங்கி




ஸிகள், கருந்துளைகள் அனை த்துமே நான்கு அடிப்படை விசை களால் இயங்கிக்கொண்டிருக்கின் றன. பிரபஞ்சம் உருவாகக் காரண மாக இருந்த ஆதிப் பெரு வெடிப் பின்போது (Big bang) இந்த நான்கு விசைகளும் ஒன்றாகி, ஒரு புள்ளியில் அமைதியாக ஒடுங்கியிருந்தன என ஐன்ஸ் டீன் நம்பினார். அதன் அடிப்படை யில், இந்த நான்கு விசைகளை யும் ஒரே கணிதச் சமன்பாட்டுக் குள் கொண்டு வரலாம் என்றும் அவர் நம்பியிருந்தார்.

ஆனால், அந்தச் சமன்பாட் டைக் கண்டுபிடிக்கும் முன்னரே இறந்துவிட்டார். "ஜிலீமீ ஷீக்ஷீஹ் ஷீயீ மீஸ்மீக்ஷீஹ் வலீவீஸீரீ' எனப் படும் அந்தச் சமன்பாட்டைக் கண்டு பிடிக்க பல விஞ்ஞானிகள் முயன்றார்கள். அதில் முக்கியமான வர் ஸ்டீபன் ஹாக்கிங். அதனா லேயே சமீபத்தில் ஹாக்கிங்கின் வாழ்க்கை வரலாற்றை மைய மாக வைத்து எடுக்கப்பட்ட ஹாலி வுட் திரைப்படத்துக்கு 'Theory of everything' எனப் பெயரிட் டார்கள்.

கருந்துளை என்றாலே, தன் அருகில் செல்லும் அனைத்தை யும் தன்னை நோக்கி ஈர்த்துக் கொள்ளும் என்றுதான் அதுவரை பலரும் நம்பியிருந்தார்கள். ஒளி கூட அதன் ஈர்ப்பிலிருந்து தப்ப



முதல் மனைவி ஜேனுடன்...



இரண்டாவது மனைவி எலைனுடன்...




அச்சப்படுகின்றனர். அவர்களின் உரையாடல் என்னை மேலும் வருத்தி விடக்கூடாது என ஒதுங் கிச் செல்கின்றனர்.

அந்த ஒதுக்குதல், என்னை மோசமாகத் துன்புறுத்துகிறது. என்னால் இதற்கு மேல் எது வுமே செய்ய முடியாது என்ற

லாந்தில் வெளியாகும் "சண்டே டைம்ஸ்' இதழின் சிறந்த புத்தக வரிசையில், தொடர்ச்சியாக 237 வாரங்கள் முதல் இடத்திலிருந்து சாதனை படைத்த புத்தகம் இது.

எல்லையில்லா பிரபஞ்சவெளி யில் இயங்கிக் கொண்டிருக்கும் கோள்கள், நட்சத்திரங்கள், கேலக்

முடியாது. ஆகவேதான் அது கருமை யான நிறத்துடன் காணப்படு கிறது என்றும் நம்பப்பட்டு வந் தது.

ஆனால் ஹாக்கிங், "கருந் துளை தன்னருகே செல்லும் அனைத்தையும் உள்ளே இழுக் கும்போது, சில அணுத்துகள் களாகச் சிதைகின்றன. அதனால் ஏற்படும் பெரு வெப்பத்தால் கதிர் வீச்சு உருவாகி, கருந்துளையி லிருந்து வெளிப்படுகிறது' என வேறு பட்ட கருத்தைச் சொன் னார். ஆரம்பத்தில் பல விஞ்ஞானி களால் மறுக்கப்பட்டு, பிறகு படிப் படியாக அனைவரும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டனர்.

**-விகடன்-** (முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதுளை மாவட்ட சம்மேளனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் பதுளை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால வேலை திட்டங்கள் தொடர்பாக கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை அறிவுறுத்தும் நோக்கத்தில் ஜனாதிபதி தலைமையில் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் சம்மேளனங்களின் 12 ஆவது சம்மேளனம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தலுக்கு செல்லாமலேயே பிரதமரை மாற்ற வேண்டும்!

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



(கொழும்பு)

**பொதுத் தேர்தலுக்குச் செல்லாமலேயே பிரதமரை மாற்ற வேண்டும். அதற்கு மிகவும் பொருத்தமானவர் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவே யாவாரென்று பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைக்க வேண்டிய அவசியமில்லை. அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை தீர ஆராய்ந்து நிறைவேற்ற வேண்டும். அது வரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஓரங்கட்டிவிட்டு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை பிரதமராக்கினாலே அரசாங்கத்தின் செயற்பாடுகளை சுமுகமாக முன்னகர்த்த முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலின் போது தேர்தல் முறையின் மறுசீரமைப்பைக் கொண்டு வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்திருந்தால், இன்று அது நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வற்புறுத்தி வருகின்றார்.

பாராளுமன்றத்தை கலைக்க வேண்டுமென்பதற்காக 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முயல்வது நியாயமற்றது. எனவேதான் தேர்தலுக்குச் செல்லாமலேயே பிரதமரை மாற்றுமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோமென்றும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் செய்யப்படும திருத்தம் மிகவும் ஆராய்ந்து நுட்பமான முறையில் கையாளப்பட வேண்டிய விடயமாகும். தேர்தல் மறுசீரமைப்பிற்காக அரசியலமைப்பில் கொண்டு வரப்படவுள்ள 20 ஆவது திருத்தமும் அனைத்து கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் செய்யப்பட வேண்டியதொரு விடயமாகும்.

பாராளுமன்றம் 2016 ஆம் ஆண்டு ஏப்ரலிலேயே முறைப்படி களைய வேண்டும். அதுவரை காலமும் 20 ஆவது திருத்தம் குறித்து தீர ஆராய்ந்து முடிவு எடுக்க எமக்கு கால அவகாசம் உண்டு.

ஆனால் அதற்கு முட்டுக்கட்டையாகவிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நம்பிக்கையில்லா பிரேரணையூடாக ஓரங்கட்டுதல் வேண்டும். அவருக்கு பதிலாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷவே அந்தப் பதவிக்கு பொருத்தமானவராக இருப்பார்.

பிரதமர் ரணில் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல. எனவே அவரை பிரதமர் பதவியிலிருந்து நீக்குவது சிரமமான விடயமல்ல. சமல் ராஜபக்ஷ பிரதமரானால் பிளவு பட்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்று சேருவதற்கு வாய்ப்புக் கிட்டுமென நான் நம்புகிறேன். எவருடனும் பகைமை கொள்ளாது நட்பு பாராட்டும் நபரென்ற வகையில் சமல் பிரதமராவதை பொதுமக்கள் எதிர்க்க மாட்டார்களெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-5)

# தேர்தலில் போட்டியிட பல கட்சிகள் அழைப்பு

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுமாறு பல கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சில கட்சிகளுடன் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தலில் போட்டியிடுவது குறித்தும் எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பது குறித்தும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக கடமையாற்றி வந்த திஸ்ஸ அத்தநாயக்க ஜனாதிபதி தேர்தல் காலத்தில், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தார்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு சுகாதார அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் காலத்தில் அமைச்சர் பதவியை இலஞ்சமாக பெற்றுக் கொண்டதாகவும், போலி கையொப்பங்களை இட்டதாகவும் தெரிவித்து திஸ்ஸ அத்தநாயக்க மீது வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## ஏழுவகை மனிதர்கள்

இந்த உலகத்தில் ஏழுவகையான மனிதர்கள் இருக்கிறார்களாம் என்று டாக்டர் எட்வேர்ட் பாட்ச் என்பவர் சொல்கிறார்.

மனிதர்களின் மனோநிலையின் அடிப்படையில் அவர்களை ஏழுவகையாகப் பிரிக்கலாம் என்கிறார் அவர்.

**முதல்வகை:** பயந்த குணமுள்ளவர்கள். "சேர் மிகவும் பயந்த சுபாவம். வீட்டில் கூட வாயைத் திறக்கமாட்டார். சாப்பிடும்போது மட்டும்தான் கொஞ்சம் வாயைத் திறப்பார்" என்று சொல்கிறோமல்லவா. அவர்களெல்லாம் இந்த ரகம்.

**இரண்டாவது வகை:** சஞ்சலப்படுபவர்கள். எதற்கெடுத்தாலும் கலக்கம்– குழப்பம்– இப்படியே காலம் தள்ளுபவர்கள் பலரை பார்த்திருப்பீர்கள். அவர்களெல்லாம் இந்த ரகம்.

**மூன்றாவது வகை:** யதார்த்த உலகை மறந்து கற்பனை உலகில் மிதப்பவர்கள். இளைஞர்கள்– கவிஞர்கள் இப்படிப் பலர் இருக்கிறர்கள். எப்பொழுது பார்த்தாலும் கற்பனை உலகிலேயே மிதந்து கொண்டிருப்பார்கள். அருகில்போய் என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீங்க என்று கேட்டுப்பாருங்கள். ஓர் அற்பப்புழுவைப் பார்ப்பது போல் உங்களைப் பார்ப்பார்கள்.

அதோ அந்த வானத்து நிலா என்னை வா என்று கூப்பிடுகிறது. எனக்கு விரைவில் ஒருநாள் சிறகுகள் முளைக்கும். சிறகடித்துப் பறந்து செல்வேன். என் செல்ல நிலாவைக் கொஞ்சி விட்டுத் திரும்பி வருவேன் என்பார்கள். கொஞ்சுவது அப்புறம் இருக்கட்டும். இப்ப கஞ்சிக்கு வழியைப் பாரடா என்றால் அதைக் காதில் வாங்கமாட்டார்கள்.

**நான்காவது மனிதர்கள்:** தனிமை உணர்வு மிக்கவர்கள். இவர்களெல்லாம் மற்றவர்களுடன் சகஜமாக நெருங்கிப் பழகுவதில்லை. தானுண்டு தன்வேலையுண்டு என்று செல்பவர்கள். அடுத்தவீட்டில் யார் இருக்கிறார்கள் என்று கேட்டால் கூட அடுத்த வீடு என்று ஒன்று இருக்கிறதா? என்று கேட்பார்கள். அவர்களிடம் மேற்கொண்டு எதைப்பேசுவது.

**ஐந்தாவது வகை மனிதர்கள்:** மற்றவர்களின் செல்வாக்கிற்கு உட்பட மறுப்பவர்கள். அடுத்தவர்களின் செல்வாக்கிற்கு இவர்கள் ஆட்படுவதில்லை. நான் யார் தெரியுமா? என்று கேட்டால் அதைத் தெரிந்து கொண்டு எனக்கு என்ன ஆகப் போகிறது என்பார்கள்.

**ஆறாவது வகை மனிதர்கள்:** எப்பொழுதும் எதிலும் பற்று இல்லாமல் இருப்பவர்கள். இது ஒரு துறவு மனப்பான்மை. இயல்பாகவே சிலபேர் இப்படியுண்டு. அவர்களுக்கு எதிலும் ஒரு ஈடுபாடு இருக்காது.

**ஏழாவது வகை மனிதர்கள்:** மற்றவர்களின் கவலையை தன்னுடையதாக ஆக்கிக்கொண்டு கவலைப்படுபவர்கள். இவர்கள் மகாத்மாக்கள் தான்வேறு அவர்கள் வேறு என்ற எண்ணம் இவர்களுக்கு வருவதில்லை. அதனால் மற்றவர்களுக்கு ஒரு கஷ்டம் வந்தால் அதைத் தன்னுடைய கஷ்டமாக எடுத்துக் கொண்டு கவலைப்படுபவர்கள்.

இப்படி ஏழுவகையான மனிதர்களை அடையாளம் காட்டுகிறார் அந்த நிபுணர். இதில் நாம் எந்தரகத்தில் வருகிறோம் என்பதை நாம்தான் அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் உண்டு.

அவர் வித்தியாசமான ஆள். எதையும் நடைமுறைக்கு சாத்தியமா என்று யோசிப்பவர். நாமும் சந்தோசமாக இருக்க வேண்டும். மற்றவர்களும் சந்தோசமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுபவர்.

அவருக்கு ஒரு சமயம் திடீரென்று உடம்பு சுகவீனமாகி போய்விட்டது.

டாக்டரிடம் போனார். பணம் கொடுத்து வைத்தியம் பார்த்தார். அவர் எழுதிக்கொடுத்த மருந்துச்சிட்டையை வாங்கினார். ஒரு மருந்துக்கடைக்குப்போய் பணம் கொடுத்து மருந்து வாங்கினார். அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போனார்.

அதற்குப்பின் அந்த மருந்தை உட்கொள்ள வேண்டுமல்லவா... அவர் உட்கொள்ளாமல் அப்படியே வைத்து விட்டார்.

நான் அவரைப்பார்த்து ஏன் சேர்... இப்படிச் செய்கிறீர்கள்? வீண் செலவுதானே இது. நீங்கள் ஏன் டாக்டரிடம் போய் பணம் செலவு செய்தீர்கள் என்றேன்.

டாக்டர் வாழவேண்டுமல்லவா அதற்காக என்றார். சரி அதற்குப் பின் ஏன் மருந்து வாங்கினீர்கள்? என்றேன். மருந்துக்கடைக்காரர் வாழவேண்டுமல்லவா? அதற்காக என்றார். சரி அதேன் வாங்கிய மருந்தை சாப்பிடாமல் வைத்திருக்கிறீர்கள் என்றேன்? நான் வாழ வேண்டுமல்லவா? அதற்காக! என்றார் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

## 16.06.2015~16.07.2015

## பணப் புழக்கம் அதிகரிக்கும் நேரம்!



**பணப் புழக்கம் அதிகரிக்கும் நேரம்! விவேகத்துடன் செயற்பட்டு வெற்றி காணும் கும்ப இராசி நேயர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, ராசிநாதன் சனி வக்ரம் பெற்று துலாத்தில் சஞ்சரிக்கின்றார். ராசிநாதன் உச்சம் பெறுவதால் நினைத்ததை நிறைவேற்றும் ஆற்றல் வந்து சேரும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். அனைத்து முயற்சிகளுக்கும் நண்பர்கள் ஆதரவுக் கரம் நீட்டுவர். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

விரயாதிபதியாகவும் சனி விளங்குவதால் வீட்டில் சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். 2 ஆம் இடத்தில் கேது வாக்கு ஸ்தானத்தை பலப்படுத்துகிறது. எனவே, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமலும் போகலாம். இனம்புரியாத கவலை தலைதூக்கும். எனவே தன்னம்பிக்கையைத் தளரவிடாமல பார்த்துக் கொள்வது நல்லது.

கடந்த ஓராண்டாக 6 இல் சஞ்சரித்து வந்த குருபகவான் திருப்தியான பலனைக் கொடுக்கவில்லையே என்று நினைத்தவர்கள், மகிழ்ச்சியடையும் விதத்தில் இந்த மாதத்தில் குருப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. பெயர்ச்சியாகும் குரு உங்கள் ராசியை சப்தம பார்வையாக பார்க்கப் போகிறார். குருவின் நேரடிப் பார்வை கிடைப்பது அபூர்வமல்லவா?

எனவே தடைகள் அனைத்தும் தவிடு பொடியாகும். கடை திறப்பு விழாக்களையும், கட்டடத் திறப்பு விழாக்களையும் நடத்திப் பார்க்கப் போகிறீர்கள். படையெடுத்த எதிரிகள் பின்வாங்கிச் செல்வர். பணம் பல வழிகளிலும் வந்து கைகளில் புரளும். மன்மாற்றமும், ம்கிழ்ச்சியான வாழ்க்கையும் அமைய, குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே, அனுகூலம் தரும் குரு வீற்றிருக்கும் ஆலயத்திற்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**மிதுன, கடக புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 28ஆம திகதி மிதுன ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 5 ஆம் இடத்திற்கு அதிபதி பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பூர்வீக சொத்துக்களால் லாபம் கிட்டும். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் பெருகும். பொருளாதார விருத்தி ஏற்படும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். ஜூலை 15ஆம திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு 8 இறகு அதிபதியாக விளங்கும் புதன் 6 இல் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத ராஜயோக அடிப்படையில் எதிர்பாராத சில திருப்பங்கள் ஏற்படலாம். தட்டமிடாத காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் ஒரு சிலருக்கு எதிர்பாராத விதத்தில் வந்து சேரும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூலை 2 ஆம திகதி சிம்மத்திறகு சுக்ரன் செல்கிறார். 4,9இறகு அதிபதி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் நல்ல நேரம் தான். சுகங்களும், சந்தோஷங்களும் கூடும். பெற்றோர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். இடம் வாங்கி வீடு கட்டவேண்டும் அல்லது கட்டிய வீடாக விலைக்கு வாங்க வேண்டு மென்று கவலைப் பட்டவர்கள், இப் பொழுது சந்தோஷத்தோடு பூமியோகம் காண்பர். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும்.

**குதூகலம் தரும் குருப் பெயர்ச்சி!**

ஜூலை 5 ஆம தகதி குருப் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. தன லாபாதி




பதியான குருபகவான், சப்த ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியைப் பர்ப்பது சிறப்பானது. ஆரோக்கியம் சீராகும். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். விவாகப் பேச்சுக்கள் கைகூடும். விவகாரங்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழில் வளர்ச்சி ஒருபடி உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நேரமிது. பார்க்கும் குருவை பலப்படுத்த வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். இந்த மாதம் விநாயகப் பெருமான் வழிபாடு வெற்றியை வழங்கும். நடரா ஜர வழிபாடு நலம் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வளர்ச்சி கூடும் மாத மாகவே இந்த மாதத்தை கருதலாம். வாரிசுகளால் உதிரி வருமானம் வந்து சேரும். கணவன்- மனைவி க்குள் கனிவு கூடும். ஒற் றுமை பலப்படும். வாழ்க்கைத் துணைக்கு புதிய வேலை அமையலாம். பற்றாக்குறை பட்ஜெட் மாறும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். ஆரோக்கியத் தொல்லை அகலும். மருந்து, மாத்திரைகள் வாங்குவதற்காக செலவிட்ட தொகை குறையலாம். நீண்டகால பகை மாறும். உதாசீனப்படுத்திய உடன்பிறப்புகளும், உறவினர்களும் பகையை மறந்து பாசம் காட்டுவர். குரு, சுக்ர வழிபாடு குதூகலத்தை வழங்கும். புதிய நட்பால் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும் நேரம்!



**உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும் நேரம்! எல்லோருக்கும் நல்லவராக இருக்க வேண்டும் ஒன்று விரும்பும் மீன இராசி அன்பர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத தொடக்கத்தில் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பரிபூரணமாக உங்கள் ராசியில் பதிகிறது. உச்சம்பெற்ற குரு உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது மிச்சம் வைக்குமளவிற்கு பொருளாதார நிலை உயரும். சந்தோஷத்தை நாளும் சந்திக்க கூடிய வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். அயல்நாட்டு யோகம்கூட ஒரு சிலருக்கு கிடைக்கும். விவாகப் பேச்சுக்கள் வீடு தேடி வந்து முடியும். தகராறு செய்தவர்கள தானாக விலகுவர். இத்தனை அம்சமும் குரு பார்வைக்கு உண்டு.

அதே நேரத்தில் அஷ்டமத்தில் அல்லவா சனி சஞ்சரிக்கிறார். அதுவும் உச்சம் பெற்று வக்ரமடைகிறார். எனவே, திடீர் விரயங்கள் ஏற்படலாம். தெய்வீகச் செலவு அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லை மீண்டும் தலைதூக்குகிறதே என்று கவலைப்படுவீர்கள். இருப்பினும் 12 இறகு அதிபதியாக சனி விளங்குவதாலும், முன்பே அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இரண்டரை ஆண்டுகள் நடந்து முடிந்துவிட்டதாலும், இப்பொழுது வக்ர இயக்கத்தில் அஷ்டமத்துச் சனி அடியெடுத்து வைக்கும் பொழுது அவ்வளவாக பாதிக்காது.

மேலும் குருவும் 6 ஆம் இடத்திற்கு இம்மாதம் பெயர்ச்சியாகின்றது. எனவே, எதிரிகளின் தொல்லை குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் இருக்குமென்றே சொல்லலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் மாற்றங்களும் உருவாகும். ஊர் மாற்றமும், வீடு மாற்றமும் ஒரு சிலருக்கு தவிர்க்க முடியாததாக அமையும். வரும் மாற்றங்களைத் தவிர்க்க இயலாது. குரு வழிபாடும், சனிவழிபாடும் வாரம்தோறும் செய்து வருவதன் மூலம் நன்மைகளைப் பெற இயலும்.

**மிதுன, கடக புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 28 ஆம திகதி மிதுன ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் ராசியில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், யோசிக்காது செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். நாடுமாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். சகோதர வர்க்கத்தினரால் நன்மை கிடைக்கும். புத ஆதித்ய யோகம் இருப்பதால், கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும்.

ஜூலை 15 ஆம திகதி கடகத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பூர்வீக சொத்துக்கள் விற்பனையால்லாபம் உணடு. தொழிலுக்கு புதிய பாதை அமைத்துக் கொள்வீர்கள். பிள்ளைகளுக்கான சீர் வரிசைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசியப்பொரு [illegible]

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூலை 2ஆம திகதி சிம்ம ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 3,8 இறகு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் நேரம் நல்ல நேரம்தான். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். புதிய முயற்சிகளில் அனுகூலம் உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு உண்டு. வியாபார விரோதம் விலகும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பு கிட்டும்.

**குருப் பெயர்ச்சிக் காலம்!**

குரு உங்கள் ராசிநாதன் ஆவார. அவர் உங்கள் ராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து 2,10,12 ஆகிய இடங்




களை பார்வையிடுகிறார். பார்வை பலனால் ஒரு சில நல்ல காரியங்கள் நடைபெறலாம். குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நீண்ட தூரப் பயணங்களால் நிம்மதி உண்டு. நேசித்தவர்கள் கைகொடுத்து உதவுவர். பயணங்களால் பலன் உண்டு. இம்மாதம் தென்முகக் கடவுள் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**


இந்த மாதம் தொடக்கத்தில் பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும். நகை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மாறும். மறுத்துப் பேசிய குடும்ப உறுப்பினர்கள் மனம் மாறுவர். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். கரைந்த சேமிப்புகளை குருப் பெயர்ச்சிக்குப் பிறகு ஈடுகட்டுவீர்கள். ராகு-கேது ஆதிக்கம் இருப்பதால் சர்ப்ப சாந்தி செய்து கொள்வதன் மூலம் சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ளலாம். வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்பு உண்டு.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவிலும் யோகா தினக் கொண்டாட்டம்; சுஷ்மா, ரவிசங்கர் உள்ளிட்டோர் பங்கேற்பு





அமெரிக்காவில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. இதில் இநதிய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் பங்கேற்று யோகா பயிற்சியை மேற்கொண்டனர். உலகம் முழுவதும் யோகா தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது மகிழ்ச்சியளிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகமான நியூயோர்க்கிற்கு சென்றுள்ள மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை பான் கீ மூன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

அப்போது, சர்வதேச யோகா தினத்தை உலக மக்கள் உற் சாகத்துடன் கொண்டாடியதாக சுஷ்மா சுவராஜிடம் அவர் தெரிவித்துள்ளார்.

வாழும் கலை அமைப்பின் தலைவர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

சர்வதேச அளவில் யோகாவை கொண்டு சென்றதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாக ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்தார். (இ-5)




## விஷச்சாராயத்தால் பலி எண்ணிக்கை மும்பையில் திடீரென அதிகரித்துள்ளது

### இதுவரை 105 பேர் உயிரிழப்பு

மும்பை மலாடு மேற்கு லட்சுமிநகர் குடிசை பகுதியை சேர்ந்த கூலித் தொழிலாளிகள், கடந்த 17-ம் திகதி இரவு அப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட சாராயத்தை வாங்கி குடித்தனர்.

சாராயம் குடித்த சில நிமிடங்களில் அவர்களுக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டது. பெரும்பாலானோர் வயிற்று வலி, நெஞ்சு வலி ஏற்பட்டு சுருண்டு விழுந்தனர்.

உடனடியாக அவர்கள் அனைவரும் அருகிலுள்ள வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

பரிசோதனையில் அவர்கள் குடித்த சாராயத்தில் விஷத்தன்மை இருந்தது கண்டறியப்பட்டது. இந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 13 பேர் அன்றைய தினமே பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் விஷச் சாராயம் குடித்து பலியானவர்களின் எண்ணிக்கை 90 ஐ தொட்டது.

இந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களில் நேற்றுமுன்தினமும் பலர் சிகிச்சை பலனின்றி பலியானார்கள்.

இதன் மூலம் விஷச்சாராயத்திற்கு பலியானவர்களின் எண்ணிக்கை 105 ஆக அதிகரித்துள்ளது. (இ-5)

## ஆப்கானிஸ்தானில் குண்டுத் தாக்குதலால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் மரணம்

தென் ஆப்கானிஸ்தானில் வீதியோர குண்டுத் தாக்குதலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர்பலியாகியுள்ளதுடன் 5 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இது ரமழான் நோன்பு காலத்தில் அங்கு இடம்பெற்ற முதலாவது பிரதான தாக்குதலாக கருதப்படுகிறது.

ஹெல்மண்ட் மாகாணத்தில் மர்ஜா மாவட்டத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு குழுவும் உரிமை கோரவில்லை என்ற போதும், தலிபான் தீவிரவாதிகளே காரணம் என நம்பப்படுகிறது.

பிராந்தியத்திலான இராணுவ நடவடிக்கையொன்றையடுத்து இடம்பெயர்ந்த மேற்படி குடும்ப அங்கத்தவர்கள் இரு நாட்கள் கழித்து தமது சொந்த வீடுகளுக்கு திரும்புகையிலேயே அவர்கள் பயணம் செய்த வாகனம் தெருவோரக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. காயமடைந்துள்ள



பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதால் இறந்தவர்கள் தொகையில் அதிகரிப்பு ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த வருடம் பெரும்பான்மையான அமெரிக்க மற்றும் நேட்டோ படையினர் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியதையடுத்து, அங்கு வன்முறைகள் இடம்பெறுவது அதிகரித்து வருகிறது.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாத காலப் பகுதியில் ஆப்கானில் இடம்பெற்ற வன்முறைகளில் குறைந்தது ஆயிரம் பேர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் அனல் காற்றால் 141 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் அனல்காற்று வீசியதில் இதுவரை 141பேர்உயிரிழந்தனர்என்று அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் வெயில் கொளுத்தி வருகிறது. வெப்பக்காற்றால் பொது மக்கள் கடுமையான அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். சிந்து மாகாணத்தில் இதுவரையில் அனல்காற்றுக்கு 141 பேர் பலியாகி உள்ளனர் என்று அம்மாநில சுகாதாரத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல் வறட்சி மற்றும் மாரடைப்பு காரணமாக 5 பேர் தாட்டாவிலும், தார்பார்காரில் 4 பேரும் நேற்று முன்தினம் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விவகாரம் தொடர்பாக சிந்து மாகாணத்தின் முதலமைச்சர் செயத் காயிம் அலி ஷாக் செய்தியாளர்களிடம் பேசுகையில், சிந்து மாகாணத்தில் கராச்சி உட்பட அனைத்து நகரங்களிலும் உள்ள அரசு வைத்தியசாலைகளில் அவசரநிலையை பிரகடனம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அனல் காற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோர் எண்ணிக்கையானது அதிகரித்துவரும் வேளையில், வைத்தியசாலைகளுக்கு தடையில்லாத மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகத்தை முறைப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் துறைமுக நகரான கராச்சியில் சுமார் 44 முதல் 45 வெப்பநிலையானது பதிவாகி வருகிறது. ரமழான் மாதம் தொடங்கிய கடந் வெள்ளிக்கிழமையில் இருந்தே கடும் வெப்பமானது அங்கு நிலவி வருகிறது. தொடர்ந்து கொளுத்தும் வெப்பமானது நீடிக்கும் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜின்னா வைத்தியசாலை மருத்துவ கண்காணிப்பாளர் சேமி ஜாமாலி பேசுகையில், எங்களது வைத்தியசாலையில் அதிகளவு உயிரிழந்தவர்கள் வயதானவர் மற்றும் வீடுகள் இல்லாதோர்கள் ஆவர். அவர்கள்; மூச்சு திணறல், உடல் வறட்சி மற்றும் மாரடைப்பால் உயிரிழந்தனர் என்று தெரிவித்துள்ளார்.

கடும் வெப்பம் காரணமாக உடல் நிலை குறைவு (குறைந்த இரத்த அழுத்தம் மற்றும் சோர்வும்) காரணமாக 48 மணிநேரங்களில் மட்டும் 100 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடும் வெப்பம் காரணமாக வீட்டில் அதிக நேரம் சடலத்தை வைக்க முடியவில்லை என்று உயிரிழந்தவர்களின் உறவினர்கள் சடலங்களை உடனடியாக எங்களிடம் கொண்டு வந்துள்ளனர் என்று கராச்சியில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அன்வார் காஸ்மி தெரிவித்துள்ளார். அதிகமாக இறப்பு காரணமாக இவ்வமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஹிட்லர் ஓவியங்கள் 2.81 கோடிக்கு ஏலம்

சர்வாதிகாரி ஹிட்லர் வரைநத 14 ஓவியங்கள் 3.91 இலட்சம் யூரோவுக்கு (சுமார் ரூ. 2.81 கோடி) ஏலத்தில் விற்பனையானது.

ஜேர்மனியின் நியூரம்பர்க் நகரில் நடைபெற்ற ஏலத்தில், அவர் வரைந்த பவேரியா அரண்மனை ஓவியம் அதிகபட்சமாக ஒரு இலட்சம் யூரோவுக்கு (சுமார் ரூ. 72 இலட்சம்) விற்பனையானது. சீனாவைச் சேர்ந்த ஒருவர் இதனை வாங்கினார்.

ஹிட்லரின் பூங்கொத்துப் படம் சுமார் ரூ. 52 இலட்சத்துக்கு விற்பனையானது.

இந்த ஓவியங்களை 1904 ஆம் ஆண்டு முதல் 1922 ஆணடு வரையிலான கால கட்டத்தில் அவர் வரைந்ததாகக் கூறப்படுகிறது.



A.Hitler.

அடிப்படையில் ஓவியரான அடொல்ப் ஹிட்லரின் ஓவியங்களுக்குப் பெரும் கலை நயம் இருப்பதாக கலை விமர்சகர்கள் கருதாவிட்டாலும், சர்வதேச ஏலங்களில் அவை அதிக விலைக்கு விற்பனையாகின்றன.

அவற்றை வாங்குவதற்குப் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும்ஆர்வம்காட்டி வருகின்றனர என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறுவர்களைப் பயன்படுத்தி

# இரும்புக்கூண்டுக்குள் மரணப்பயிற்சி

## ஐ.எஸ்ஸின் புதிய பயிற்சி வீடியோவால் பரபரப்பு

**(டமாஸ்கஸ்) ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு சிறுவர்கள் மற்றும் தீவிரவாதிகளுக்கு தரும் புதிய பயிற்சி முறைகள் அடங்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் காட்டுததீயாக பரவி பெரும பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



இந்த புதிய பயிற்சி முறையில், மல்யுத்த போட்டிகளை போன்று பிரமாண்டமான இரும்பு கூண்டு ஒன்றை அமைத்து, அதில், இளைஞர்களையும், சிறுவர்களையும் ஒரு கூண்டில் அடைத்து விடுகின்றனர். பின்னர் அவர்களை நேருக்கு நேர் மோத விடுகின்றனர். கூண்டை சுற்றியிருக்கும் ஏராளமான ஆயுதமேந்தியவர்கள் அவர்களை உற்சாகப்படுத்துகின்றனர். சில முகமூடி அணிந்த சிறுவர்கள் தங்கள் தலையால் கல்லை (Tiles) உடைக்கின்றனர். மேலும் சிலர் தற்காப்பு பயிற்சிகள், துப்பாக்கி சுடுதல் ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றனர். இந்த வீடியோ ஈராக்கில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தளத்தில் எடுக்கப் பட்டதாக கருதப்படுகிறது.

இந்த பயிற்சி வீடியோவை வெளியிட்டுள்ளதன் மூலமாக ஏனைய நாடுகளை சேர்ந்த இளைஞர்களைக் கவர ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் முயற்சி செய்வதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-5)

# தமிழக மீனவர்களை உடன் விடுவியுங்கள்

## மோடிக்கு ஜெயா கடிதம்

தமிழக மீனவர்களை விடுவிக்க தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதி உள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுதி உள்ள கடிதத்தில், தமிழகத்தில் இருந்து 2 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 17 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மற்றொரு துரதிர்ஷ்ட சம்பவத்தை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். 19 ஆம் திகதியன்று நாகப்பட்டினம் மீன்பிடி தளத்தில் இருந்து இரண்டு எந்திரப் படகுகளில் 17 பேர் மீன்பிடிக்கச் சென்றனர்.

பாரம்பரியமாக மீன்பிடிக்கும் பகுதியில் 20 ஆம் திகதி மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினர் அவர்களைக கைது செய்தனர். அவர்கள் அனைவரும் இலங்கையில் உள்ள காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் சென்ற படகுகளும் கொண்டு செல்லப் பட்டன. பாக் நீரிணை பாரம்பரிய பகுதியில் அமைதியாக மீன்பிடிப்பவர்களை இலங்கை கடற்படையினர் இப்படி அடிக்கடி கைது செய்வதும், அவர்களை நீண்ட நாட்களாக அடைத்து வைப்பதும் தமிழகத்தில் மீனவர்கள் மத்தியில் மிகுந்த சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாமல், அவர்களின் மீன்பிடி படகுகளை திருப்பித் தராமல் வைத்துக் கொள்ளும் இலங்கை அரசின் செயற்பாடு, ஏழை தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பதோடு அவர்களுக்கு நீண்ட கால பொருளாதார இழப்பை ஏற்படுத்திவிடுகிறது. கடந்த 3 மாதங்களாக 18 மீன்பிடி படகுகள் விடுவிக்கப்படாமல் தொடர்ந்து இலங்கையில் அந்த நாட்டு அரசின் பிடியில் வைக்கப் பட்டுள்ளன. அதோடு, கடந்த முதலாம் திகதியன்று 3 படகுகளோடு 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இரண்டு தரப்பினருக்கும் இடையே நிலவும் பிரச்சினையை நீக்க வேண்டும் என்ற நலல நோக்கத்தில், சென்னையில் கடந்த ஆண்டு ஜனவரி 27, கொழும்பில் மே 12, மீணடும் சென்னையில் கடந்த மார்ச் 24 ஆகிய திகதிகளில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடக்க தமிழக அரசு ஏற்பாடுகளைச்செய்திருந்தது. ஆனால், இதுபோன்ற கைது நடவடிக்கைகளால், அமைதிக்கான ஒருசுமுகமானசூழ்நிலைவீணாகிவிடுகிறது என அவர் மேலும தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கை அரசின் ஒடுக்குமுறைக்கு அமெரிக்காவும் துணைபோகின்றது

## திருமாவளவன் குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கை அரசின் ஒடுக்குமுறைகளுக்கு அமெரிக்கா துணைபோகிறது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இன அழித்தொழிப்பின் ரணங்கள் ஆறாத நிலையில், அதற்கு நீதி கிடைக்காத சூழலில் இப்போதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல் இருப்பதாக அமெரிக்க அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கை இலங்கை அரசின் ஒடுக்குமுறைகளுக்கு அமெரிக்கா துணைபோகிறது என்பதையே வெளிப்படுத்துகிறது. அமெரிக்க அரசின் மனித உரிமைகளுக்கு எதிரான இந்தச் செயலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

— அமெரிக்க அரசின் உள்துறை சார்பில் ஆண்டுதோறும் 'பயங்கரவாதம் தொடர்பான அறிக்கை' வெளியிடப்படுவது வழக்கம். 2014ஆம் ஆண்டுக்கான அறிக்கை இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் இலங்கை தொடர்பான பகுதியில் மகிந்த ராஜபக்ஷ அரசின் நடவடிக்கை களைக் கண்டித்திருக்கும் அமெரிக்க உள்துறை, "விடுதலைப் புலிகள் இயக்கத்தை உயிர்ப்பிக்க முயன்ற குற்றச்சாட்டில் 2014ஆம் ஆண்டில் 16 அமைப்புகளையும் 422 தனிநபர்களையும் இலங்கை அரசு தடை செய்தது.

ஆனால் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களை அது காட்டவில்லை" எனக் குறிப்பிட்டிருப்பதோடு "இந்த நட்வடிக்கை ஐ.நா.சபையின் விதிகளுக்கு உடனபாடாக இல்லை" எனவும் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் அதற்கு நேரெதிராக அறிக்கையின் இன்னொரு பகுதியில் எந்தவித ஆதாரமும் இன்றி "விடுதலைப் புலிகளின் பொருளாதார வலைப்பின்னல் இப்போதும் வலிமையோடு இருப்பதாக" தெரிவிததுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் இருந்த அதே வாசகங்கள் இந்த ஆண்டுக்கான அறிக்கையிலும் அப்படியே இடம் பெறறிருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# என்னையும் தாயையும் தவிக்கவிட்டு சென்றவர் எனது தந்தை-ஒபாமா கவலை

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா'மைபிரதர்ஸ்கீப்பர'(My Brothers Keeper) ஆவணப் படத்தின் நிகழ்ச்சியில் தனது தந்தை பற்றிய தகவல்கள் பகிர்ந்துகொண்டார்.

'மை பிரதர்ஸ் கீப்பர்' என்ற ஆவணப்படத்துக்கு நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒபாமா தனது தந்தை குறித்து பேசியதாவது, என் வாழ்க்கையில் என் தந்தையின் பங்களிப்பு என்னவென றால், நான் சிறுவனாக இருந்த போது, வருங்கால ஜனாதிபதியான என்னையும் என் தாயையும் ஹவாயில் தவிக்க விட்டுச் சென்றவர் என்ற நினைவு மட்டும்தான். அது ஒரு பெரிய இழப்பு, பிறரிடம் பகிர்ந்துகொள்ள முடியாத உணர்வுபூர்வமான வலி என்றும் தெரிவித்தார். இளமை பருவம் வாழ்க்கையின் அர்த்தங்கள் புரியாத வயது, தொலைநோக்கு பார்வையும் இருக்காது, நாம் கணிப்பது சரிதானா என்று நிச்சயிக்க முடியாது. நமக்கு பிறருடைய வழி காட்டுதல் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார். மை ப்ரதர்ஸ் கீப்பர் ஆவணப் படத்தின் கதையோடு தனது கடந்தகால வாழ்க்கையும் ஒன்றியிருப்பதை எழுச்சியோடு தெரிவித்துள்ளார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### கந்தையா சங்கரப்பிள்ளை

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லண்டன் Crawley ஐ வசிப்பிடமாகவும்கொண்டகந்தையாசங்கரப்பிள்ளை கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பி.ப2.30 மணி வரை Oakwood Football Club, Tinsley Lane, Crawley, West Sussex RH10 8AT, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி இராசையா விக்ரோறியா

99/9 புகையிரத ஒழுங்கை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா விக்ரோறியா கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருவுடல் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய் யப்படும்.



### சின்னையா கனகராசா

விசுவமடுவைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா கனகராசா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் 12 ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி மகாதேவா குணநாயகி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல. 25 புறூடிலேனை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா குணநாயகி கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மு.ப11 மணியளவில் தகனம் செய்யப்படும்.



### சுப்பிரமணியம் மகேந்திரராஜா

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகேந்திரராஜா கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

01.06.2015 அன்று கொலைச்சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வித்தியா கொலை செய்யப்பட்ட தினத்தில் தான் கொழும்பில் இருந்ததாக 9 சந்தேக நபர்களில் ஒருவர் நீதிமன்றில் தெரிவித்ததுடன் 13.05.2015 அன்று வெள்ளவத்தையிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் தானியங்கி இயந்திரம் மூலம் (ATM) தான் பணம் பெற்றதாகவும் நீதிமன்றில் கூற,

வெள்ளவத்தை ஹற்றன் நஷனல் வங்கியின் (ATM) இயந்திரப் பிரிவில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராவின் (CCTV) வீடியோ பதிவைப் பெற்றுக்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை நீதிபதி செ.லெனின்குமார் உத்தரவிட்டார்.

இதேவேளை வித்தியாவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் 9ஆவது சந்தேகநபர் மகாலிங்கம் சசிகுமார் (சுவிஸ்குமார்) மாணவி வித்தியாவின் கொலை நடந்த மறுநாள் கைது செய்யப்பட்டதாக பொலிஸாரின் அறிக்கையின் முற்பகுதியில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் 21.05.2015 அன்று வெள்ளவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது முன்னுக்குப்பின் முரணானது என மாணவி வித்தியாவின் குடும்பத்தின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா நீதிமன்றில் முன்வைத்தார்.


அக்கரைப்பற்று

சந்தேகநபர் சுவிஸ்குமாரை புங்குடுதீவில் வைத்து பொதுமக்கள் பிடித்துள்ளனர். அவரைப் பொலிஸில் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இருந்தும் 21.05.2015 அன்று அவர் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டது எப்படி? அவர் எவ்வாறு தப்பிச் சென்றார். ஒரு குற்றவாளி தப்பித்துச் செல்வதற்கு காரணமாக இருந்தவர்கள் யார் என்ற கேள்விகளை சட்டத்தரணி கே.வி. தவராசா முன்வைத்ததோடு குற்றவாளி தப்பித்துக்கொள்வதற்கு ஏற்றவாறு பொலிஸாரால் தயாரிக்கப்பட்ட முதல் அறிக்கை என்றும் குறிப்பிட்டார். இது தொடர்பில் தனியான விசாரணை நடத்துமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டதுடன் சந்தேகநபர் தப்பித்துச் செல்லும் முயற்சிக்கு உடந்தையாக இருந்தவர்களை உடன் கைது செய்து மன்றில் நிறுத்துமாறும் நீதிபதி கட்டளையிட்டார்.

இந்த வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசாவுடன் சட்டத்தரணிகளான கே.சுகாஸ், எஸ்.விஜயராணி, ரி.ஜனகன், ஆதித்தன் கார்த்திகா, அம்பிகா சிறிதரன் ஆகியோர் மாணவி வித்தியாவின் குடும்பம் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்தனர்.


இவை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடந்து கொண்டிருக்கும்போது அதே சமயம் யாழ்ப்பாண நீதிமன்றைத் தாக்கினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 130 பேரில் 47 கைதிகள் 01.06.2015 அன்று யாழ்ப்பாண நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களில் இருவர் 15 வயதுக்குக் குறைந்தவர்கள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாண நீதிபதி பெ.சிவகுமார் அந்த இரண்டுபேருக்கும் பிணை வழங்கினார்.

ஏனையவர்களைத் தொடர்ந்து 2015.06.09 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.


வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜராகியபோது பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் வழங்கிய பந்தோபஸ்து, யாழ்.நீதிமன்றில் கைதிகள் ஆஜராகிய போதும் வழங்கப்பட்டிருந்தது.

இவை ஊர்காவற்றுறை, யாழ்ப்பாண நீதிமன்றில் நடந்தேற,


24
மாணவி வித்தியா

வித்தியாவின் கொலைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தும் பல்வேறு இடங்களில் நடந்தன.

01.06.2015 அன்று மாணவி வித்தியா கொல்லப்பட்டு 19 நாட்கள் கடந்த நிலையிலும் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, அக்கரைப்பற்று, மூதூர் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் கண்டனங்களும் நடந்தன.


கிளிநொச்சி

கிளிநொச்சியில் கிளி. மாவட்ட மகளிர் சம்மேளனமும் சிறகுகள் பண்பாட்டு மையமும் இணைந்து கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.


மன்னார்

இதேபோன்று மன்னாரில் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் மன்னார் பொதுநூலகத்திற்கு முன்பாகத் திரண்டு மாணவி வித்தியாவின் கொலைக்குக் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக நீதிக்கான பயணம் என்ற அமைப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. மூதூரிலும் அக்கரைப்பற்றிலும் ஆர்ப்பாட்டங்கள் களை கட்டியிருந்தன.

இதில் அக்கரைப்பற்றில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்களின் கையொப்பம் பெறப்பட்டு ஜனாதிபதி மைத்திரிக்கு மகஜர் அனுப்பி வைக்கும் ஏற்பாடுகளும் நடந்தன.

(தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழருக்கான மாநாட்டை அனுமதியோம்

## ஹெல உறுமய எதிர்ப்பு

**இலங்கையில் புலம்பெயர் தமிழர்களுக்காக நடத்தப்படவுள்ள மாநாட்டை கடுமையாக எதிர்ப்பதாகவும் இதனை தடுத்து நிறுத்த சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் எச்சரிக்கை விடுக்கும் அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, இம்மாநாட்டுக்காக ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு 3.1 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளது.**

பத்தரமுல்லயிலுள்ள ஜாதிக ஹெல உறுமய அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அதன்தேசிய அமைப்பாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் இலங்கையில் மாநாடு நடக்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை.

எனவே வெளிநாட்ட லுவல்கள் அமைச்சர் மங்கள சமரவர, புலம்பெயர் தமிழர்களுக்கும் அமைப்புக்களுக்கும் இங்குநடத்தவுள்ள மாநாடு தொடர்பில் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளியிட வேண்டும்.

இவ்வாறானதொரு மாநாட்டை நடத்த அமைச்சர் மங்களவுக்கு யார் அதிகாரம் வழங்கினார்கள்? புலம்பெயர் தமிழர்கள் என்பதும் விடுதலைப்புலிகள் என்பதும் தனித் தனி அமைப்புக்கள் அல்ல. இரண்டுமே தனித் தமிழீழ பிரிவினையை வலியுறுத்தும் அமைப்புக்களாகும்.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்களே புலம்பெயர் தமிழர்கள் ஆவார்கள். இதில் எந்தவித மான சந்தேகத்திற்குமே இடமில்லை. ஐக்கிய இலங்கையில் பிரிக்கப்படாத நாட்டை எதிர்ப்பவர்களே இவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவே அரசியலமைப்பை மீறிய செயற்பாடாகும். எந்த இடத்திலும் அரசியலமைப்பில் ஐக்கிய இலங்கை என குறிப்பிடப்பட்டதில்லை. ஒற்றையாட்சிக்குள் பிரிக்கப்படாத இலங்கை என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

மங்களவின் புலம்பெயர் தமிழர்களுக்கான மாநாடு நாட்டுககு அமங்கலமாகவே அமையப் போகின்றது. இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவதால் சமாதானத்தையும் தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி விட முடி யாது. புலம்பெயர் தமிழர்கள் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் பெரும்பாலானோ ரின் பெயர்கள் எமது நாட்டின் தடை செய்யப்பட்ட பெயர்ப்பட் டியலில் உள்ளன.

இவ்வாறானவர்களை நாட்டுக்குள் அழைப்பதே சட்ட விரோதமாகும். எனவே இவ்வாறு இவர்கள் இலங்கை வருவதை தடை செயய நாம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இலங்கையை அழிப்பதற்கு பணம், ஆயுதம் வழங்கியவர்களும் இந்த புலம்பெயர் அமைப் புக்களைச் சேர்ந்தவர்களே ஆவர்.

அத்தோடு இந்த விழாவுக்காக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு 3.1 மில்லியன் டொலர் நிதியை வழங்கியுள்ளது. இந்தத் தொகை எதற்காக வழங்கப்படுகிறது எனற சந்தேகம் வருகிறது.

புலம்பெயர் தமிழர்கள் இன்னமும் தாம் பிரிவினையை கைவிட்டதாக பகிரங்கமாக அறிவிக்கவில்லை. இதேவேளை தமிழர்களை மீளக்கட்டியமைப்பதற்கும் இவர்கள் எந்த விதமான பங்களிப்பையும் வழங்கவுமில்லை.

நாடு கடந்த தமிழீழ அரசு கலைக்கப்படவுமில்லை. எனவே இவர்கள் மீது எப்படி நம்பிக்கை வைப்பது. இந்தக் கூட்டம் பிரபாகரன் மரணிக்கவில்லை என்று இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளது.

"டயஸ்போரா" என்றால் அது புலிகளின் செயற்பட்டாளர்கள் என்ற எண்ணம் இலங்கையர்கள் மத்தியில் பதிந்து போயுள்ளது. நாட்டுக்கு மீண்டும் நம்பிக்கை யீனத்தை தோற்றுவிக்க முயற்சிக்கும் சந்திரிகா, மங்களவின் முயற்சிகளை வெற்றி பெற இடமளிக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# 20ஆவது திருத்தம் நிறைவேற்றுவதற்கு பொருத்தமற்ற காலமே தற்போதுள்ளது

தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ள 20 ஆவது திருத்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு பொருத்தமற்ற காலப்பகுதியே தற்போது காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் ஒன்றை அனைவரும் எதிர்பார்த்துள்ள நிலையில் தமது பிரதிநிதித்துவங்களை மட்டுமே கருத்தில் கொள்வதால் பொது உடன்பாட்டிற்கு அரசியல் கட்சிகள் வரமுடியாத நிலையில் இருப்பதே யதார்த்தமாக உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

20ஆவது திருத்தச் சட்ட மூலம் சிறுபான்மை, சிறு அரசியல் கட்சிகளின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அமைச்சரவையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் ஆட்சியில் அமர்ந்து ஆறுமாதங்கள் கடந்துவிட்டன. 100 நாள் வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளை அவர்களால் அந்த காலவரையறைக்குள் நிறைவேற்ற முடியாது போயுள்ளது. இவ்வாறான நிலையில் 100 நாள் வேலைத்திட்டம் நிறைவடைந்ததும் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றே உறுதியளித்திருந்தார்கள். ஆனால் தற்போது வரை அவ்விடயம் தொடர்பில் உறுதியான நிலைப்பாடொன்றை எடுக்க முடியாது இருக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் சிறுபான்மையாக காணப்படும் ஐக்கிய தேசிய கட்சி தலைமையில் தொடர்ந்தும் அரசாங்கத்தை முன்னெடுக்க முடியாது. ஆகவே பொதுத்தேர்தல் ஒன்றுக்கு உடனடியாக செல்லவேண்டியது அவசியமாகும்.

இவ்வாறான நிலையில் தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தும் 20 ஆவது திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றியபின் தேர்தலை நடத்தலாம் என கூறுவது பொருத்தமற்றதாகும். காரணம் அடுத்து பொதுத் தேர்தல் இடம்பெற விருப்பதால் பிரதான கட்சிகள் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் தமது பிரதிநிதித்துவங்களை பாராளுமன்றத்தில் அதிகரிப்பதற்குரிய வகையிலான யோசனைகளையே முன்வைப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு தரப்பினரும் தமக்கு சாதகமான யோசனைகளை முன்மொழிவதால் பொது இணக்கப்பாடொன்றுக்கு வர முடியாத நிலை நீடிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# செல்ஃபி



எஸ்.லக்ஸன்



லக்ஸன்



பவன் - சதீஸ், நெல்லியடி



க.நிலாஜனன்



வானம்பாடி சுழிபுரம்



தவதூரன்

உங்கள் செல்ஃபிகளை photosofvalampurii@gmail.com என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள். சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்க்கத்தின் முதல் சட்டம் எது தெரியுமா? ஒழுங்குதான்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவை வலுப்படுத்த புது வியூகம் தேவை

சட்டம், பாதுகாப்பு என்பன மக்கள்சமூகம் நிம்மதியாக-சுதந்திரமாக வாழ்வதற்கான ஏற்பாடுகள் ஆகும்.

எனினும் சட்டமும் பாதுகாப்பும் பலவீனப்படுகின்ற போது அல்லது அவற்றைச் செம்மையாக நடைமுறைப் படுத்தாதபோது, மக்கள்சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறது.

அதிலும் தமிழ் மக்கள் ஆயுத அமைப்புகளின் கீழ் நீண்டகால யுத்த சூழலில் வாழ்ந்துள்ளனர். இதனால் அவர்களின் வாழ்க்கை என்பது மிகமோசமான பின்னடைவைச் சந்தித்தது.

இப்போது யுத்தம் முடிந்த பிற்பாடு, தமிழினம் யாரை எதிர்த்து ஆயுத போராட்டம் நடத்தியதோ அந்த இனம் சார்ந்தவர்களின் பாதுகாப்பில் வாழ்தல் என்ற சூழமைவுக்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் இரு தரப்புப் புரிதலும் நேர்கோட்டுக்குள் வருவதென்பது உடனடிச் சாத்தியமானதன்று. பொலிஸாரின் நடவடிக்கையில் ஏற்படுகின்ற தவறுகள் இனத்துவ அடிப்படையிலேயே பார்க்கப்படும். அவ்வாறு நோக்குவதில் நியாயப்பாடுகளும் உண்டு.

மாணவி வித்தியாவின் படுகொலையை அடுத்து யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது, யாழ்ப்பாண நீதிமன்றம் தாக்கப்பட்டது.

இச் சம்பவத்தை அடுத்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் பொது இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை அடித்து நொருக்கி அவற்றை வாகனத்தில் கட்டி இழுத்து வீதியால் கொண்டு சென்றதைப் பார்த்தபோது,

அட! நாங்கள் தமிழர். அதனால்தான் இப்படி ஒரு நாசகாரச் செயலை பொலிஸார் செய்கின்றனர் என்ற நினைப்பு தமிழ் மக்களிடம் ஏற்பட்டது. இவ்வாறு ஏற்படுவதில் தவறுமில்லை.

நீதிமன்றத்தைத் தாக்கியது குற்றம். அந்தக் குற்றத்தை தடுக்க-குற்றம் செய்தவர்களை தண்டிக்க இன்னொரு மகா குற்றத்தை பொலிஸார் செய்யக் கூடாதல்லவா? எனவே பொலிஸார் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதில் தீவிரம் காட்ட வேண்டும். அதற்காக பொலிஸார் மௌனமாக இருக்கவேண்டும் என்பது இதன் பொருள் அல்ல.

எதுவாயினும் பொலிஸ் பாதுகாப்பு அரண்கள் தேவையான இடங்களில் அமைக்கப்படவேண்டும். இராணுவக் காவல் அரண்கள் அகற்றப்பட்ட போது, அந்த இடங்களில் பொலிஸ் காவலரண்களை அமைக்கவேண்டும் என வலியுறுத்த தமிழ் அரசியல் தலைமைகள் தவறிவிட்டன.

யுத்தம் முடிந்த பின்; இராணுவக் காவல் அரண்கள் அகற்றப்பட்ட நிலையில் குறித்த இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு அரண்களை அமைப்பதென்பது பல்வேறு சமூகச் சீரழிவுகளை தடுப்பதற்குத் தேவையானதாகும்.

இவ்வாறு அமைக்கப்படும் பொலிஸ் காவல் அரண்களில் தமிழ்ப் பொலிஸாரை நிறுத்துதல் என்ற விடயமும் வலியுறுத்தப்பட்டிருக்கலாம். இதற்காக விசேட தீர்மானத்தின் கீழ் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை எடுத்திருப்பதும் அவசியம்.

இப்போதுகூட, மக்கள் நடமாடுவதற்குப் பயம் கொள்ளுகின்ற இடங்களில் பொலிஸ் காவல் அரண்களை அமைப்பதுடன் பொலிஸ்- பொதுமக்கள் நல்லுறவு அமைப்புகளை இயங்குநிலையில் வைத்திருப்பதும் காலத்தின் அவசிய தேவையாகும்.

இல்லையேல் சமூக நெறிபிறழ்வு என்பது கட்டுப்படுத்த முடியாததாகி விடும். சமகால வடபுலத்தில் போதைவஸ்து பாவனையின் அதிகரிப்பு என்பது சட்டத்தின் சரியான நடைமுறையின்மையால் ஏற்பட்டதாகும். எனினும் இப்போது வடபுலத்தில் போதைவஸ்துப் பாவனையை முற்றாக வேரறுக்கவேண்டும் என்ற முடிவு பலதரப்பிடமும் ஏற்பட்டிருக்கிறது. இது நல்ல சிந்தனை எனினும் இதனை நடைமுறைப் படுத்துவதில் பொலிஸாரின் வகிபாகமே முதன்மையானது. எனவே பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவு வலுவடையும் போதே மேற்கூறியவிடயம் சாத்தியமாகும்.

# வேலைதேடும் இளையோரின் கணக்கெடுப்பு யாழில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தால் தொழில் தேடுவோருக்கான கணக்கெடுப்பு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் 2015 ஆம் ஆண்டுக்கான வேலைதேடும் இளைஞர்,யுவதிகளுக்கு வேலையைப் பெற்றுக்கொடுக்க ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் தரம்பிரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இக்கணக்கெடுப்பு தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களில் முடிவுற்றுள்ள நிலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி கரவெட்டிப் பிரதேச செயலகத்திலும் 29ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் 30 ஆம் திகதி காரைநகர், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிலும். அடுத்த மாதம் 3ஆம் திகதி நெடுந்தீவு பிரதேசசெயலாளர் பிரிவிலும் 6 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலாளர் பிரிவிலும் 7 ஆம் திகதி ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவிலும் 9 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவி லும் 10 ஆம் திகதி மருதங்கேணி பிரதேச செய லாளர் பிரிவிலும் 13 ஆம் திகதி பருத்தித்துறையிலும் 14 ஆம் திகதி சாவகச்சேரி, வேலணை பிரதேச செயலாளர் பிரிவிலும் இக் கணக் கெடுப்பு பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே குறித்த திகதிகளில் அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேலைதேடும் இளைஞர், யுவதிகள் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இப்பதிவுகளை கிராமசேவகர் மற்றும் மாவட்ட செயலக மனிதவள அபிவிருத்திப் பிரிவினர் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# பிள்ளைகள் மீதான கவனக்குறைவே வன்செயல்கள் அதிகரிக்க காரணம்

## விழிப்பாக இருங்கள்-யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

பெற்றோர்களின் அவதானம் பிள்ளைகளின் மீது குறைவாக இருப்பதே சமூகத்தில் வன்செயல்கள் அதிகரிக்க காரணம் என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவித்தார்.

நேற்று மாலை 4 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் பாடசாலை மாணவர்களுடைய பெற்றோர்களுக்கான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில்,

மாணவர்களுடைய நடத்தைகள தொடர்பாக பெற்றோர்கள் அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் கைபேசிப்பாவனை இருக்கின்றது. அதனை அவர்களிடத்தில் இருந்து தவிர்க்க வேண்டும். அத்துடன் மாணவர்கள் பாடசாலை செல்லும் போது புத்தகப்பையில் என்ன உள்ளது எதைக் கொண்டு போகின்றார்கள் என்பதை கவனித்து பாடசாலை அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் பிள்ளைகள் யாருடன் கூட்டு சேர்கிறார்கள்.குறிப்பாக யாரை நண்பர்களாக தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நடத்தை என்னவாறு இருக்கின்றது என்பதை பெற்றோர்கள் அறிந்து நல்ல நண்பர்களுடன் கூட்டு சேர வழிகாட்ட வேண்டும்.

இதேவேளை மாணவர்கள் இரவு 7 மணிக்கு பிறகும் வீடு வந்து சேராவிடில் அவர்கள் ஏன் தாமதமாக வருகிறார்கள் என்பதை கண்டறியுங்கள்.

இவ்வாறு பிள்ளை என்ன செய்கின்றது, யாருடன் கூட்டு சேர்கின்றது, என்பதை அறிந்து வைத்திருக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை.

ஆகவே சமூகத்தில் நற்பிரஜையாக தமது பிள்ளைகள் திகழ வேண்டும் என்று ஒவ்வொரு பெற்றோரும் நினைக்க வேண்டும்.

ஆகவே பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் தொடர்பில் விழிப்பாக இருங்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# 20ஆவது திருத்தம் விவாதம் இன்று

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பிலான விவாதம் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன் கிழமையும் ஒத்திவைப்பு வேளை விவாதமாக எடுத்துக் கொள்வதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக விசேட விவாதம் இன்று நாடாளுமன்றில் ஏற்பாடாகி இருந்தது.

அதற்கு முன்னர் நேற்று இடம்பெற்ற கட்சித்தலைவர்களுக்கான கலந்துரையாடலில் மேற்கண்ட முடிவு எட்டப்பட்டுள்ளது. (செ-11)

# தேர்த்திருவிழா

யாழ். வண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேர்த்திருவிழா இன்று 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் வெகுசிறப்பாக இடம் பெறவுள்ள அதேவேளை நாளை புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ்வாலய மஹோற்சவம் தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மஹோற்சவம் ஆரம்பம்

(கரணவாய்)

புற்றளை அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், முதலாம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (இ-3-60)

# அபராதம்

(கரணவாய்)

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 12 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் 55ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கிலேயே நீதிபதி மா. கணேசராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (இ-3-60)

# வெட்டுப்புள்ளி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு,

யாழ்ப்பாணம் 152, கிளிநொச்சி 153, மன்னார் 136, முல்லைத்தீவு 142, வவுனியா 142.

மேற்குறித்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் தகுதியானவர்களுக்கு நேர்முகத் தேர்வுக்குரிய கடிதங்கள் முதலமைச்சரின் அமைச்சினால் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



ஸ்ரீஇராமகிருஷ்ணரின் குணநலனை, அவரது போதனையை, அவரது நெறியை நாற்புறமும் பரப்புங்கள். இதுவே சாதனை, இதுவே பஜனை, இதுவே மோட்சம்.

நெருப்பைப்போல் களங்கமற்ற ஒழுக்கமுள்ளவர்களுடன் இளமையிலிருந்தே சிறுவர்கள் வாழவேண்டும். அத்தகைய உதாரண புருஷர் ஒருவரை முன்னால் வைத்துக்கொள்ளவேண்டும். பொய் சொல்வது பாவம் என்று வெறுமனே படிப்பதால் ஒன்றும் நடக்காது. வழுவாத பிரமச்சரிய நெறியில் நிற்பதற்கு ஒவ்வொரு சிறுவர் சிறுமியரும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அப்போது, அப்போது மட்டுமே நம்பிக்கை, சிரத்தை எல்லாம் உண்டாகும்.

உருவமற்ற குரலாக இருக்கவே நான் விரும்புகிறேன். I want to be a voice without a form!

பேரொளிப் பொருளே, எங்களுக்கு வழிகாட்டி ஒளிக்கு அழைத்துச் செல்வாய்! என்று பிரார்த்தனை செய்வோம்- இருளைக் கிழித்துக்கொண்டு ஒளிக்கிரணம் ஒன்று வரும்; நமக்கு வழிகாட்டி அழைத்துச் செல்வதற்காகக் கையொன்று நீண்டு வரும்.

புனிதனாக இரு, இறைவனிடம் நம்பிக்கை வைத்திரு, அவரையே எப்போதும் சார்ந்திரு. நீ சரியான பாதையில் போகிறாய்; உன்னை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட கிரிக்கெட் போட்டி சண்டிலிப்பாய் பி.இளைஞர் கழகம் சம்பியன்




USAID மற்றும் சேவா லங்கா நிறுவனம் இணைந்து நடத்திய மாகாண மட்ட கிரிக்கெட் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் சம்பியனாகியது.









மீள்குடியேறிய மக்களின் மீள் திறனை கட்டியெழுப்பல் என்னும் செயற்றிட்டத்தின் கீழ் சேவாலங்கா அமைப்பினால் வடக்கில் பல செயற்றட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இதன் ஒரு அங்கமாக இக் கிரிகெட் போட்டிகள் இடம்பெற்றன. இப் போட்டிகள் (21) மன்னார் காக்காய்குளம் மைதானத்தில் இடம் பெற்றது.

இடம்பெற்ற போட்டிகளின் படி முதலாவது அரையிறுதியில் யாழ்ப் பாணம் தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளன அணியை எதிர்கொண்ட மன்னார் காக்காய்குளம் அணியினர் வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்றனர். இரண்டாவது அரையிறுதியில் முல்லைத்தீவு மல்லிகை அணியை எதிர்கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியினர் இலகுவாக வெற்றிபெற்று இறுதிக்கு தகுதி பெற்றனர்.

இதன்படி இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் மன்னார் காக்காய்குளம் அணியினரும் மோதினர்.

நாணயற்சுழற்சியில் வென்ற மன்னார் காக்காய்குளம் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். போட்டியின் ஆரம்பம் முதலே சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி போட்டியை கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய மன்னார்ர் காக்காய்குளம் அணியினர் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியின் பந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாது தடுமாறினர்.

ஒரு கட்டத்தில் 3 ஓவர்களில் 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 2 விக்கட்களை இழந்து தடுமாறினர்.

பின் சுதாகரித்து ஆடிய மன்னார் காக்காய்குளம் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்களில் 7 விக்கட்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் அதிகபட்சமாக இம்ரான் 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி சார்பில் பிருந்தூசன், பிரதீபன் ஆகியோர் தலா 2 விக்கட்களையும், சிந்துஜன் மற்றும் ராம் தலா ஒவ்வொரு விக்கட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 59 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக ச்ம்மேளன அணி 5 விக்கட்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் பிரதீபன் 26 ஓட்டங்களையும், சுபதீபன் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மன்னார் காக்காய்குளம் அணி சார்பில் காரிஷ் 2 விக்கட்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் சிறந்த பந்துவீச்சாளராக தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளன அணியின் ரகுவரன் தெரிவாகியதுடன், சிறந்த துடுப்பாட்ட வீரனாக மன்னார் காக்காய்குளம் அணியின் இம்ரான் தெரிவானார்.

இதன் மூலம் USAID மற்றும் சேவா லங்கா நிறுவனம் இணைந்து நடத்திய மாகாண மட்ட கிரிக்கெட் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் சம்பியனாகியது. (க-23)

# வட மாகாண பளுதூக்கல் யாழ்.இந்து முதலாமிடம்





வடமாகாண பளுதூக்கும் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 31 பதக்கங்களுடன் முதலிடம் பெற்று சாதனைபடைத்தது. வடமாகாண பளுதூக்கும் போட்டி யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 31பதக்கங்களுடன் முதலிடம் பெற்று சாதனை படைத்தது.

கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் இப் பளுதூக்கும் போட்டிகளில் பங்குபற்றி வரும் யாழ் இந்துக்கல்லூரி பங்குபற்றிய முதல் வருடம் முதல் இவ்வருடம் வரை தொடர்ச்சியாக 3 வருடங்கள் ( 2013, 2014, 2015) வட மாகாண சம்பியன்கள் எனும் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இவ்வருடம் இடம்பெற்ற போட்டிகளில் யாழ் இந்துக்கல்லூரி 17 வயதுப்பிரிவில் 17 பதக்கங்களுடன் முதல் இடத்தையும் 19 வயதுப் பிரிவில் 14 பதக்கங்களுடன் முதல் இடத்தையும் பெற்று வட மாகாண சம்பியன்கள் எனும அந்தஸ்தை தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டுள்ளது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியை....

இதன் மூலம் ஓரளவுக்காவது இந்த நாட்டிலே ஒரு வெளிப்படைத் தன்மையான ஆட்சி நடக்கின்றது. கடந்த காலங்களிலே நடந்த அநியாயம், அக்கிரமங்கள், ஊழல்கள் போன்றவற்றுக்கு காரணம் வெளிப்படை தன்மை இல்லாமையே. நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் எல்லா அதிகாரமும் குவிந்திருக்கின்ற நிலைவரம் காணப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால தன்னுடைய சொந்த அதிகாரத்தில் சில அதிகாரங்களை கைவிட இணங்கியது என்பது ஒருவரலாற்று சாதனையாகும். அதை செய்வதற்கு ஒரு தியாக உணர்வோடு முன்வந்த ஜனாதிபதியை நாங்கள் பாராட்ட வேண்டும். முதன் முறையாக இந்த நாட்டிலே அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி சுயமாக தன்னுடைய அதிகாரங்களை குறைப்பதற்கு முன்வந்துள்ளமை உலக அதிசயம் தான்.

இவ்வாறு செய்த ஜனாதிபதி தேர்தல் சீர்திருத்த விடயத்திலும் அவருக்கு கை கொடுத்த கட்சிகளையும் கைவிட மாட்டார் என்று நினைக்கின்றோம். நாளை (நாளை மறுதினம்) பாராளுமன்றத்தில் ஒரு காரசாரமான விவாதம் நடக்க இருக்கின்றது. சிறுபான்மை மக்கள் கட்சிகளின் பிரதிநிதிகள் அதில் கதைக்கலாம். சிறுபான்மை கட்சிகள் புதிய தேர்தல் சீர்திருத்தத்தினால் படு மோசமாக பாதிக்கப்படக்கூடும் என்பது சம்பந்தமாக தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கத் தோடு பெரியளவில் முரண்பட்டு வருகின்றோம். நாம் சமர்ப்பித்த ஆலோசனைகளை புறம் தள்ளி, வெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருக்கும் உள் முரண்பாடுகளுக்கு தீர்வாக இந்த புதிய தேர்தல் சீர்திருத்தத்தை அறிமுகம் செய்கின்றார்களா என்ற சந்தேகம் எல்லோரிடத்திலும் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த அநியாயத்திற்கு ஜனாதிபதி துணை போக மாட்டார் என்று நினைக்கின்றோம் என ஹக்கீம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதி ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## அணித்தலைவர் பதவியில் இருந்து விலகத் தயார்-டோனி

இந்திய அணியில் ஏற்படும் அனைத்து மோசமான சம்பவங்களுக்கும் நான் காரணமாக இருந்தால் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகத் தயார் என்று டோனி தெரிவித்துள்ளார்.

இந்திய அணி வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இதில் ஒருநாள் தொடரை மோசமான முறையில் இழந்துள்ளது. இதனால் அணித்தலைவர் டோனி மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் போட்டி முடிந்த பிறகு செய்தியாளர் சந்திப்பின் போது பேசிய டோனி, என் மீதுதான் அதிக பொறுப்பு சுமத்தப்படுகிறது.

அனைத்து மோசமான விடயங்களுக்கும் நான் தான் காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் இதை கேட்டு வங்கதேச ஊடகங்கள் கூட சிரிக்கின்றன.

நான் எப்போதுமே அணித்தலைவர் ஆக வேண்டும் என வரிசையில் நின்றது இல்லை. என்னை பொறுத்த வரையில் அணித்தலைவர் யார் என்பது ஒரு விடயமே இல்லை.

என்னை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்குவது நியாயம் என்று நினைத்தால், அதன் பிறகு இந்திய அணி சிறப்பாக விளையாடும் என்று நினைத்தால் நான் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகி விட்டு ஒரு வீரராக மட்டும் தொடர தயாராக உள்ளேன். அதில் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.


## பொது அறிவித்தல்

இல.134, ஜெயந்தி நகர், கிளிநொச்சி, இலங்கை எனும் முகவரியிலுள்ள கே.கே.கே. அப்பரல்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் (KKK Apparels (pvt) Ltd) சில இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் என்பன லான்ட் ஓ' லேக்ஸ் (Land O'Lakes) நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் VEGA/BIZ+ வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் வெளிப்படையான எழுத்து மூலமான சம்மதமின்றி விற்கப்படவோ அல்லது உரிமை மாற்றம் செய்யப்படவோ முடியாதென, பொது மக்களும் மற்றும் ஆடை உற்பத்தி கைத்தொழில் பிரதிநிதிகளும் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். ஒரு அரச-தனியார் பங்குடமையின் பகுதியாக, ஓர் எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் கீழ், அதன் ஆடை உற்பத்தி வசதிகளை விரிவுபடுத்துவதற்கு கே.கே.கே அப்பரல்ஸிற்கு பொருட்களாக நன்கொடையளிக்கப்பட்ட இனங்காணப்படக் கூடிய மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட சொத்துக்கள், 33 சிங்கர் கைத்தொழில் தையல் இயந்திரங்கள், ஒரு சிங்கர் அலங்காரத் தையல் (Embroidery) இயந்திரம், 14 துணை உதவி இயந்திரங்கள், ஒரு கேர்லோஸ்கர் 62.5 கி.வோ மின்பிறப்பாக்கி (Kirloskar 62.5 KV) ஒரு டிமோ டாடா லொறி மற்றும் ஒரு லங்கா அசோக் லேலான்ட் போக்குவரத்துப் பேருந்து என்பவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய அனைத்து சொத்துக்களும் சர்வதேச நன்கொடை நிதிகளால் நிதியளிக்கப்பட்டவை என்பதுடன் கிளிநொச்சி சமூகத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட தனிப்பட்டவர்களுக்காக அர்த்தமுள்ள வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு மட்டும் உபயோகிக்கப்பட வேண்டிய பொதுப் பொருட்களாக கவனத்தில் கொள்ளப்படும். நன்கொடையாக அளிக்கப்பட்ட அனைத்து பொருட்களும் வற் (VAT Free) வரியின்றி இலவசமாக கொள்வனவு செய்யப்பட்டவை என்பதற்கான விசேட கவனம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். விற்பனை, உரிமை மாற்றம் அல்லது சொத்துக்களின் கொள்வனவு இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கணிசமான வரிக் கடப்பாட்டை ஏற்படுத்தலாம். இந்த அறிவித்தல் பற்றிய மேலதிக விசாரணைகளுக்கு 011-7391890 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

(சி-1354) **இல.134, ஜெயந்தி நகர், கிளிநொச்சி, இலங்கை**

## அறிவித்தல்
## மாநகர சபை, யாழ்ப்பாணம்

மாநகர சபைக் கட்டளைச் சட்டம் பிரிவு 129 இன்படி மாநகர சபைக்குட்பட்ட அனைத்து வரியிறுப்பாளர்களும் தங்களால் உருவாக்கப்படும் அனைத்து கழிவுகளையும் பின்வருமாறு தரம் பிரித்து மாநகர சபையிடம் ஒப்படைக்க வேண்டும். தரம் பிரிக்கப்படாத கழிவுகளை மாநகர சபை 2015.08.01 இலிருந்து பொறுப்பேற்றுக் கொள்ள மாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

| வரியிறுப்பாளர்கள் | கழிவுகளின் வகை |
|---|---|
| ● குடியிருப்புக்கள்<br>● கடைகள், அலுவலகங்கள்<br>● உணவு விடுதிகள்<br>● மரக்கறி, பழக்கடைகள்<br>● இறைச்சி, மீன், முட்டை கடைகள்<br>● தொழிற்சாலைகள்<br>● வைத்தியசாலைகள்<br>● ஏனைய நிறுவனங்கள் | ● உணவுக் கழிவு<br>● மீளப்பயன்படுத்தக்கூடிய, மீள்சுழற்சிக்குட்பட்ட கழிவுகள்<br>● ஆபத்தான கழிவுகள்<br>● மிருகங்களின் பிணங்கள், மிருகங்களின் பாகங்கள், மிருகங்களின் எரு<br>● ஆதனத்தை கூட்டும்போது பெறப்படும் கழிவுகள் |

கட்டட இடிபாடுகள், வழமைக்கு மாறாக ஏற்படும் கழிவுகள் மாநகர சபையில் கட்டணம் செலுத்தி அகற்றிக் கொள்ள வேண்டும்.

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

2015.06.23

(சி-1359)

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

### லொறி பொடி விற்பனைக்கு

எமது சங்கத்தின் லேடன் லொறியில் இருந்து கழற்றப்பட்ட நல்ல நிலையில் உள்ள லொறி பொடி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் சங்கத்தின் காரியாலய நேரத்தில் தொடர்பு கொண்டு அதனைப் பார்வையிட்டு உரிய கூறுவிலையினை 30.06.2015 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

### வெற்றுப்பொருள்/ பாவித்த ரயர் விற்பனைக்கு

எமது சங்கத்தில் வெற்றுச்சாக்கு, வெற்று உரப்பை என்பனவற்றுடன் பாவித்த லொறி ரயர்களும் விற்பனைக்கு உள்ளது. வாங்க விரும்புவோர் வெற்றுப் பொருட்களின் வகைப்படுத்தலுக்கு அமைய கூறுவிலையைக் குறிப்பிட்டு 30.06.2015 இற்கு முன் சமர்ப்பிக்கவும். பாவித்த ரயரினை காரியாலய நேரத்தில் நேரடியாகப் பார்வையிட்டு அதன் கூறுவிலையினையும் சமர்ப்பிக்கவும்.

-பொது முகாமையாளர்.

(சி-1350)

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/ Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Construction of Ambulance Park | 500.00 | 85,000.00 | 91 | 4.13 | C7 |
| Construction of Car Park | 500.00 | 75,000.00 | 91 | 3.71 | C8 |
| Renovation of OPD | 500.00 | 60,000.00 | 91 | 2.81 | C8 |
| Fixing of grab bars at Medical Ward Complex Toilets, Renovation of Paediatric Clinic, Painting of Eye Clinic & Renovation of Occupational Therapy Unit | 500.00 | 55,000.00 | 91 | 2.51 | C9 |
| Construction of Guard wall at Old Maternity Ward Complex, Aluminium Partition for Ward No 12, Aluminium Partition for EEG Unit & In front of JICA Building Toilet | 500.00 | 12,000.00 | 91 | 0.56 | C10 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 24.06.2015 up to 09.07.2015. during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 10.07.2015, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
23/06/2015.

(C-1356)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய் கூறுகிறார்...

மோசடியாளர்களை கொணட ராஜபக்ஷ முன்னணியை முற்றாக தோற்கடிக்கும் தேவை உள்ளது. ராஜபக்ஷ கும்பலையும் அவர்களுடன் நண்பர்களாக செயற்பட்ட மோசடியாளர்களை முற்றாக தோற்கடிப்பதே அனைவருக்கும் வழங்கப்படும் பொறுப்பும் சவாலுமாகும்.

ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் நாட்டை இட்டுச் சென்ற இருண்ட திசையை நாட்டின் தற்போதைய அரசாங்கம் மாற்றியுள்ளது.

இவ்வாறு விரைவான வேகத்தில் இது நடக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியோ, ஏனைய அரசியல் கொள்கைகளை கொண்டுள்ளவர்களோ எண்ணியிருக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் புத்திசாலித்தனம் மற்றும் ஏனைய மாற்று அரசியல் சக்திகளின் பங்களிப்பு காரணமாக ராஜபக்ஷ ஆட்சியை முடிவுக்கு கொண்டு முடிந்தது. இந்த வெற்றியை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும்.

ஆட்சி அதிகாரம் கைவிட்டு போய் 24 மணிநேரத்திற்குள் முன்னாள் ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து பதவிகளையும் இழந்தார்.

எமது கட்சியின் தலைவருக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம் இதுதான் எனவும் அமைச்சர் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டுள்ளார். (எ-11)

**English for you**

மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோருக்கான
-Group Class
-Personal Class

Student Success Centre
0776169470 (C-1366)

**பிரயோக ஆங்கிலம்**
**PRACTICAL ENGLISH**

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
வகுப்பிடம் : யாழ்நகர், திருநெலவேலி
விபரங்களுக்கு : 077 3212711
(இ)

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

**எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...**

STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA

**கனடா** Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

**Student VISA** — UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia

FREE Assessment

SIKARAM Education Abroad Work Migration & Visa Solutions

ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள

www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11
(C-1365)

**மில் வேலை தெரிந்தவர் உடன் தேவை**

நெல்லியடியில் கிரைன்டிங் மில் ஒனறுக்கு வேலை தெரிந்தவர் அல்லது பழக விரும்புபவர் தேவை.
(C-1363) தொடர்பு : 077 936 1356

**முங்கோடை முருகன் ஆலயம்**

வளர்ச்சி நிதிக்கு 24.06.2015 அன்று குலுக்குவதாக இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 01.08.2015 அன்று குலுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

இப்படிக்கு : ஆலய நிர்வாகத்தினர்
கரவெட்டி தெற்கு
(C-1362)

**வேலைவாய்ப்பு** "world's greatest opportunity"

சாதாரண கல்வி கற்று வேலையின்றி தவிப்போருக்கு அரியசந்தர்ப்பம்.
இலங்கையில் இயங்கிவரும் கனேடியன் நிறுவனத்துக்கு (Granton International) வேலையாட்கள் தேவை.
நீங்கள் துடிப்பானவர்களும், விடாமுயற்சியும் உடையவராயின் உங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

- தகுந்த பயிற்சி வழங்கப்பட்டு உள்வாங்கப்படுவர்.
- பயிற்சிக் காலத்தில் Fixed Income Package வழங்கப்படும் (ஆரம்பம் 12,000/=, பயிற்சி முடிந்தவுடன் 38,000/= - 58,000/= வரை)
- பயிற்சி: Administrator, முகாமைத்துவம், ஆளணி முகாமைத்துவம், Business Management
- ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.
- பயிற்சிக் காலத்தில் போக்குவரத்து வசதி அற்றோருக்கு தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

(931)

தொடர்பு:- 077 999 4807/ 077 445 8134
"we are the world greatest opportunity company" "possibillity unlimite

## தேவையற்ற...

பாடசாலை நேரத்தில் பாடசாலை சீருடையுடன் தேவையற்ற முறையில் வீதியில் திரிந்தால் அல்லது சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டால் உடனடியாக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு 14 நாட்களோ அதற்கு அதிகமாகவோ தண்டனை அனுபவிக்க வேண்டும்.

அத்துடன் பாடசாலை வளாகத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும் பாபுள், வெற்றிலை, சிகரட், பியர் போன்ற போதைப் பொருட்களை பாடசாலை மாணவர்கள் வைத்திருப்பின் அதற்கான நடவடிக்கையும் உடனடியாகவே எடுக்கப்படும்.

தெரியாதவர்களுடன் தொலைபேசியில் உரையாடுதல், அவர்கள் தரும் பொருட்களை பெறுதல் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

மேலும் விளையாட்டு நிகழ்வின் போது பியர் உள்ளிட்ட மது வகைகள் மற்றும் சிகரட் ஆகிய எவையும் நிகழ்விடத்தற்குள் கொண்டுவரக் கூடாது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் கைது செய்யப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## ஜனாதிபதி...

திப்பில் உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, நாட்டில் இருந்த பாதுகாப்பு குறைந்து வருகிறது.

அடுத்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்துள்ளார்.

100 நாட்களில் புதிய நாட்டை தேடிப் போய் இருந்த நாடும் இல்லாது போகும் நிலை ஏற்பட்டுள்ளது. நிமிடத்திற்கு நிமிடம் இந்த நாடு தோல்வியடைந்த நாடாக மாறி வருகிறது எனவும் விமல் வீரவன்ஸ கூறியுள்ளார். (எ-11)

## மைத்திரியை...

யுவதிகளின் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தற்போது மீள முடியாத அளவுக்கு வீழ்ந்து போயுள்ளது. எனினும் ஜனாதிபதி அந்த முன்னணியை வெற்றியடைய செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு வகையில் சவாலை ஏற்படுத்துவதாகும். நமக்கு நாமே குழியை வெட்டிக்கொண்ட போன்ற செயலே நடக்கும்.

மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து போ[illegible] கும்பலுக்கு மீண்டும் மக்கள் ஆணை[illegible] பெற முடியாது. அவர்களை ஒன்றிணைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்தால், அப்போதுதான் சிக்கல் தோன்றும்.

அவர்களை ஒன்றிணைக்கும் விடயத்தை காரணமாக கொண்டே ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைத்து வருகிறார். அதனை ஜனாதிபதி பகிரங்கமாக கூறி யுள்ளதால், நாம் செய்த முட்டாள்தனம் உறுதியாகி யுள்ளது என்றும் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (செ-11)

**டுபாயில் வேலைவாய்ப்பு**



டுபாய் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் பின்வரும் வேலைத்தளங்களுக்கு 100 சுத்திகரிப்பாளர்கள் உடன் தேவை.

- எரிபொருள் நிரப்பு நிலையம்
- நவீன சந்தை
- இராணுவ முகாம்

அடிப்படைச் சம்பளம்: 900 Dhs (1 UAE Dhs = 36 SL. Rs)

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:-
1. தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
2. ஒப்பந்த காலம் 2 வருடங்கள். புதுப்பிக்கத்தக்கதாக இருக்கும்.
3. வேலைநேரம் 08 மணித்தியாலங்கள். வாரத்தில் 06 நாட்கள்.
4. ஒப்பந்தகாலம் முடிவடைந்த பின்னர் விமான ரிக்கட் வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
5. பிற அனைத்து விதிமுறைகளும் UAE தொழிலாளர் சட்டத்தின்படி வழங்கப்படும்.

இடம்:- Green Grass Hotel
இல.33, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 27.06.2015 சனிக்கிழமை
நேரம்:- காலை 9.00 - மாலை 5.30 வரை
ஆவணங்கள்:- சுயவிபரக்கோவை, கடவுச்சீட்டு, புகைப்படம், கல்வி மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

Capital Recruitment International (PVT) LTD
No.130, 3/1, 3rd Floor, Grand pass Road, Colombo-14.
Email:-info@capitalri.com, capital colombo@gmail.com
(C-1360) Hotline:-075 750 4201 LLNo.2248

**றோயலின் கண்ணீர்க் காணிக்கை**



திருமதி
**சலசாதேவி அரியபுத்திரன்**

எமது கல்வி நிலையத்தின் தமிழ் ஆசிரியர்
திரு.அ.லிங்கராஜ்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி சலசாதேவி அரியபுத்திரன்
அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து
ஆழ்ந்த துயரடைகிறோம்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள் – றோயல் அக்கடமி
யாழ்நகர் – நல்லூர்
(C-1364) 23.06.2015

**விஸ்டம்**
**தொழில் நுட்பக் கல்லூரி**
இல475 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் (வண்ணார் பண்ணை சிவன்கோவிலடி)

வடக்கின் தலைசிறந்த தொழில்நுட்ப வளவாளர்களை ஒருங்கிணைத்து விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரியில் நடாத்தப்படும்

**A/L 2015 தொழில் நுட்ப பிரிவு**

மாணவர்களிற்கான **விசேட செயலமர்வு**

26,27.06.2015 { பொறியியல் தொழில்நுட்பம் / உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
28.06.2015 - தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்

- எதிர்பார்க்கை வினாக்களும் விடைகளும்
- அலகுரீதியான குறிப்புக்களும் விளக்கங்களும்
- மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்
- இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மாதிரி வினாத்தாளுக்கான பூரண விளக்கங்களும் விடைகளும்
- எதிர்பார்க்கை செயன்முறைகள் தொடர்பான முழுமையான விளக்கங்கள்

காலை 8.30 ஆரம்பம்

(C-1361)

முற்பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்

**கண்ணீர் அஞ்சலி**



உயர்திரு ச.சிவப்பிரகாசம்
(ஓய்வுநிலை அதிபர், மண்டைதீவு)

தலைசிறந்த தமிழ்
ஆசானும் கவிஞரும்
சமயப் பற்றாளருமாகிய
உயர்திரு ச.சிவப்பிரகாசம்
(கவிஞர் கந்தமுருகேசதாசன்)
அவர்களின் மறைவுக்கு எமது
கண்ணீர் அஞ்சலியை
காணிக்கை
ஆக்குகின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(இ)

திருமுறைக் கழகம், மண்டைதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.